123
123
4-48

குடிமைப் பயிற்சி

கைப் புத்தகம்

98
18-10-48
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MADRAS
18-10-48

HAND BOOK
FOR
CITIZENSHIP ACTIVITIES.

BY:
M. PRAKASAM, B. A., L. T.,
OSEPH'S COLLEGE, TIRUCHIRAPALLI.

குடிமைப் பயிற்சி

கைப் புத்தகம்

ஆக்கியோன் :
A. D. M. பிரகாசம், பி. ஏ., எல். டி.,
அர்ச். சூசையப்பர் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

இரண்டாம் பதிப்பு :

சிட்டி அச்சகம்
திருச்சிராப்பள்ளி

86955

முன்னுரை

நாம் இப்பொழுது சுதந்தர மக்கள். சுதந்தர மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் நமது கடமைகள் என்ன, நமது உரிமைகள் என்ன என்பதை அறிந்திருக்க வேண்டும்.

நம் சிறுவர்கள் பிற்காலத்தில் சிறந்து விளங்குவதற்கு வேண்டிய பயிற்சியை யளித்து, சமூகத்தையும், நாட்டையும் முன்னேற்ற மடையும்படி செய்யும் பொருட்டு, நமது கல்வி இலாகா அதிகாரிகள் குடிமைப் பயிற்சி என்று பாடத்திட்டத்தில் ஒரு பாடத்தை வகுத்து, அப்பயிற்சியை எல்லா மாணவர்களும் அடைவதற்காக ஏற்பாடு களையும் செய்திருக்கின்றனர். இது வரவேற்கத் தகுந்ததே.

பல ஆசிரியர்கள் குடிமைப் பயிற்சி சம்பந்தமாய் ஒரு புத்தகம் இன்றியமையாதது என்று பலமுறை வற்புறுத்தித் தெரிவித்தார்கள். அவர்கள் விருப்பத்திற் கிணங்க இச்சிறு புத்தகத்தை எழுதியுள்ளேன். இரண்டாம் பதிப்பில் அநேக தேசிய நாட்டுப் பாடல்களும் மூன்று புதிய அத்யாயங்களும், படங்களும் சேர்க்கப் பட்டிருக்கின்றன. இப்புத்தகம் ஆசிரியர் களுக்கும் மாணவர்களுக்கும் பெரிதும் பிரயோசனமாயிருக்கும்.

இதனை விரைவில் வெளியிடுவதற்குத் துணை புரிந்த நண்பர்க்கும், சிட்டி அச்சகத் தார்க்கும் எனது நன்றி உரியதாகும்.

A. D. M. பிரகாசம்.

பொருளடக்கம்

1.	குடிமைப் பயிற்சி	...	1
2.	சுதந்திர இயக்கம்	...	8
3.	நமது மூவர்ணக்கொடி	...	15
4.	மாணவர் குடியாட்சி	...	22
5.	முடிச்சுகள்	...	25
6.	சைகை முறை	...	28
7.	முதலுதவி	...	31
8.	திசைகள் கண்டுபிடித்தல்	...	42
9.	படம் பார்த்தல்	...	44
10.	தடம் பற்றுதல்	...	47
11.	இயற்கை ஆராய்ச்சி	...	49
12.	பாடி வாழ்க்கை	...	50
13.	சாலை விதிகள்	...	54
14.	கதை நடித்தல்	...	57
15.	தேர்ச்சி சின்னங்கள்	...	59
16.	விளையாட்டுகள்	...	61
17.	சுத்தமும் சுகாதாரமும்	...	65
18.	நிகழ்ச்சி நிரல் தயாரித்தல்	...	68
19.	நண்பர் குழாம்	...	72
20.	தேசியப் பாட்டுகள்	...	73

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18.10.48
MADRAS

குடிமைப் பயிற்சி

இந்திய மக்களின் நிலை 1947 ஆகஸ்ட் 15உயிலிருந்து மாறிவிட்டது. நாம் சுதந்திரமக்கள். சுதந்திரத்துடன் நம் பொறுப்பும் கடமையும் அதிகமாகிவிட்டன. நம் சுதந்திர இந்தியாவுக்கு நாம் ஆற்றும் கடமை நற்குண நற்செய்கைகள் பொருந்திய மககளை ஏற்படுத்தலேயாகும். ஒரு நாட்டின் முன்னேற்றம் சமூக முன்னேற்றத்தை யொட்டியிருக்கிறது. மற்ற நாட்டு மக்களைக் காட்டிலும் நம் நாட்டிலுள்ள மக்கள் பொறுப்பற்றவர்களாக இருக்கின்றனர்- தங்கள் உரிமைகளைப்பற்றியே தான் பேசுகிறார்களே தவிர தங்களது கடமைகளைப் பற்றி நினைப்பதுகூடக் கிடையாது. இது வருந்தத்தக்கதாகும். இங்கிலாந்து தேசத்தை எடுத்துக்கொள்வோம். அந்நாட்டில் அரசியல் கட்சிகள் அனேகமுண்டு. சமாதான காலத்தில் ஒவ்வொரு கட்சியும் தன் இலட்சியத்தையே நிறைவேற்றப் பாடுபடும் ஆனால் 1939-ல் இரண்டாம் உலக யுத்தம் ஏற்பட்டவுடன், தங்கள் நாட்டிற்கு ஏற்படவிருக்கும் ஆபத்தை உணர்ந்தனர். எல்லாக் கட்சிகளும் தங்கள் தங்கள் இலட்சியங்களை ஒருவாறு மறந்து, ஒன்றுபட்டு ஒருமனதுடன் சண்டையில் வெற்றிபெறப் பாடுபட்டனர்.

இதற்குக்காரணம் இங்கிலாந்திலிருக்கும் ஒவ்வொரு ஆங்கிலேயனும், மக்கள் என்ற முறையில் தன் கடமையென்னவென்பதை நன்குணர்ந்திருப்பதுதான். தன் சொந்த நலனையும் கவனியாது பொது நலனுக்கு உழைப்பதே சிறந்தது என்று அறிந்திருக்கிறான். தன் உரிமை பற்றி அவனுக்குக் கவலையில்லை. ஆனால் அவன் தன் கடமையினின்று மட்டும் தவறமாட்டான். இது அந்நாட்டுப் பண்பு.

சில தினங்களுக்கு முன் இந்திய டொமினியன் சுகாதார மந்திரி ராஜகுமாரி ஏ. அமிர்தகௌரி பம்பாயிலிருந்து ஒலி பரப்பியபோது கூறிய விஷயம் நம் கவனத்துக்குரியது.

ஆசிரியர் ஆற்றும் தொழில் கண்ணியமும் பொறுப்பும் வாய்ந்தது. சமூக முன்னேற்றத்திற்கு அவர்களே வழிகாட்டியாவர். நம் சிறுவர்கள் பிற்காலத்தில் சிறந்து விளங்குவதற்குப் பயிற்சியளிப்பது அவர்கள்தான். நாட்டு முன்னேற்றத்திற்கு சமூக முன்னேற்றமும் அவசியமானதாலும், சமூக முன்னேற்றம் அதிலடங்கியுள்ள குடிமக்களைப் பொறுத்திருப்பதாலும், "குடிமைப் பயிற்சி" நம் பிள்ளைகளுக்குச் சிறுவயதிலேயே கொடுக்க வேண்டும். இதன் காரணமாகத்தான் நம் சென்னை அரசாங்கத்தாரும் குடிமைப் பயிற்சியை ஒரு கட்டாயப் பாடமாக ஏற்படுத்தியிருக்கின்றனர்.

இப்பயிற்சியை எப்படிக் கொடுக்கலாம் என்று சற்று கவனிப்போம். நாம் இவ்வுலகில் தனித்து வாழ முடியாது. குடும்பத்திலும் கிராமத்திலும், மாகாணத்திலும், தேசத்திலும், உலகத்திலுமுள்ள மற்றவர்களுடன் சேர்ந்தேதான் வாழமுடியுமே தவிர தனித்து வாழமுடியாது. அவ்வாறு வாழும்போது நம் சொற்களும் செயல்களும் மற்றவர்களைப் பாதிப்பது மாத்திரமன்றி பிறருடைய சொற்கள் செயல்களால் நாமும் பாதிக்கப்படுகின்றோம். நம் சொல்லும், செயலும் ஒழுங்கு, ஆரோக்கியம், சீரிய நிர்வாகம் இவற்றிற்கு ஏதுவாயிருப்பின் நாம் நல்ல குடிமக்கள் ஆவோம். அப்படியில்லாவிட்டால் நாம் கெட்ட குடிமக்களாவோம். நமது சொல்லும் செயலும் சமுதாயத்தின் நலனுக்கும், செல்வாக்கிற்கும், ஒழுங்கான ஆட்சிக்கும் பங்கம விளைவிக்குமானால், சமூகத்திலடங்கியுள்ள நமக்குத்தான் இழிவும், அழிவும் ஏற்படும். ஆகவே "Citizenship" என்ற பிரஜாதத்துவம் (நற்குடி மகனின் தன்மை) குடிமகனின் கடமைகள் உரிமைகள் பற்றியதாகும். உரிமை என்று கூறும்போது கடமை என்பது தொடர்கிறது. நம் மட்டிலும், சமூகத்தின் மட்டிலும், நாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் சிலவுண்டு. அக்கடமைகளை நாம் நிறைவேற்றும்போது, நமக்கு உரித்தான உரிமைகளும் கிடைக்கின்றன. நாம் செய்யும் நற்காரியத்தையும் தீய காரியத்தையும் அநேகர் பின்பற்றுகின்றனர். ஆதலால்

நம் சொற்களும் செய்கைகளும் பிறருக்கு முன்மாதிரியாயிருத்தல் வேண்டும். நாம் தெருவிலே குப்பையைக் கொட்டினால் நம் அயலார்களும் அவ்வாறே செய்கின்றனர். நாம் அம்மை குத்திக்கொண்டால் பக்கத்து வீட்டிலுள்ளவர்களும் குத்திக்கொள்கிறார்கள். பொதுமக்களாகிய நாம் உத்யோகஸ்தர்களுக்கு இலஞ்சம் கொடுக்காமலிருப்போமானால் மற்றவர்களும் நம்மைப் பின்பற்றி இலஞ்சம் கொடுப்பதில்லை. இதனிமித்தம் இலஞ்சம் வாங்கும் கெட்ட பழக்கம் நாட்டில் மறைந்துவிடும்.

குடிமைத் தன்மையை நம் குழந்தைகளுக்குப் பயிற்சிப்பது முதலில் பெற்றோர்களின் கடமை. பின்பு ஆசிரியர்களின் கடமை. குடிமைத் தன்மையின் முதற்பாடம் குடும்பத்தில் தான் நம் குழந்தைகள் கற்றுக்கொள்கின்றனர். அவர்களின் குணம் உருவாக்கப்படுவது இல்லத்தில் தான். வாழ்க்கைக் கலையின் (art of living) முதற்பாடம் இங்கே தான் கற்பிக்கப்படவேண்டும் பெரியவர்களான பிறகு ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஏற்படக்கூடிய நல்வாழ்வு வாழ்வின்மை இவற்றிற்கு வித்துக்கள் குடும்பத்தில் தான் விதைக்கப்படுகின்றன.

குடும்பம் என்றால் என்ன? பெற்றோர்கள், பிள்ளைகள் அடங்கியதே குடும்பம். பிள்ளைப் பருவத்திலிருந்தே குழந்தைகளைப் பேணிக் காத்து, நல்வாழ்வுடையவர்களாக ஆக்குவது பெற்றோரின் கடமை. இதற்குப் பெற்றோர்களே நல்வாழ்வு உடையவர்களாய் இருத்தல் வேண்டும். நற்சுகம் பொருந்திய பெற்றோர்களே திடகாத்திரமான குழந்தைகளைப் பெறமுடியும். மெலிந்த நோய்வாய்ப்பட்ட அநேக குழந்தைகளைக் காட்டிலும் திடகாத்திரமான சில குழந்தைகளைப் பெறுவது நலம். வலிவற்ற மெல்லிய குழந்தைகள் சமூகத்திற்குப் பெரிய பாரமாயிருப்பார்கள். ஆகவே நற்சுகம் பொருந்தியவர்களாயிருக்கச் சூழ்நிலை முதலியவற்றை சுகாதார முறைப்படி சுத்தமாய் வைத்திருத்தல் வேண்டும். பிள்ளை பிறக்கும் காலத்தில் குழந்தையையும் தாயையும் பத்திரமாய்க் கவனித்துக் கொள்ளப் பயிற்சியும் அனுபவமும் உடைய

மருத்துவப் பெண்களை நியமிக்கவேண்டும். சுகாதார முறைப்படி கட்டப்பட்ட வீட்டில் வசிப்பதுதவிர வீட்டிலுள்ள ஒவ்வொருவரும் சுத்தமுடையவர்களாயிருத்தல் வேண்டும். தூய்மையானவன் தூய ஆடைகளைத் தரிப்பவன். தன் முன்மாதிரியாலும், உபதேசத்தாலும், தன் குழந்தைகள் மனத்தில் தூய உடலும் தூய ஆடையும் திடகாத்திரம் — இவை ஆரோக்கியத்திற்கு முக்கியம் என்ற பாடத்தைப் புகட்டவேண்டும். தெரிந்தெடுக்கப்பட்டதும் நன்ருய்ச் சமைக்கப்பட்டதுமான உணவை உண்ணவேண்டும். குடும்ப சுகத்தைப்பற்றிக் குடும்பத் தலைவன் அதிகக் கவனம் செலுத்தவேண்டும். இது சம்பந்தமாய் நாம் கவனிக்கவேண்டிய சில காரியங்கள் உண்டு. நம் வீட்டைச் சுத்தமாய் வைத்துக்கொள்வதாலேயே வியாதியை அகற்றமுடியாது. நம்மைச்சுற்றியுள்ளவர்களும் சுத்தமாயிருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டும். நற்சுகமுள்ளவர்களாயிருக்கவும் நம் குழந்தைகள் திடகாத்திரமுடையவர்களாயிருக்கவும் ஓய்வு நேரமும் விளையாட்டும் அவசியம்.

குழந்தைகளைப்பிற்கால ஏந்தல்களாக்கும் பொறுப்பு தகப்பனைக்காட்டிலும் தாய்க்குத்தான் அதிகம். ஒரு குயவன் தன் சுழலும் சக்கரத்தில் மெல்லிய களிமண்ணை வைத்து, சக்கரத்தைச்சுற்றித்தன் கையினுல் பல உருவங்களையுடைய பாண்டங்களைச் செய்கிருன். அதுபோல தாயும் தன் இல்லத்திலுள்ள இளம் குழந்தைகளை நற்குணங்களோடு நற்புத்தி புகட்டி நல்வழியில் திருப்பப் பயிற்சியளிக்கவேண்டும். கிரீஸ் தேசத்தில் கிராக்கை என்ற அதிபதி அதிக கொடுமையாய்த் தன் குடிகளை நடத்திவந்தான். அவனது அட்டுழியங்களைக் கண்ட மக்கள் அவனைச் சபித்தனர். கிராக்கையின் கொடுமைக்கும் குரூரத் தன்மைக்கும் காரணம் யார்? அவன் தாயான கோர்னிலியா என்பவள்தான் என்றனர், குடிமக்கள். சிறுவயதில் அவனை நற்குணங்களையுடையவனுய் உருவாக்கியிருப்பாளேயானுல் கிராக்கை குரூரத்தன்மையுடையவனுய் இருந்திருக்க முடியாது. ஆகவே கோர்னிலியா இறந்தவுடன், குரூரத்தன்மை வாய்ந்த மகனைப்

பெற்ற அவள்மேல் தங்கள் பழியைத் தீர்த்துக்கொள்ள, அவளது சமாதியின்மேல் "கிராக்கையின் தாய்" என்ற இரண்டு பதங்களை எழுதிவைத்தனர். சிவாஜியின் சிறந்த குணத்திற்கும் சீரிய வாழ்க்கைக்கும் காரணம் அவர் தாயான ஜீஜீபாய் என்பவளே. சிவாஜி சிறுவனாயிருக்கும்போது எப்பொழுதும் வீரிய மொழிகளையும், சீரிய மொழிகளையும் புகட்டி சிவாஜியை வீரமும் தர்ம சிந்தனையும் பொருந்திய தலைவனாக்கினாள். காந்திஜியும் தன் சுய சரிதையில் "நான் பெற்றிருக்கும் நற்குணங்களுக்கு என் தாய்தான் காரணம்" என்றார். ஆகவே குழந்தைகளைப் பிற்காலத்திய சிறந்த குடிமகளாக்கும் கடமை தாயினுடையதேயாகும்.

கல்வி சம்பந்தமாயும், நீதிநூல் சம்பந்தமாயும், பெற்றோர்களின் பொறுப்பென்ன? கல்வியின் நோக்கம் மனத்தை பயிற்றுவித்து, பின் அதனால் பெற்ற அறிவை மனதில் நிறுத்துதலும் பிற்கால வாழ்வில் ஒருவன் செய்யவேண்டிய கடமைகளையெல்லாம் சரிவர நிறைவேற்றுவதற்கான போதிய ஆற்றலைப் பெறுவதும், பிற்காலத்தில் ஏற்படும் கஷ்டமான பிரச்னைகளைத் திருப்திகரமான முறையில் சமாளிப்பதற்கு வேண்டிய ஆற்றலையும், அறிவையும் அடைவதுமேயாகும். ஒவ்வொரு குடிமகனுக்கும் கல்வி அதிக அவசியம். மக்களுக்குக் கல்வியறிவையூட்டுவது பெற்றோர்களின் முக்கியக் கடமை. இந்தப் பெரிய உத்திரவாதத்தைப் பெற்றோர்கள் மறந்து போவதால்தான், நற்குடிமக்களில்லாமல் நம் சமூகம் சீர்கேடாகிறது. ஆண் குழந்தைகளை வயல்களில் வேலை செய்வதற்கும் கால்நடைகளை மேய்ப்பதற்கும் அனுப்பி அவர்கள் காலத்தை வீணாக்குகின்றனர். பெண் குழந்தைகளை மாவரைக்கவும் இதர வேலைகளுக்கும் அனுப்பி அவர்கள் படிப்பைக் கெடுக்கின்றனர். இக்குழந்தைகள் நாளாவட்டத்தில் அறிவில்லாதவர்களாக ஆகிவிடுகின்றனர். சிறுமிகள் பிற்காலத்தில் அனுபவமும் சிக்கனமும் இல்லாத மனைவிகளாகித் தங்கள் குடும்பத்தை நடத்த முடியாமலும் குழந்தைகளை நன் முறையில் பயிற்றுவிக்க முடியாமலும் தவிக்கின்றனர். இத்தகைய குறை

களைப்போக்க, சமூகம் நமக்குப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது. இப்பள்ளிக் கூடங்களில் போதிய கல்வியைப்புகட்ட ஆசிரியர்கள் இருக்கின்றனர். பெற்றோர்கள் தங்கள் கடமையை யுணர்ந்து குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பவேண்டும். இதுவே பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கும், தங்களுக்குப்பின் வரக்கூடிய தலைமுறைக்கும் செய்ய வேண்டிய கடமை.

நீதி நூல்:- குழந்தைகளுக்குக் கல்வி புகட்டும் கடமையைக் காட்டிலும் அவர்களை நல்லொழுக்கமுடையவர்களாகப் பயிற்றுவிப்பது, பெற்றோரின் முக்கிய கடமை. சகலவிதமான நற்பழக்கங்களும், நற்குணமும் ஒருவனின் சொல்லுக்கும் செய்கைக்கும் ஆதாரமென்பதை நாம் மறக்கக்கூடாது. அதே மாதிரி ஒரு சமூகத்தின் தூய்மை அச்சமூகத்தில் உள்ள ஒவ்வொரு அங்கத்தினனின் குணத்தையொட்டியிருக்கின்றது. நாம பெற்றுள்ள நற்குணமோ தீயகுணமோ நமது குழந்தைப் பருவத்திலிருந்து உருவாக்கப்படுகின்றது. (6-வது வயதிலிருந்து) அதற்குப் பின் குழந்தையின் வளர்ச்சி, அதன் சூழ்விடத்தையும் சூழ்விடத்திலுள்ள பெரியோர்களின் நடத்தை, பயிற்சி இவற்றையொட்டியும் ஏற்படும். நல்லுபதேசத்தாலும் நமது முன்மாதிரியாலும் நலலொழுக்கத்தை யேற்படுத்த வேண்டும். சொல்லிக்கொடுத்தலால் நல்ல தத்துவங்களைப் பிள்ளைகளின் மனத்தில பதிய வைக்கவேண்டும். இதிலிருந்து நீதிநூல் போதனையின் அவசியம் தோன்றுகிறது. ஒவ்வொரு குடும்பத்திலுள்ள பெற்றோர்களும், பள்ளிக்கூடங்களிலுள்ள ஆசிரியர்களும் நீதிநூல் போதனையைப் பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டும் எனத் தெரிகிறது.

கீழ்க்கண்டவற்றைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

1. அடக்க முடியாத கோபத்தாலும், தகாத சொற்களைப் பேசுவதினாலும் அதிகமாய் ஏற்படும் சண்டைகள் பழிகள்.

2. பொய் பேசுவதினாலும், சுயமரியாதையின்மையாலும் ஏற்படும் தகராறுகளினால் நீதி மன்றங்களுக்குச் செல்லுவதால் ஏற்படும் செலவு.

3. தகாத பழக்கங்களினால் உண்டாகும் பணச் செலவு.

நீதிநூல் பாடம் மதக் கொள்கைகளை அடிப்படையாய்க் கொண்டிருக்க வேண்டும். நல்ல குடிமகன் தன் குழந்தைகளை அவர்கள் முன்னோர்கள் அனுசரித்துவந்த மதாசாரத்தில் நடத்துவான். போதனையைவிட சாதனை மேலானது. ஆதலால் நாம் போதிப்பதொன்று செய்வதொன்றாக இருக்கக்கூடாது. பெரியவர்கள் பொய் பேசுவதையும், இலஞ்சம் கொடுப்பதையும், சண்டை சச்சரவு செய்துகொள்வதையும் பார்க்கும் குழந்தைகள் அவ்வித துர்ப்பழக்கங்களில் ஈடுபடலாம்.

இனிப் பெண்களின் கடமை, உரிமைபற்றிச் சில வார்த்தைகள் கூறலாம். குடும்பப் பொறுப்பு முழுமையும் பெண்களைச் சார்ந்தது. அவர்கள் வீட்டிற்கு எசமானிகள். ஆகவே பணம் (செலவு செய்யும் உரிமை) அவர்களிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். (பெண்ணை இல்லத் திருமகள் என்றும் அழைப்பார்கள்.)

1. வீட்டிற்கு எசமானி வீட்டின் சுத்தம், ஒழுங்கு இவற்றிற்கு காரணமானவள். கஷ்டப்பட்டு வேலை செய்வதும் வீட்டையும் சுற்றுப்புறத்தையும் ஒழுங்காய் வைத்திருப்பதும் பெண்களின் கடமை.

2. பெண்களின் உதவியின்றி நாம் இல்லங்களை அமைத்து நடத்த முடியாது.

ஏன் பெண்களிடம் பணம் முதலியவற்றை ஒப்படைத்தல் வேண்டும்?—சுவையான பதார்த்தங்களைச் சமைத்துப் பரிமாறவும், குடும்பத்திற்கு வேண்டிய ஆடைகளை வாங்கவும பணம் தேவை. குழந்தைகளை ஈன்று சுகாதார முறையில் காப்பாற்றுவது அவர்களின் பொறுப்பு. சிறுவர்களுக்கு இளமையிலேயே கல்வி,

நீதிநூல் புகட்டும் பொறுப்பு தாய்மார்களுடையதாகும். நம் புராதன பழக்க வழக்கங்களைப் பாதுகாப்பவர்கள் பெண்களே. வீட்டிலுள்ள எல்லோரின் நலமும், மகிழ்ச்சியும் பெண்களைப் பொறுத்தே யிருக்கின்றது.

மேற்கூறியவற்றிலிருந்து பெண்களை நாம் (ஆண்கள்) கௌரவமாய் நடத்த வேண்டுமென்று ஏற்படுகிறது. கெட்ட எண்ண முடையவனே பெண்களைக் கேவலமாகக் கருதுவான்.

ஒரு நாட்டில் குடிமைத் தன்மை எவ்வளவு தூரம் ஊன்றியிருக்கிறது என்று பார்க்க அந்நாட்டிலுள்ள பெண்களை, ஆண்கள் எவ்வாறு மதித்து நடத்துகிறார்கள் என்பதிலிருந்து தெரிந்துகொள்ளலாம். கணவன் மனைவியை மரியாதையுடன் நடத்தல் வேண்டும். இப்படிச் செய்தால் குடும்பத்திலுள்ள மற்ற முதியோர்களும் அவர்கள் கடமைகளைச் செய்வார்கள்.

பெண்கள் தங்களுக்குரிய பொறுப்புவாய்ந்த கடமைகளை நிறைவேற்ற, அவர்களுக்குச் சிறுவயதிலிருந்தே கல்வியறிவைப் புகட்ட வேண்டும். கல்வி பயின்ற தாய்மார்களே, தங்கள் பெண்மக்களை நன்றாகப் பயிற்றுவித்து, அவர்கள் பிற்காலத்தில் வகிக்கும் மனைவி, தாய்மார் பதவிகளுக்கு தயார் செய்ய முடியும். தேக ஆரோக்யம், மனத்திருப்தி, நல்லொழுக்கம் உடைய குடும்பத்தில் தான் மகிழ்ச்சி நிலவும். பெற்றோர்களிடம் காணும் குடிமைத் தன்மைதான் சமூகத்தில் ஆனந்தம், ஆரோக்யம், செல்வாக்கு இவற்றை யுண்டாக்குகின்றது. இவ்வித சூழ்நிலையில் வளரும் குழந்தைகள் நாளாவட்டத்தில் நல்ல குடிமக்களாவார்கள்.

சுதந்திர இயக்கம்

வியாபாரத்தை நாடி வந்த ஆங்கிலேயர்கள், வியாபாரத்தைப் பெருக்கி, இந்தியாவில் வஞ்சனை, சூது, கொடுமை, துரோகம் முதலியன செய்து, சாம்ராஜ்யம் ஒன்றையும் நிறுவினர். பண்டைக் காலத்திலிருந்தே பாலும்,

தேனும் தந்த பூமி வாடி வதங்கி பரம தரித்திர நிலையை அடைந்தது. விவசாயமும், வியாபாரமும், கைத்தொழிலும் குன்றின. மக்கள் சுதந்திரத்தை இழந்து அடிமைகளாயினர்.

1857-ம் வருடம் இந்த அநியாய ஆங்கில ஆட்சியைத் தொலைக்க இந்திய போர்வீரர்கள் கொதித்து எழுந்தனர். சுதேச மன்னர்கள் சிலரும் அவர்களுடன் சேர்ந்தனர். மகாராஷ்டிரர்களின் தலைவனான நானாபத்னாவிஸ் டில்லியிலிருந்து பகதூர்ஷா, ஜான்ஸி நாட்டின் தலைவி ராணி லக்ஷ்மி பாய், தாந்தியாடோபே போன்றவர்கள் போர்க்கோலம் பூண்டு ஆங்கில ஆட்சியைக் குலைத்து "குவலயம் மெச்ச சுதந்திரமாக வாழ்வோம்" என்று வீறுபேசிப் போர் தொடுத்தனர். ஆனால் பல சுதேச மன்னர்களின் துரோகத்தால் ஆங்கிலேயருக்கு வெற்றி கிடைத்தது. இப்புரட்சியை நாம் "முதல் இந்திய சுதந்திரப் போர்' எனலாம். அன்று முதல் சுதந்திர உணர்ச்சி நம் நாட்டவரிடம் வலுத்தது. இப்புரட்சிகுப் பின் கம்பெனியாட்சி ஒழிந்தது. ஆங்கில அரசரின் ஆட்சி தொடங்கியது. அன்னிய ஆட்சியை ஒழிக்க முயற்சிகள் செய்யப்பட்டன.

காங்கிரஸ் உதயம்

1880-ம் ஆண்டில் மறுபடியும் மக்கள் கலகத்திற்கு வேலைகள் நடைபெற்றன நாட்டில் ஏற்பட்ட இரகசிய இயக்கம் அபாயமானதென்று அறிந்து அதைத் தடுக்க ஆங்கில உத்தியோகஸ்தனான அலன் ஆக்டேவோ ஹ்யூம் வைஸ்ராய் டப்ரினிடம் கலந்தாலோசித்து தேசத்தின் கலக மனப்போக்கினை வேறு துறையில் திருப்புவதற்காக தேச மகாசபையை நிறுவ ஏற்பாடு செய்தார். பம்பாய், பூனா, வங்காளம், அலஹபாத், சென்னை முதலிய நகரங்களின் பிரதிநிதிகள் கலந்தாலோசித்து கடைசியில் 1885-ல் பம்பாயில் காங்கிரஸ் மகாசபையைக் கூட்டினர் இது தான் இப்பொழுது ' இந்திய தேசீய காங்கிரஸ்" என்று சொல்லப்படும் சுதந்திர ஸ்தாபனம். இதற்கு ஹ்யூம் என்பாரே பொதுக்காரியதரிசியாக இருந்து இருபது

வருடகாலம் வேலை பார்த்தார். அப்போது காங்கிரஸில் முக்கியமானவர்கள், ஸர். பிரோஸ்ஷா மேத்தா. கோபால கிருஷ்ண கோகலே, சுரேந்திரநாத் பானர்ஜி, சென்னை வி. கிருஷ்ணசாமி ஐயர். "நல்ல பிள்ளைகளாயிருந்து காரியத்தைச் சாதிப்போம்" என்பது இவர்களின் போக்கு. இவர்கள் காங்கிரஸ் கூடும்போது எல்லாம் ராஜ விசுவாசத் தீர்மானத்துடன் தங்கள் காரியங்களைச் செய்து வந்தனர். மக்களின் குறைகளைச் சர்க்காருக்கு எடுத்துக் கூறுதல், இந்தியர்களுக்கு சர்க்கார் உத்தியோகம் வழங்க வேண்டும் என்று வாதிப்பது போன்ற வேலையே இவர்கள் செய்தது. இவ்விதம் 1905-ம் வருடம் வரை மகா சபை நடந்து வந்தது.

திலகர் குழுவினர்

கல்கத்தாவில் 1906-ல் காங்கிரஸ் மகாசபை கூடிய போது அதற்குத் தலைமைவகித்த தேசபக்தரான தாதாபாய் நௌரோஜி, "இனி நமக்கு வேண்டியது சுயராஜ்யமே, அதைக் கிளர்ச்சி செய்து பெறுவோம்" என்று கூறினார். **லோகமான்ய பால கங்காதர திலகர், பிபின் சந்திர பாலர், லாலா லஜபதிராய் அரவிந்த கோஷ்** முதலியோர் "வெறுங் கிளர்ச்சியால் பயனில்லை, சுதேசி ஒழிப்பு முறை, தேசியக் கல்வி போன்ற முறைகளைக் கொண்டு சுதந்திரப் போர் நடத்த வேண்டும்" என்று கூறிப் பொதுமக்களையும், பாமர மக்களையும் தட்டி எழுப்பினர். தென்னாட்டினரான வ. உ. சிதம்பரம் பிள்ளையும் சுதந்திரத் தாகத்துடன் உழைத்தார். அப்போதுதான் வங்கப் பிரிவினையை கர்ஸன் செய்தார். மகமதியர் வசிக்கும் பாகம், இந்துக்கள் வசிக்கும் பாகம் என்று பிரித்தார். சுதந்திர உணர்ச்சியால் போர் ஏற்பட்டது. இதைக் கண்டு ஆங்கிலேயர் திகிலடைந்து, அடக்கு முறைகளை, அனுசரித்து மக்களை அடக்க முயன்றனர். திலகரின் குழுவினர் முன்னணியில் நின்று போராடினர்.

1907-ல் சூரத்தில் காங்கிரஸ் சபை கூடியது. தேசபக்தரிடையே இரு பிரிவுகள் ஏற்பட்டன. ஒரு பிரிவு மிதவாதிகள். மற்றொரு பிரிவு தீவிரவாதிகள். தீவிர

வாதிகளை அடக்க அரசாங்கம் முயற்சித்தது. திலகரை பர்மாவிலுள்ள மாண்டலேயில், 6 வருடம் சிறை வைத்தனர். மிதவாதிகள் அரசாங்கத்தாருடன் சேர்ந்தனர். அவர்களைத் திருப்தி செய்ய மிண்டோ மார்லி சீர்திருத்தம் 1909-ல் கொண்டுவரப்பட்டது. இந்திய அரசியலை அது சீர்திருத்தவில்லை. சுதந்திரத்திற்கு முட்டுக்கட்டையான "தனித்தொகுதி" முறையையே அது உருவாக்கியது. மிதவாதிகளே காங்கிரஸை நடத்தினரென்றாலும் "சுய ராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்" என்று திலகர் கூறிய மொழிகள் மக்களின் சுதந்திர மந்திர மாயிற்று.

ஒத்துழையாமையும் பஞ்சாப் படுகொலையும்

1914-ல் முதல் உலக யுத்தம் ஏற்பட, நாட்டின் மக்கள் ஆங்கிலேயருக்குப் பேருதவி புரிந்தனர். விடுதலை அடைந்த திலகர் அனிபெஸண்ட் அம்மையாரும் ஹோம் ரூல் கட்சியை ஏற்படுத்தி, சுயராஜ்யத்திற்குத் தீவிரக் கிளர்ச்சி செய்தனர். தீவிரவாதிகளும் மிதவாதிகளும் இப்போது ஒன்றுபட்டு 'சுயராஜ்யம் வேண்டும்' என்று கூறினர். சண்டையில் இந்தியா புரிந்த உதவியையும் மறந்து, இந்தியாவிற்குப் படிப்படியாய்ப் பொறுப்பாட்சி வழங்கப்படும் என்று மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தை 1917-ல் வெளியிட்டனர். நாட்டில் சுதந்திர உணர்ச்சி வளர்வதைப் பார்த்து ஆங்கிலேயர் 1918-ல் ரௌலட் சட்டம் இயற்றினர் இந்தியர் ஆத்திரமடைந்தனர். மக்கள் ஆத்திரத்தை நலவழியில் திருப்பும் பொருட்டு 1919-ம் ஆண்டு ஏப்ரல் 6-ல் காந்திஜியால் ஒத்துழையாமை வாரம் வகுக்கப்பட்டு தேசமெங்கும் இவ்வாரம் கொண்டாடப்பட்டது. இது பிரிட்டிஷாருக்கு விரோதமான கிளர்ச்சி என்று எண்ணிய பஞ்சாப் கவர்னர் காந்தியை சிறைப்படுத்தினார். இதைக்கண்ட மக்கள் கொதித்தெழுந்தனர். பஞ்சாபில் இராணுவ ஆட்சி ஏற்பட்டது. அமிர்தசரஸில் ஜலியன்வாலாபாக் தோட்டத்தில் சர்க்கார் படுகொலை நடத்தினர். இக்கோரச் செயலில், ஜெனரல் டயர் பெரும் பங்கு எடுத்துக்கொண்டார். இச்சமயம் மகமதியரின் புண்ணிய ஸ்தலங்கள்

ஐரோப்பியர்களால் பிடித்துக்கொள்ளப்பட்டன. ஆனால் மகமதியர்களின் சமூகம் பரபரப்படைந்தது. இதனிமித்தமும், பஞ்சாப் படுகொலை காரணமாயும், சுயராஜ்யம் பெறவும், காந்தி அடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தார்.

சட்டசபை, பள்ளிக்கூடம், அந்நிய நாட்டுத் துணி முதலியவை ஒழிப்பு முறை செய்யப்பட்டன. கதர் உற்பத்தி, தீண்டாமை ஒழிப்பு, ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமை, மதுவிலக்கு, முதலியவை இந்த இயக்கத்தில் முக்கிய அம்சங்களாகும். இதில் சம்பந்தப்பட்டவர்களை ஆயிரக்கணக்கில் சிறை செய்தனர். காந்தியடிகளும் 6 வருடம் சிறையில் இருக்க வேண்டியதாயிற்று.

இப்படி இருக்கையில் சுயநலக்காரர்கள் சிலர் சட்டசபையில் புகுந்து ஆங்கிலேயரை ஆதரித்தனர். இதைக் கண்ட பண்டித மோதிலால் நேருவும், C. R. தாஸும் சேர்ந்து சுயராஜ்யக் கட்சியை ஏற்படுத்தி, எங்கும் சட்டசபைகளில் புகுந்து ஆங்கிலேயருடன் தங்கள் இலட்சியத்திற்கு வாதாடினர். இந்தியர்களைச் சாந்தப்படுத்த சீர்திருத்தக் கமிஷன் ஒன்றை சைமன் தலைமையில் அனுப்பினர். அக்கமிஷனை இந்தியர் மறுத்தனர்.

காந்தியடிகளின் போராட்டம்

1928-ம் வருடம் மோதிலால் நேருவின் தலைமையில் கூடிய மகாசபை குடியேற்ற நாட்டு அந்தஸ்தை 1929 டிசம்பர் 31-ம் தேதிக்குள் கொடுக்காவிடில் "பரிபூரண சுயராஜ்யம்" நாட்டின் இலட்சியம் ஆகிவிடும் என்று திட்டம் வகுத்து அரசாங்கத்திற்கு தெரிவித்தது. அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லை. 1929-ல் காங்கிரஸ் மகாசபை ஜவஹர்லால் தலைமையில் கூடி 'பரிபூரண சுயராஜ்யம் எங்கள் லட்சியம்' என்று முடிவு செய்தது. இதை அடைய 1930-ம் வருடம் சட்ட மறுப்புப் போர் தொடங்குவதாய் காந்தி வைஸ்ராய்க்கு கடிதம் எழுதினார். பலனில்லை. மார்ச் 12-ம் தேதி 1930-ல் தண்டியில் உப்பு மறியல் செய்ய காந்தி தண்டிக்குப் புறப்பட்டுச் சென்றார். ஏப்ரல் 5-ல் உப்பு எடுத்தார். உப்பு மறியல்

நாடெங்கும் நடைபெற்றது. மே மாதம் 5-ல் காந்திஜி கைது செய்யப்பட்டார் பலபேர் கைது செய்யப்பட்டனர். இச்சமயம் கள்ளுக்கடை மறியல், வரி கொடாமை முதலியன செய்யப்பட்டன. அடக்குமுறைகளை அனுசரித்தனர் ஆங்கிலேயர்.

இக்குழப்பம் இந்தியாவில் நடக்கையில், லண்டனில் வட்டமேஜை மகாநாடு நடந்தது. காங்கிரஸ் பிரதிநிதி இலாமல் வட்டமேஜை மகாநாடு பயன்படாது என்று அரசியல் நிபுணர்கள் அறிந்தனர். காந்தி இர்வின் ஒப்பந்தம் 1931-ல் ஏற்பட்டு காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்தி, காங்கிரஸின் தனிப் பிரதிநிதியாய் வட்டமேஜை மகாநாட்டிற்குச் சென்றார். ஆங்கிலேயர், அங்கு வகுத்த திட்டம், இந்திய சுதந்திரத்திற்குரியது அல்ல என்று கண்டு இந்தியாவுக்குத் திரும்பினார்.

காந்தி இந்தியா வந்ததும், அவரையும், ஜவஹர் லாலையும், ஷெர்வானியையும், சர்தார் பட்டேலையும் கைது செய்தார் வைஸிராய் வெல்லிங்டன். மறுபடியும் போர் தொடங்கியது கொடிய அடக்குமுறைகள் கையாளப்பட்டன. அப்போதுகூடக் காங்கிரஸ் சபை கூடியது. விடுதலை அடைந்த காந்தியடிகள் தேசத்தின் நிலைமையை ஆராய்ந்து 1934-ல் சட்டமறுப்புப் போரை நிறுத்தினார். சர்க்கார் சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ்காரர்களுக்கு அமோக வெற்றி!

1935-ம் வருட சீர்திருத்தம்

ஆங்கிலேய சர்க்கார் 1935-ல் அரசியல் சீர்திருத்தச் சட்டம் இயற்றினர். சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் கலந்துகொண்டது. 8 மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபைகள் ஏற்பட்டன. 1939-ல் இரண்டாம் உலகப் போர் தொடங்கியது. ஆங்கில சர்க்கார் இந்தியர்களைக் கேளாமல் இந்தியாவை யுத்தத்தில் புகுத்தினதினால் 8 மாகாணக் காங்கிரஸ் மந்திரிசபைகள் ராஜிநாமா செய்தன. கவர்னருடைய ஆட்சி மாகாணங்களில் ஏற்பட்டது.

ஆகஸ்ட் புரட்சி

ஒருவருடம் தனிப்பட்ட சட்டமறுப்பு நடந்தது. அதன்பின் அனைவரும் விடுதலையடைந்தனர். 1942-ல் ஜப்பான் இந்தியாவின்மேல் படையெடுக்கும் ஆபத்துத் தோன்றியது. ஆங்கிலேயர் இந்தியர்களைச் சாந்தப்படுத்த கிரிப்ஸை அனுப்பினர். அவர் திட்டத்தை இந்தியர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. 1941-ல் ஏற்பட்ட அட்லாண்டிக் சாசனம் அடக்கி ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் மக்களுக்கு நலன்கள் செய்து கொடுக்கப்படும் என்று கூறியது. பிரதம மந்திரி சர்ச்சில் அட்லாண்டிக் சாசனம் இந்தியாவுக்கு அல்ல என்று சொன்னார்.

மகாத்மா காந்திக்கு ஆத்திரம் ஏற்பட்டது. தேசத்தின் தவிப்பையும் துடிப்பையும் கண்டு 1924-ல் ஆகஸ்டு 7, 8 தேதிகளில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியை பம்பாயில் கூட்டுவித்து "வெளியேறுக" என்ற தீர்மானத்தை நிறைவேற்றினார். வெளியேருவிடில் சட்டமறுப்பு ஆரம்பிக்கவேண்டும் என்றும் சொன்னார். காரியக்கமிட்டியாரையும் காந்தியையும் கைதுசெய்தனர். இன்னும் அநேகரைச் சிறை செய்தனர். மிருகத்தன்மை வாய்ந்த பலாத்காரத்தில் அதிகாரிகள் இறங்கினர். இதைககண்டு மக்களும், சர்க்காருக்கு எதிராகப் பலாத்காரம் செய்தனர். 1943-ல் காந்தி 21 நாள் உபவாசம் செய்தார். 1944-ல் காந்தி நோயுற்றார். சர்க்கார் விடுதலை செய்தனர். வைஸ்ராய் லின்லித்கோவும் வேவலும் காந்தியின் சமரசத் திட்டத்தை ஏற்கவில்லை. இதன் பின் காந்தி, ஜின்னாவிடம் சென்று, "இரண்டு சகோதரர்கள் போல இந்த நாட்டைப் பிரித்துக்கொண்டு இருக்கலாமென்று" கூறினார். ஜின்னா இணங்கவில்லை. சிம்லாவில் இதற்காக கூட்டிய மகாநாடு முறிந்தது. 1945-ல் இங்கிலாந்தில் நடந்த பொதுமக்கள் தேர்தலில் தொழிற் கட்சி வெற்றி அடைந்து ஜூலை 27-ல் மந்திரிசபை அமைத்தது. இச்சமயம் நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் பர்மாவிலும், மலேயாவிலும் ஏற்படுத்திய தேசீய ராணுவத்தார் கைதுசெய்யப்பட்டு இந்தயாவுக்குக் கொண்டுவரப் பட்டார்கள். நேத்தாஜியும், அஸாத் இந்து சர்க்காரும், தேசீயராணுவ

மும் செய்த பெரிய செயல்களை இந்திய மக்கள் அறிந்தனர். இதனால் தேச அந்தஸ்து உயர்ந்தது.

இதை எல்லாம் பார்த்து பிரிட்டிஷ் தொழிற் கட்சியினர் இனிமேல் இந்தியர்களின் சுதந்திர உணர்ச்சியை அடக்கமுடியாது என்று கண்டு சுதந்திரம் வழங்க ஏற்பாடுகள் செய்தனர்.

பார்லிமெண்டு தூதுகோஷ்டி ஒன்று (10 பேர்) 1946 ஜனவரியில் இந்தியா வந்தனர். தலைவர்களைக் கண்டு பேசினர். பின்பு மார்ச்சு மாதம் 1946-ல் பிரிட்டிஷ் மந்திரி சபையின் பிரதிநிதிகள் வந்தனர். தலைவர்களுடன் கலந்து பேசினர். இடைக்காலச் சர்க்காரை ஏற்படுத்தவும், அரசியல் சபையை ஏற்படுத்தவும் இசைந்தனர். முகமதியர் தனி ஜாதியினர். ஆதலால் தேசத்தைப் பிரித்துத் தனியே ஒருபாகம் வேண்டுமென ஜின்னு கூறினர். பண்டித ஜவஹர்லால் நேருவின் தலைமையில இடைக்கால சர்க்கார் ஏற்பட்டது. முஸ்லீம் லீக்கினர் முதலில் சேர மறுத்து பின்பு சேர்ந்தனர். நாட்டை இரண்டாகப் பிரித்தே தீர வேண்டுமென வாதித்தனர் வேறு வழியின்றி காங்கிரஸ் பிரிவினைக்குச் சம்மதித்தது. வங்காளம் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டது. பஞ்சாபும் அதேமாதிரி பிரிக்கப்பட்டது. கிழக்கு வங்காளம், மேற்கு பஞ்சாப், சிந்து எல்லைப்புறம், பலுசிஸ்தானம், பாகிஸ்தானைச் சேர்ந்தவை. இதர பாகங்கள் இந்திய யூனியனைச் சேர்ந்தன. **1947 ஆகஸ்டு 15-ல் இந்தியாவிற்கும், பாகிஸ்தானத்திற்கும் டொமினியன் அந்தஸ்து வழங்கப்பட்டது.** இந்திய டொமினியனின் முதல் கவர்னர் ஜெனரல் மௌண்ட் பேட்டன் பிரபுவே. நம மூவர்ணத் தேசியக் கொடிக்கு வணக்கம் செய்து கவர்னர் ஜெனரல் பதவியை ஏற்றார். இவ்வாறு அஹிம்சை முறையில் இந்தியாவிற்குச் சுதந்திரம் பெற்றுத் தந்த பெருமை, காந்தியடிகளைச் சேரும்.

நமது மூவர்ணக் கொடி

கொடி என்பது ஒரு நாட்டின் குறிக்கோளையும் அதன் பண்புகளையும் புலப்படுத்துவது ஆகும். நாட்டினரது உயரிய இலட்சியங்களை எடுத்துக்காட்டுவது கொடி.

நமது கொடியின் சரித்திரம்

1908-ம் வருஷம் ஜெர்மனியிலுள்ள ஸ்டட்கார்ட் இல் அகில பொது உடமை மகாநாடு கூடியபோது தேசிய உணர்ச்சி ததும்பியிருந்த வங்காள மாது **ஸ்ரீமதி பிக்காய்ஜி ருஸ்டோம்ஜி காமா** அதில் கலந்துகொண்டு இந்தியாவின் பெருமையைப்பற்றி ஒப்பற்ற சொற்பொழிவுகளைச் செய்து, பச்சை, காவி, வெள்ளை வர்ணங்களுடைய கொடியை இந்த தேசத்தின் கொடியென்று ஏற்றினர். பச்சையில் தாமரைப் பூவும், வெள்ளை வர்ணத்தில் "வந்தேமாதரம்" என்ற சொற்களும், காவி வர்ணத்தில் சூர்யத் திரைகளும் குறிக்கப்பட்டிருந்தன.

1921-ம் வருஷம் பெஜவாடாவில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் காந்தியடிகள் தேசியக் கொடியை வழங்கினர். வெள்ளை பச்சை சிகப்பு இம்மூன்று நிறப் பட்டைகளும் ஒன்றன்கீழ் ஒன்ருக இருந்தன. அம் மூன்று பகுதியிலும் தோன்றும்படி ராட்டை அமையப் பெற்றிருந்தது. காந்தி அடிகள் முதல் சத்யாகிரகப்படை அணி வகுப்பில் இதை உயர்த்தினர். 1931-ம் வருஷம் வரை தேசியக் கொடியாயிருந்தது. 1931-ல் கொடியில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. மேலே காவி வர்ணப் பட்டையும், மத்தியில் வெள்ளைப் பட்டையும், அடியில் பச்சைப் பட்டையும் அமைக்கப்பட்டது. வெள்ளைப் பட்டையில் ராட்டை அமைக்கப்பட்டது. ராட்டை அல்லது சர்க்கா பொதுமக்களின் நலத்தைக் குறிக்கும் அடையாளம். இப்புதிய கொடி 1947 ஆகஸ்ட் 15 தேதி வரை காங்கிரஸ் கொடியாயிருந்து வந்தது. இக் கொடியினடியில் மறியல் போர்கள் நடந்தன. அனேகர் தங்கள் உயிரையும் இக்கொடியினடியில் தியாகம் செய்தனர். அக்னியைப் பொழியும் குண்டுமாரிக் கிடையிலும தடியடிகளுக் கிடையிலும் இக்கொடி வானில் பறந்தது.

1947 வருஷம் ஆகஸ்ட் 15-ம் தேதியன்று இந்தியா சுதந்திரமடைந்தது. சுதந்திர நாட்டிற்கு கொடி அவசியம். பழைய காங்கிரஸ் கொடியில் சில மாறுதல்கள் செய்தனர். சர்க்காவுக்குப் பதிலாக, சத்தியம், தர்மம்,

புண்ணியம் இவற்றைக் குறிக்கின்ற அசோக சக்கரத்தை வெள்ளை நிறப் பட்டையில் பொறித்தனர். பண்டைப் பெருமையை மறவாமல் காக்கும் கடமையும் புதிய அறிவைப் போற்றும் திறமையும் நமக்கு உண்டு என்பதை இச்சக்கரம் தெரிவிக்கின்றது. காவி வர்ணம் தைரியத்தையும் தியாகத்தையும் குறிக்கும். வெண்மை, உண்மையையும் சாந்தியையும் காட்டும். பச்சை விசுவாசத்திற்கும் பலத்திற்கும் உரியது. நம் தேசியக் கொடியைப் பற்றி ஜவஹர்லால் நேரு கூறுவதாவது:— "இது சாம்ராஜ்யத்தின் கொடியன்று. பிறநாடுகளை யாவது மக்களையாவது அடிமைப்படுத்தும் கொடியன்று. இது சுயேச்சையின் அறிகுறி. இச்சுயேச்சை நமக்கு மட்டுமன்று. இதனைப் பார்க்கும் எவருக்கும் சுயேச்சையே. இது எங்கே சென்றாலும் ஒரே சுப செய்தியையே சுமந்து செல்லும்". நமது உன்னத கொள்கைகள் யாவும் நம் கொடியில் விளங்குகின்றன. அதுவே நம் குறிக்கோள். அதுவே நம் வழிகாட்டி. அதுவே நம் உயர்நிலை. மூன்று வர்ணத்தின் எழிலும், நீலச் சக்கரத்தின் கோலமும் நமக்கு ஒற்றுமையையும் உயர்வையும் ஊக்கத்தையும் கொடுக்கும் தூண்டுகோலாக உதவுக. தேசியக் கொடியின் அளவு, நீளம் : அகலம் = 3 : 2

கொடியின் உட்கருத்து

நம் தேசம் அன்புடனும் பலத்துடனும் தைரியத்துடனும் தியாகங்களைச் செய்து முன்னேறுவதோடு, ஒரே சீராகவும், நடுநிலைமையுடனும் துரிதமாய்ச் சென்று சத்தியத்தையும், சாந்தியையும், அறத்தையும் கடைப்பிடித்தொழுக வேண்டுமென்று நமது கொடி விளக்குகின்றது.

கொடியினடியில் வாக்குறுதி எடுக்கும்போது

பள்ளிக்கூட மாணவர்கள் கைகளைக் கட்டிக்கொண்டு நின்று வாக்குறுதியைக் கொடுக்கவேண்டும்.

"I pledge allegiance to the flag of the Indian Dominion and to the Indian State for which it stands—One Nation indivisible with liberty and justice for all."

தேசியக் கொடிகளைப் பறக்க விடும்போது அனுசரிக்கவேண்டிய முறைகள் :—

சூரிய உதய முதல் சூரிய அஸ்தமனம் வரைதான் கொடியை பறக்கவிட வேண்டும். தேசிய விடுமுறை நாட்களிலும், விசேஷித்த சந்தர்ப்பங்களிலும் மாத்திரமே தேசியக் கொடியைப் பறக்கவிடலாம். கொடியை சுறுசுறுப்பாய் ஏற்றவும், மெதுவாய் இறக்கவும் தெரிந்திருக்கவேண்டும்.

"மார்ச்" செய்துகொண்டு போகும்போது தேசியக் கொடியை முதலில் வலதுபக்கம் செல்லுமாணவன் பிடித்துச் செல்லவேண்டும். மற்ற கொடிகளையும் பிடித்துக் கொண்டு போகும்போது தேசியக் கொடியை வரிசை நடுவிற்கு எதிரில் ஒருவன் பிடித்துச் செல்லவேண்டும்.

மற்ற தேசத்துக் கொடிகளையெல்லாம் ஏற்றும் போது நம் தேசியக் கொடி அக்கொடிகளுக்கு மத்தியில் இருக்கவேண்டும். அல்லாவிடில் எல்லாக் கொடிகளுக்கும் உயரத்தில் பறக்கும்படிச் செய்யவேண்டும். கொடி ஏற்றும்போது தேசியக் கொடியை முதலில் ஏற்றியும் இறக்கும்போது தேசியக் கொடியை கடைசியிலும் இறக்கவேண்டும். தேசியக் கொடிக்கு வலப்புறம் வேறு எந்தக் கொடியாவது இருக்கக்கூடாது. அதற்குமேல் வேறு எந்தக் கொடியும் பறக்கக்கூடாது.

கொடியைப் பறக்கவிடும்போது காவி வர்ணப்பட்டை மேலும், பச்சைப்பட்டை கீழும் இருத்தல்வேண்டும்.

கொடி மரத்தின் பாதியில் கொடியைப் பறக்க விடுவது துக்ககரமான செய்தியைத் தெரிவிக்கும். தேசிய துக்க சம்பவங்களுக்கு இவ்வாறு Half mast ஆக பறக்க விடலாம். கொடியை முதலில் ஏற்றும்போது கம்பத்தின் உச்சி வரை கொடியை இழுத்து ஒரு நிமிஷம் வைத்திருந்து பின்பு Half mast ஆகப் போடவேண்டும். அதே மாதிரி இறக்கும்போதும் கொடியைக் கம்பத்தின் உச்சிக்குக் கொண்டுபோய் அதன்பின் தான் கீழிறக்கவேண்டும்.

1. தேசியக் கொடிக்கு அவமரியாதை ஏற்பட அனுமதிக்காதே.

2. காவி வர்ணம் கீழிருக்கும்படித் தொங்க விடாதே.

3. வேறு எந்தக்கொடியையும் தேசியக்கொடிக்கு மேலேயோ அல்லது வலதுபுறமோ பறக்கவிடாதே.

4. கொடி தரையில் படவோ, தரையில் இழுபடவோ இல்லாமல் பார்த்துக்கொள்.

5. தேசியக் கொடிக்கு மேல் அழகுபடுத்தக் கூடியவற்றைக் கம்பத்தின் உச்சியில் வைக்காதே.

6. தேசியக் கொடியை மூடுவதற்கும் மற்ற விஷயத்திற்கும் உபயோகிக்காதே.

7. தலையணை உரையாகவோ, கைக்குட்டையாகவோ, ஆடையாகவோ, உபயோகிக்காதே.

8. படுக்கை வசமாகக் கொடியைப் பிடித்துக் கொண்டு போகாதே.

9. கொடியில் எந்தவிதமான எழுத்துக்களையும் எழுதவோ, ஒட்டவோ கூடாது.

10. வண்டிகளுக்குப் பின்னும், வண்டிகளின் உச்சி பாகத்திலும், புகைவண்டிகளிலும், படகிலும் கொடியை நீட்டிப் பிடித்துச் செல்லாதே.

சில தேசீயக் கொடிகள்

1. பிரிட்டிஷ் கொடி :—

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் தேசியக் கொடிக்கு யூனியன் ஜாக் என்று பெயர். இதில் செயிண்ட் ஜார்ஜ், செயிண்ட் ஆண்ட்ரூ, செயிண்ட் பாட்ரிக் என்ற மூன்று மகான்களுக்குரிய சிலுவைகளும் அமைந்துள்ளன.

செயிண்ட் ஜார்ஜ் இங்கிலாந்துக்கு உரியவர், அவருடைய விருது வெண்மை நிறம். செயிண்ட் ஆண்ட்ரூ ஸ்காட்லந்துக்கு உரியவர். அவருடைய விருது இளநீலம். இவ்விரண்டையும் ஒன்றாகச் சேர்த்தவர் முதலாம் ஜேம்ஸ் மன்னர். 1801-ம ஆண்டு அயர்லாந்தும் சட்ட மூலமாக கிரேட்பிரிட்டனுடன் சேர்க்கப்பட்டபொழுது அந்நாட்டு அர்ச்சியசிஷ்டவரான செயிண்ட் பாட்ரிக்கின் சிலுவையும் அதனுடன் கூட்டப்பட்டது.

இவை மூன்று சிலுவைகளையும் ஓர் இடத்தில் புதைபபது இலகுவானதன்று. இவற்றின் நிறங்கள் முற்றிலும் அழியாமல் இருக்க சிலுவைகளின் உடற்பகுதிகளில் சிகப்பு நிறத்திற்கு இரண்டு புறங்களிலும் வெண்மையைப் புகுத்தினர். அவ் வெள்ளைக் கரைகளும் அகலங்களில் வேறுபட்டன. இந்திய சுயராஜ்யம் ஏற்படுகிற வரையில் கவர்னர் ஜெனரல் இந்திய நக்ஷத்திர முறைக்குரிய (Order of the Star of India) இதன் நடுவிலே இட்டு உபயோகித்து வந்ததால் இதுவே ராணுவக் கொடியுமாகும். இக்கொடியின் பரப்பு நீலமாகவும் சிலுவைகளின் உடல் சிகப்பாகவும் அவற்றின் ஓரங்கள் வெண்மையாகவும் இருப்பது கவனிக்கத்தக்கது.

2. அமெரிக்கக் கொடி ;—

1776-ல் ஐக்கியநாடுகள் தம் சுய ஆட்சியை நிறுவின. அப்போது அந் நாடுகளின் தேசீய கொடியும் நிறுவப்பெறறது. சுயேச்சை, விளம்பரப் படுத்தப்பட்டபோது (14-ம் தேதி ஜூலை மாதம் 1777-ம் வருஷம்) காங்கிரஸ் பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியது அது சிகப்பும் வெளுப்புமாக மாறி மாறி வரும் 13 கோடுகளைக் கொண்ட ஒரு கொடியை அமெரிக்க ஐக்ய நாடுகள் தம் கொடியாகக் கொள்வதாகும். ஐக்கியத்தைக் குறிக்க, நீல நிறத்தின்மேல் 13 நக்ஷத்திரங்கள் ஒரு கொத்தாக குறிக்கப்படும். இதுவே தேசீயக் கொடியின் தொடக்கம். இதிலும் சில மாறுதல்கள் ஏற்பட்டன. அதிக நாடுகள் இவற்றுடன் சேர்ந்தன. இப்பொழுது ஐக்கியமாக உள்ள நாடுகளின் தொகை 48. இவற்றைக்

குறிக்க வரிசை ஒன்றுக்கு 8 நக்ஷத்திரங்கள் வீதம் 6 வரிசை அமைக்கப்பட்டன. 13 கோடுகள், ஆரம்பத்தில் இருந்த நாடுகளின் தொகையைக் குறித்தன. அவற்றுள் 7 சிகப்பாகவும், 6 வெண்மையாகவும் இருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டது.

3. பாக்கிஸ்தான் கொடி :—

அகில இந்தியாவில் இருந்துபிரிந்து நிற்கும் பாக்கிஸ்தானின் கொடி ஆழ்ந்த பச்சை நிறம். அதன் நீளத்தில் $\frac{1}{3}$ பகுதி அகலமுள்ள ஒரு வெள்ளைப் பகுதி இடையிலே அமைக்கப்பட்டு அதனில் பிறையின் உருவமும், நக்ஷத்திரத்தின் உருவமும் வரையப்பட்டிருக்கின்றன.

4. துருக்கியின் கொடி :—

துருக்கியின் கொடியில் பிறைச் சந்திரனையும் ஒரு நக்ஷத்திரத்தையும் காண்கிறோம். இரண்டாம் முகம்மது 1453-ல் கான்ஸ்டாண்டிநோபிளைக் கைபபற்றிய போது இக் குறிகளைத் தம் கொடிக்கு அமைத்துக் கொண்டார். இக்குறிகள் டயானு தேவதையின் அறிகுறிகள். ஆகவே அவற்றைத் தன் தேசீயக் குறிகளாகக் கொண்டிருந்த கான்ஸ்டான்டிநோபிளை மகமது கைப்பற்றியபோது தம் வெற்றிக்கு அறிகுறியாக அவற்றைத் தம் கொடியில் கொண்டார். முன்னொரு காலத்தில் மகா அலெக்ஸாண்டரின் பிதாவான பிலிப் அந்த நகரை முற்றுகை போட்டபொழுது அந் நகரவாசிகளான பிரசாண்டினர்கள் பிறைச் சந்திரனின் ஒளியால் பகைவன் வருகையை அறிந்து தப்பி ஓடினர். அதன்பொருட்டு அவர்கள் டயானு தேவதைக்கு ஓர் உருவச்சிலை எழுப்பி அவனுடைய அடையாளமான நக்ஷத்திரத்தையும் கூட்டி தம் நகரத்திற்குக் கொடியாகக் கொண்டனர். இவ்வரலாறே இவ்வடையாளங்களுக்குக் காரணம்.

5. சீனக் கொடி :—

சீனக்கொடி சிகப்பு நிறமானது. இடது பக்கத்து மூலையில் நீண்ட சதுரம் அமைந்துள்ளது. நீலமான நீண்ட சதுரத்தில் 16 முக்கோணம் வடிவங் கொண்ட ரேகைகளுடன் ஒரு வெள்ளைப் பந்து காணப்படுகிறது.

6. ஜப்பானின் கொடி :—

உதய சூரியனைக் கொண்டிருக்கிறது.

இதைத் தவிர ரஷியா, பிரான்ஸ், பர்மா முதலிய நாடுகளின் கொடியைப்பற்றிய விவரங்களை வேண்டுமானல் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கலாம்.

மாணவர் குடியாட்சி

பள்ளிக்கூடத்தை குடியரசு ஸ்தாபனம்போன்ற சுயேச்சையுடன் இலங்கும் சமூகமாகச் செய்யவேண்டும். இச்சமூகம் தலைமை ஆசிரியர், இதர ஆசிரியர்களுடைய ஆலோசனையையும் உதவியையும் பெற்று பள்ளிக்கூட நிர்வாக சம்பந்தமான வேலைகளைப் பொறுப்புடன் செய்வதற்கான பயிற்சியைக் கொடுக்கவேண்டும். மாணவர் சமூகத்திற்குக் கீழ்க்கண்ட நிர்வாக சம்பந்தமான வேலைகளைக் கொடுககலாம். பள்ளிக்கூட முழுமைக்கும் school pupil leader என்ற தலைவன் ஒருவன் அவசியம். தகுதியுள்ள ஒருவனைப் பள்ளிக்கூடத்திலுள்ள மாணவர் எல்லோரும் தேர்ந்தெடுக்கவேண்டும். இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவன் ஒரு வருடம் பதவி வகிக்கலாம். இத்தலைவன் தலைமை ஆசிரியருக்கும் ஆசிரியர் கூட்டத்திற்கும் பொறுப்பாளியாக இருந்து பள்ளிக்கூட நிர்வாக வேலைகளைத் திறமையுடனும் உற்சாகத்துடனும் செய்து பள்ளிக்கூடத்தின் கீர்த்தியைப் பெருக்குவான, எல்லா வகுப்புத் தலைவர்களும் எல்லா மாணவர்களும் பள்ளிக்கூடத் தலைவனேடு ஒத்துழைக்கவேண்டும்.

School pupil leader பள்ளிக்கூட சம்பந்தமான நிகழ்ச்சிகளில் எல்லாம் முக்கிய பங்கு எடுத்துக் கொள்வான். ஒவ்வொரு நாளும் பள்ளிக்கூட மாணவர்கள் காலையில் பரந்த இடத்தில் கூடும்போது அணிவகுத்து ஒழுங்கு படுத்தி "School Assembly" என்பதை திருப்திகரமான முறையில் நடத்தவேண்டிய பொறுப்பு **பள்ளிக்கூட மாணவத் தலைவனின்** பொறுப்பு. கொடி வணக்

கத்திலும் இத்தலைவன் தான் பெரும் பங்கு எடுத்துக் கொள்ளவேண்டும். சரியான நேரத்தில், ஒழுங்கான முறையில், குறிப்பிட்ட நிலையில், மாணவர்கள் அணி வகுத்து நிற்கின்றார்களா என்று கவனிக்கவேண்டும். தலைமை ஆசிரியருக்கும் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்யவேண்டும்.

வகுப்புத் தலைவன் :—பள்ளிக்கூடத்தில் உள்ள ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒரு தலைவன் (class pupil leader) தேர்தல் முறையில் தெரிந்தெடுக்கப்படவேண்டும். இப்படித் தெரிந்தெடுக்கப்பட்டத் தலைவன் தன்னுடைய முழு வகுப்பிற்கும் பொறுப்பாளி (1) School pupil leader உடன் ஒத்துழைக்கவேண்டும். (2) ஆசிரியர் வகுப்பிற்கு வரும் வரை வகுப்பு மாணவர்கள் அமைதியாய் இருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டும் Attendance எடுக்க வேண்டும். பாடத்திற்கு வேண்டிய உபகரணங்களைத் தயாராகக் கொண்டுவந்து வைக்கவேண்டும். பாடம் முடிந்தபின் அவைகளைத் திருப்பிக்கொடுக்கவேண்டும். மாணவரிடமிருந்து பயிற்சி நோட்டுகளைச் சேகரித்தும் நோட் புத்தகங்கள் திருத்தப்பட்ட பிறகு மாணவர்களுக்கு அவற்றைத் திருப்பிக் கொடுப்பதும் அவனது வேலை. வகுப்பு அறையில் உள்ள சாமான்கள் காணாமற் போகாமலும், உடைந்து போகாமலுமிருக்கப் பார்த்துக் கொள்ளவேண்டும். வகுப்பு அறையில் துண்டுக் காகிதங்கள், குப்பை முதலியவை இல்லாமல் சுத்தமாக வைக்கவேண்டும். (3) பள்ளிக்கூட Library-க்குச் சென்று, வாரத்திற்கு ஒருமுறை புத்தகங்களை வாங்கிக் கொண்டுவந்து கொடுத்தும், படித்து முடித்த புத்தகங்களை Librarian இடம் திருப்பிக் கொடுத்தும் உதவிசெய்தல் வேண்டும். 6 மாதத்திற்கு ஒருமுறை Library-யில் உள்ள புத்தகங்கள் எல்லாம் சரியாய் இருக்கின்றனவா என்று கணக்குப் பார்க்கும்போது Librarian-க்கு உதவி செய்யவேண்டும். (4) Dramatic Society, Debating Society இவைகளை நடத்துவதற்கும் உதவுதல் வேண்டும். பள்ளிக்கூடத் தோட்டம் ம்யூஸியம் எக்ஸிபிஷன், எக்ஸ்கர்ஷன் இவற்றை நடத்துவதற்கு வகுப்

புத் தலைவன் உதவிசெய்ய வேண்டும். தினம் நடத்தப் படும் School Assembly-க்கு தன் வகுப்பு மாணவர் எல்லோரும், சுகாதார முறைப்படி சுத்தமாகவும், ஒழுங்காகவும், குறிப்பிட்ட நேரத்தில் போய்க் கலந்துகொள்ளும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

Squad Leader :—ஒரு வகுப்பிலுள்ள 40 மாணவர்களை நான்கு Squad-களாகப் பிரிக்கவேண்டும். ஒவ்வொரு Squad-லும் 7 மாணவர்களுக்கு குறையாமலும் 10மாணவர்களுககு மேற்படாமலும் இருக்க வேண்டும் ஒவ்வொரு Squad-லும் மாணவர்கள் தங்களுக்குப் பிடித்தமான ஒருவனை Squad Leader ஆகத்தேர்ந்தெடுக்க வேண்டும். இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட Squad Leader கள் ஒரு வருடம் பதவியிலிருப்பார்கள். வகுப்பிலுள்ள ஒவ்வொரு Squad-க்கும் ஒரு வேலையைக் குறிப்பிடவேண்டும். ஒரு Squad, வகுப்பின் சுத்தத்தைக் கவனித்தல், மற்றொரு Squad வகுப்பிற்கு வேண்டிய லைப்ரெரி புத்தகம் வாங்கிக்கொண்டு வந்து தருதல், மற்றொரு Squad Teaching aids முதலியவைகளை கொண்டு வருதல் என்று வேலையைப் பங்கிட்டுக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு Squad-ன் வேலையும் மாதம் ஒருமுறை அல்லது 2 மாதத்திற்கு ஒருதரம் மாறிக்கொண்டே போகும்.

பள்ளிககூட சம்பந்தமான பொது வேலைகளைக் கவனிக்க அநேக கமிட்டிகள் இருக்கவேண்டும். ஒவ்வொரு வகுப்பும், ஒவ்வொரு Squad-லிருந்து ஒன்று அல்லது இரண்டு பேரைத் தேர்ந்தெடுத்து ஒரு கமிட்டியாக ஏற்படுத்தலாம் பத்து வகுப்புகள் உள்ள பள்ளிக்கூடத்திற்கு 10 கமிட்டிகளிருக்கும். பள்ளிக்கூட சம்பந்தமான வேலைகளைக் கவனித்துக்கொள்ளும்.

(உ-ம்) பள்ளிக்கூடத்தின் தோட்டத்தை ஒரு கமிட்டி பார்த்துக்கொள்ளலாம். Museum மற்றொரு கமிட்டி. பள்ளிக்கூடத்தின் Hall போன்ற பொது இடங்களின் சுத்தத்தைப் பற்றி மற்றொரு கமிட்டி பார்த்துக்கொள்ளலாம்.

இம்மாதிரி பொறுப்பைப் பிரித்து சிறு சிறு கூட்டத்தினருக்குக் கொடுக்கும்போது நம் சிறுவர்களை தலைமைப் பதவிக்குப் பயிற்சிக்கின்றோம். சுயநலனுக்கு உழைக்காமல் பொது நலனுக்கு உழைக்கும் பழக்கத்தை ஏற்படுத்துகின்றோம். இத்தன்மைகளே தற்கால மாணவர்களைப் பிற்காலத்துச் சிறந்த குடிமக்களாக ஆக்குகின்றன. அத்துடன் தாய்நாட்டிற்கு வேண்டிய தலைவர்களைத் (Leaders) தயாரிக்கவும் உதவுகின்றன.

முடிச்சுகள்

முடிச்சுகள் போடுவது மிகவும் சுலபமாய்த் தோன்றலாம். ஆனால் முடிகளைச் சரியாகப் போடாவிட்டால் பல விபத்துக்கள் ஏற்படும்.

முடிகளைப் போடக் கற்றுக்கொண்டு தினந்தோறும் அதில் பயிற்சி பெற வேண்டும்.

முடிகளின் லக்ஷணங்கள் :-முடிகள் சுலபமாகப் போடக் கூடியவையாய் இருத்தல் வேண்டும்.

2. முடிகள் சுலபமாக அவிழ்க்கக் கூடியதாய் இருக்க வேண்டும்.

3. முடிகள் உறுதியாக இருந்து வேண்டிய காரியங்களுக்கு உபயோகப்பட வேண்டும். முடிகள் போடப் பழகும்போது குறைந்தது ஒரு அங்குல சுற்றளவேனும் உள்ள கயிற்றை உபயோகிக்கவேண்டும். இக் கயிற்றில் இரு முனைகளையும் மெல்லிய கயிற்றினால் கெட்டியாகக் கட்டவேண்டும். கயிற்றின் நுனி பிரிந்துபோகாமல் இருப்பதற்காக நூலைச் சுற்றினால் கட்டுகளைச் சுலபமாகப் போடவும் அவிழ்க்கவும் முடியும். இதற்கு Whipping என்று பெயர்.

ரீவ் முடிச்சு (Reef knot) ஷீட் பெண்ட் (Sheet bend), க்ளோவ் ஹிட்ச் (Clove hitch). பௌ லைன் (Bow line), செம்படவன் முடிச்சு (Fisherman's knot), ஷீப் ஷாங்க்

(Sheep shank) என்கிற முடிச்சுகளைக் கட்டும் விதங்களைத் தெரிந்துகொள்.

முடிச்சுகளை எப்பொழுதும் ஒரு பெருங் கயிற்ருல் போட வேண்டும். சிறிய நூல் கயிற்ருல் போட்டால் அது தளர்ந்து அவிழ்ந்து விடுவதுவும் தவிர, முடிச்சின் தோற்றமும் மாறும். ஆனல் பெருங்கயிற்ருல் போடும் முடிச்சுகள் எப்பொழுதும் தளர்ச்சியடையாது. முடிச்சுகளின் உபயோகங்களை மாணவன் நன்கு அறிய வேண்டும்.

உதாரணமாக:—"பௌ லைன்" முடிச்சைக் கட்டத் தெரிந்தால் மட்டும் உபயோகமில்லை. மாணவன் அம் முடிச்சை தன் மீதிலும் ஏனைய மாணவர்கள் மீதும் கட்டுவதற்கும் அறிய வேண்டும்.

இனி முக்கியமான சில முடிகளைப் பார்ப்போம் :—

1. Reef knot :—நேர் கட்டு அல்லது சதுர முடி :—ஒரு கயிற்றின் இரு முனைகளையும் ஒன்று சேர்ப்பதற்கும் ஒரே பருமனுள்ள இரண்டு கயிற்றின் முனைகளையும் ஒன்று சேர்ப்பதற்கும் இம் முடிபோட வேண்டும். முக்கியமாய்க் காயங்களுக்குக் கட்டும்பொழுதும், பார்சல் கட்டும்போதும், இம்முடியை உபயோகப்படுத்த வேண்டும்.

2. Sheet bend :–மணி முடி' அல்லது துணிக்கட்டு:–ஒரே பருமன் இல்லாத இரண்டு கயிறுகளை ஒன்று சேர்க்க இம்முடியைப் போட வேண்டும். ஈரக் கயிறுகளுக்கும் நலது.

3. Bow line.—வளையக்கட்டு அல்லது வில்முடி :–மிகவும் உபயோகமான முடி. 'இதை எளிதில் தன் இடுப்பிலும், பிறர் இடுப்பிலும், அவசியமானல் ஒரே கையாலும் போடக் கற்க வேண்டும். நெருப்பு முதலிய ஆபத்துக்களில் அகப்பட்டவர்களை வெளியேற்ற இம்முடி போடவேண்டும்.

4. **முனைத்தும்பு** அல்லது **க்ளோவ் ஹிட்ச்** அல்லது **யானைக் கொளுக** (clove hitch) :–மரத்தில் மாடு முதலியன கட்டுவ



முடிச்சுகள்.

முடிச்சுகள் சம்பந்தமான குறியீடுகள்

1. சதுர முடி (Reef knot)
2. முளைத்தும்பு (Clove hitch)
3. வில் முடி (Bow line)
4. செம்படவன் முடிச்சு (Fishermen's knot)
5. ஷீப் ஷாங்க் (Sheep shank)
6. Timber Hitch
7. Chair knot
8. துணி முடிச்சு (Sheet bend)

தற்கும், மரக்கிளையில் கயிறு கட்டித் தொங்கவிடவும், கட்டுகள் ஆரம்பிக்கவும், இந்த முடியை உபயோகிக்க வேண்டும்.

5. **ஒரு சுற்றும் இரண்டு அரை முடிகளும்** :—ஒரு கயிற்றின் முனையை, ஒரு மரத்திலோ கொம்பிலோ, கட்டுவதற்கு ஏற்றது. முக்கியமாக, படகுகளைக் கரையில் உள்ள முளைகளில் கட்ட, உபயோகப்படுகிறது.

6. Fisherman's knot — **செம்படவன் முடிச்சு** :—இரண்டு நனைந்த கயிறுகளையாவது, எதிரிடையாக இருக்கப்படும் இரண்டு கயிறுகளைச் சேர்த்துக் கட்டும்பொழுதாவது இந்த முடிச்சு உபயோகமாகிறது. இதே முடிச்சை சுலபமாகவும், சீக்கிரமாகப் போடவும் போடலாம் பிரிக்கவும் பிரிக்கலாம். ஒரு நுனியை இழுத்தால், முடிச்சு விழுந்து போகும்.

Lashing என்பது போடத் தெரிய வேண்டும். Sheer Lashing: இரண்டு தடிகளை ஒன்றாகச் சேர்த்து நீளமாகக் கட்டுவதற்கு இது உதவுகின்றது. நமது மாணவர்களைப் பாடி வாழ்க்கைக்குக் கூட்டிப்போகும் சமயம், அவர்கள் முகாமில் பெரிய கொடிக்கம்பம் நாட்டி, தேசியக் கொடியைப் பறக்கவிட வேண்டியதாயிருக்கும். அப்போது $5\frac{1}{2}$ அடி நீளமுள்ள இரண்டு மூங்கில் தடிகளை ஒன்றாய் சேர்த்துக்கட்டி, கொடிக் கம்பமாகச் செய்துக் கொடி யேற்றலாம். இரண்டு கம்பங்களைச் சேர்த்துக் கட்டி உபயோகிக்கும் முடிச்சுக்கு Sheer lashing என்று பெயர்.

(2) Square Lashing
(3) Diagonal Lashing } இந்த இரண்டு முடிச்சுகளும் பாலம் கட்ட மிகவும் உபயோகமாகின்றன.

நல்ல Lashing-ன் தன்மை, கெட்டியாக, நகராமலிருப்பதேயாகும்.

முடிச்சுகள் போடக் கற்றுக் கொடுக்கும்போது அனுசரிக்க வேண்டிய குறிப்புகள் :—

18 அங்குல நீளமுள்ள கயிற்றை ஒவ்வொரு பையனிடமும் கொடுக்க வேண்டும். சதுர முடிபோன்ற

சுலபமான முடிச்சில் இருந்து ஆரம்பித்தல் அவசியம். ஒவ்வொரு பையனும் குறிப்பிட்ட ஒரு முடிச்சைப் போடட்டும். ஸ்குவாட் லீடர் தன் "ஸ்குவாட்" இல் உள்ளவர்கள் அதைச் சரியாய்ப் போடுகின்றார்களா வென்று பார்க்க வேண்டும். எவனொருவனுக்குப் போடத் தெரியவில்லையோ அவனைக் கூப்பிட்டு "ஸ்குவாட்" தலைவன் கற்றுக்கொடுக்க வேண்டும். மாணவர்கள் முடியைப் போடக் கற்றுக்கொண்ட பின் பந்தயம் மாதிரி வைத்து யார் சீக்கிரம் போடுகிறார்கள் என்று பார்க்க வேண்டும். இதன்பின் கைகளைப் பின் வைத்துக்கொண்டு முடிகளைப் போடும்படி பயிற்சிக்க வேண்டும். சில முடிகளை பிறர் கையிலும், காலிலும் இடுப்பிலும், அடி மரங்களிலும் போடக் கற்றுக்கொடுக்க வேண்டும். முடிகளைப் போடுவதில் தேர்ச்சியுண்டாக்க, விளையாட்டுகள் கொடுக்கலாம்.

சைகை முறை

இதில் ஒவ்வொரு சிறுவனும் தேர்ச்சிபெற வேண்டும். சைகை முறையினால் சிறுவர்களின் பார்வை கூர்மை ஆகும். அவர்களது கற்பனை சக்தி விருத்தி அடையும். ஞாபக சக்தி பெருகும். கவனம் ஏற்படும். உற்சாகத்தையும் இன்பத்தையும் கொடுக்கும்.

ஆங்கில பாஷையின் ஒவ்வொரு எழுத்திற்கும், எண்ணிற்கும், ஏற்ற **செமபோர்** (Semaphore) அல்லது **மோர்ஸ்** (Morse) சின்னங்களை அறிந்துகொள். அந்தச் சின்னங்கள் மூலம் செய்தி அனுப்பவும், பெற்றுக்கொள்ளவும், தேர்ச்சிபெற வேண்டும்.

சிக்நல் செய்வது இரண்டு வகையாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவை செமபோர் (கைகாட்டி) சிக்நலும், மோர்ஸ் (தந்தி) சிக்நலும் ஆகும் செமபோரில் செய்தி அனுப்புகிறவனும், எடுக்கிறவனும், ஒருவருக்கொருவர் தோற்றத்திலிருக்க வேண்டும். இதைக் கைகளாலாவது, கொடிகளாலாவது, கொடுக்கலாம். கைகளுக்கு நடுவில்

உண்டாகும் பிரத்தியேக கோணங்கள் எழுத்துக்களைக் குறிக்கின்றன. மோர்ஸில் எழுத்துக்கள் புள்ளிகளாலும், கோடுகளாலும் குறிக்கப்படுகின்றன. மோர்ஸ் முறை உலக வாழ்வில் உபயோகமுள்ளதாயும் இன்றியமையாததுமாயும் இருக்கிறது. இதைப் பகலில் கொடியினாலும் இரவில் ஊதுகுழலினாலும், வர்ண விளக்குகளினாலும் உபயோகித்து, அறியலாம்.

செமபோர் சிக்நல் முறை:—ஆங்கில எழுத்துக்களை, ஏழு வட்டங்களில் அமைத்திருக்கின்றனர். செமபோர் சின்னங்கள் ஒரு வட்டம்போல் சுற்றி வருகின்றன.

A லிருந்து G வரை முதல் வட்டம்.

H, I, K, L, M, N என்ற ஆறு எழுத்துக்கள், இரண்டாம் வட்டம்.

O, P, Q, R, S என்ற ஐந்து எழுத்துக்கள், மூன்றும் வட்டம்.

T, U, Y, Cancel என்றவை, நான்காம் வட்டம்.

எண்கள் காட்டும் அடையாளம், J அல்லது எழுத்துக்களைக் குறிக்கும் அடையாளம், V இவை ஐந்தாம் வட்டம்.

W, X என்றவை, ஆறும் வட்டம்.

Z ஏழாம் வட்டம்.

செமபோர் கொடியைக் கைகளில் நீட்டிப் பிடித்துக் கொள்ள வேண்டியது. கையும் கொடியும் ஒரே நேரிலிருக்க வேண்டியது. தயார் ஸ்தானத்திற்கு, ஒரு பதமாவது, பதங்களாவது முடிந்த பிறகுதான் கையும் கொடியும் கொண்டுவரப்பட வேண்டும். ஒரு எழுத்திலிருந்து மற்றொரு எழுத்திற்குப் பதிலாவது, சிக்நல் செய்யவேண்டிய எழுத்துக்கூட்டமாவது முடியும் வரை நிற்காமல் சிக்நல் செய்யவேண்டும். இரண்டு கைகளையும் ஒருபுறம் கொண்டுவர வேண்டுமானால் முகத்தை நேராக வைத்துக்கொண்டு, இடுப்பை மாத்திரம் திருப்பவேண்டும்.

V. E. கூப்பிடும் அடையாளம்.

K தொடங்கு. (V. E-க்கு பதில்)

Q. பொறு. (V. E-க்கு பதில்)

A. பொதுவிடை

A, R செய்தி முடிவு.

R. சரி. (A. R-க்குப் பதில்)

G. B. வந்தனம்.

A முதல் Iம் Kம் ஆன எழுத்துக்கள் 1 முதல் 9, ஐயும் O என்ற எண்களைக் குறிக்கும்.

மார்ஸ் முறையில் சுலபமாய்க் கீழ்க்கண்ட வழியில் எழுத்துக்களைக் கற்றுக்கொள்ளலாம்.

E .	T —
I . .	M — —
S . . .	O — — —
H	
A . —	N — .
U . . —	D — . .
V . . . —	B — . . .
F . . — .	L . — . .
W . — —	G — — .
Y — . — —	Y — — . —
R . — .	K — . —
P . — — .	X — . . —
C — . — .	J . — — —
Z — — . .	
1 . — — — —	6 — . . . .
2 . . — — —	7 — — . . .

3 . . . —— ——	8 —— —— —— . .
4 . . . . ——	9 —— —— —— —— .
5	10 —— —— —— ——

ஊதொலிச்சைகைகள்

——	ஜாக்கிரதை. பேசாமல் நில். அடுத்த சைகையை எதிர்பார்.
—— —— ——	முன்னே வா. அல்லது பிரிந்து செல்.
. . . . . .	எல்லாரும் வந்துநில்லுங்கள். ஒன்ருகக் கூடுங்கள்; ஒருங்கே வாருங்கள்.
. —— . —— . ——	அபாயம் தயாராயிருங்கள்; கவனிக்கவும்.
. . . ——	வகுப்புத் தலைவன் வரவேண்டும்.
. . ——	ஸ்குவாட் தலைவர்கள் வர வேண்டும்.
. ——	வகுப்பு மாணவர்கள் வந்து நில்லுங்கள்.

புள்ளி — குறுகிய ஒலியைக்காட்டும.
கோடு — நீண்ட ஒலியைக்காட்டும்.

முதலுதவி

முதல் தற்காப்பு :— ஒவ்வொரு அபாயத்தையும் தடுப்பதற்குச் சிறந்த வழி அவ்வபாயங்கள் இல்லாமற் செய்வதுதான். அஜாக்கிரதையினுல் ஒரு வீட்டில் தீ பரவச்செய்து மிகுந்த தைரியத்துடன் அத்தீயை அணைக்கப் புகுவது சிறப்பான காரியம் அல்ல. தன்னுல் இயன்ற

மட்டும் ஒவ்வொருவரும் தடுக்கத்தகுந்த முயற்சிகள் செய்யவேண்டும்.

தீப்பிடிப்பதைத் தடுக்க, கொளுத்தப்பட்ட ஒவ்வொரு தீக்குச்சியையும் எறிவதற்கு முன்பு எச்சரிக்கையாக அணைத்துஎறியவேண்டும். கெரோசின், பெட்ரோல், ஸ்பிரிட் இவைகளின் பக்கத்தில் நெருப்பை வைத்திருக்கக்கூடாது. திறந்த வெளியில் நெருப்பு மூட்டாதே. கூரை வீட்டிற்கு அருகில் நெருப்பைக் கொளுத்தாதே.

நீரில் முற்காப்பு :— நீந்துவதில் கைதேர்ந்திராவிட்டால் அதிக ஆழத்திற்குச் செல்லாதே. சோர்ந்திருக்கும் போதும், நிரையச் சாப்பிட்ட பின்னும் நீந்தப்போகாதே. நீர் இழுப்புள்ள இடங்களில் குளிக்கப் போகாதே.

அபாயங்கள் நேரிடும்பொழுது புத்தியைச் சிதற விடாமல் யுக்தமானதைத் தாமதமின்றி செய்யவேண்டியது முதன்மையானது. காலதாமதம் அநேக உயிர்ச் சேதத்திற்குக் காரணம். ஆதலால் செய்யவேண்டியதை அறிந்து, உடனே செய்யவேண்டும். நீ தனித்திருந்தால் உதவிக்காக ஓடாது; கூடிய உதவியை நீயே செய். நோயாளியை விட்டுப் போகாதே. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வைத்தியனுக்குச் செய்தியனுப்பு. சில அபாயங்கள் நேரிடும்பொழுது என்ன செய்யவேண்டுமோ, அவை இங்கே குறிக்கப்பட்டிருக்கின்றன.

நெருப்பு அபாயத்திலிருக்கும் ஜனங்களை மீட்பது:— தீப்பிடிக்கும்பொது, மக்கள் வெகுண்டு வெளிக்கிளம்பி ஓடுகிறார்கள். அப்படிச் செய்வதால் சினிமாக்கொட்டகையிலும் மற்ற ஜனநெருக்கமான இடங்களிலும், அநேக உயிர் சேதமுண்டாகின்றது. முதலில் அபாயத்திலிருக்கும் மக்களை எச்சரித்து, எரிந்துகொண்டிருக்கும் கட்டடத்திலிருந்து, அவர்களை வெளிக் கிளப்பவேண்டும். வெளிப் போகும் மார்க்கங்கள் அடைபடாமலிருந்தால் இது சுலபமாக முடியும். வாசல்வழி புகையாலும் நெருப்பாலும் மூடப்பட்டிருந்தால் ஒரு ஈரப் போர்வையால் உன்னை மூடிக்கொண்டு, ஓர் ஈரப் பிளானல் துண்டை

யாவது, துணியையாவது முகத்திற்கும் நாசிக்கும் மூடிக் கொள்ளவும். தாழ்ந்து வேகமாக நடக்கவும். Fireman's lift மூலமாகவாவது, அல்லது அவர்களை இழுத்துக்கொண்டாவது ஜனங்களை அப்புறப்படுத்தவும். Fireman's lift உனது வலது தோள் மீது உன் முதுகிற்கு குறுக்கே ஓர் குதிரை சேணம் போல் ஓர் மனிதனைத் தூக்கிப் போட்டுக்கொள்வது. அவன் தலை பின் தொங்கும். உனது வலது தோள் அவன் கால்கள் நடுவே சென்று, உனது இடது தோள்மேல் அவன் வலது கையை பிடித்திருக்கும். கீழே குனிந்து மனிதனை, அவன் மார்பு, உன் தோளின் மீது படும்படி, மேலிழுத்துக்கொள்வது தான் மிகவும் சுலபமான வழி.

பேச்சு மூச்சு இல்லாதவனை யிழுக்கவேண்டுமானால் அவன் துணிகளைப் பிடித்திழுக்கலாம். அல்லது அவன் தலையின் கீழ்புறமாக வந்து, உன் கழுத்தைச் சுற்றி போலைன் (Bowline) கட்டிக்கொண்டு உன முழங்தாளா லூர்ந்தும் செல்லலாம். ஆனால் ஆபத்திலிருந்து மீட்க வேண்டிய மனிதர்கள் மேல் மாடியிலிருந்து, படிக்கட்டுகள் நெருப்புப் பிடித்துக்கொண்டிருந்தால், வேறு வழிகள் உண்டு. அவர்களுககுப் பேச்சு மூச்சிருந்து காயப்படாமலிருந்தால் ஏணி வழியாக அவர்களே இறங்கி வரலாம். அல்லது அந்த அறையில் யாதாகிலும் ஒரு பொருளுடன் கெட்டியாகக் கட்டப்பட்ட ஒரு கயிற்றின் வழியிறங்கியும் வரலாம். அல்லது கீழே குதிப்பதற்காக, விரித்துப் பிடிக்கப்பட்ட ஜமுக்காளத்தின் மீது குதித்து விடலாம். இதன் கீழே மெத்தையாவது வைக்கோலாவது விரித்திருக்கவேண்டும். பேச்சு மூச்சு அற்றவர்கள் மேல் மாடியிலிருந்தால், அவர்களை ஏணியின் வழியாகத் தூக்கிக் கொண்டாவது இறங்கலாம்; அல்லது கயிற்றில் கட்டிக் கீழே விடலாம். கயிற்றை, உட்காரச் சௌகரியமாய் ஒரு குரிச்சிபோல் போட்டு (Chair knot), கயிறு அறுந்துபோகாமல் ஜன்னல் விளிம்பிற்கும் கயிற்றிற்கும் நடுவே துணி சுற்றி வைத்துவிடவும். ஒரு கயிறு, அவசரத்திற்கு அகப்படாவிட்டால் அதற்குப் பதிலாய்

துப்பட்டிப் போர்வை முதலிய துணிகளை நீட்டுப்போக் காகக் கிழித்து நெடுகக் கட்டிவிடலாம்.

நெருப்பை யணைத்தல்:—நெருப்பணைக்கும் இயந்திரம் இருக்குமிடங்களில் உடனே கூடியமட்டில் அருகாமையி லிருக்கும் நெருப்பணைக்கும் அபாயக் குறியை உடைக்க வேண்டியது. நெருப்பணைக்கும் கூட்டத்தார் வந்தவுடன் அங்கிருப்பவர்கள் தங்கள் உதவியைக் கொடுக்க கோர வேண்டுமேயொழிய, அவர்களுக்கு இடையூறாக அலைந்து கொண்டிருக்கக்கூடாது. ஜனநெருக்கத்தைப் பின் தள்ள ஒரு சங்கிலிபோல் நின்றுகொண்டாவது மற்றும் ஏனைய உதவிகளை அவர்களுக்குச் செய்யலாம். நெருப் பணைக்கும் படை இல்லாவிடில் அக்கம் பக்கத்தாரைத் தருவித்துக்கொள். நீர்த் தொட்டியை (Bucket) சுலப மாய் நிறப்பியனுப்ப ஒரு சங்கிலிபோல் ஜனங்களை நிறுத்தி வைத்துக்கொள். நனைத்த துப்பட்டிகள் தீயை அணைக்க மிகவும் பயன்படும். எண்ணெய்யாவது, பெட் ரோலாவது, தீப்பிடித்திருந்தால் அதன் மேல் தண்ணீரை ஊற்றாதே. மணலையாவது மண்ணையாவது போடு. ஒரு வன் துணி தீப்பற்றிக்கொண்டால், அவனைத் துப்பட்டி யில் சுற்றி பூமியிலுருட்டி விடு. நெருப்பு பரவும்போலிருந் தால் பக்கத்திருலிக்கும் தீப்பிடிக்கக்கூடிய பொருள்களை அப்புறப்படுத்து; அல்லது அவைகளை நீரால் நன்றாக நனைத்து விடு. தீப்பற்றி யெரியும் கட்டிடத்திலிருந்து ஒரு மிருகத்தைக் கொண்டுவர வேண்டுமானால் அதன் தலையை ஒரு கோணிப் பையாலாவது துணியாலாவது மூடி வெளியில் நடத்திக்கொண்டு வரவும்.

தண்ணீரில் மூழ்கிப் போனவர்களைக் காப்பாற்றுதல்:—தண்ணீ ரில் மூழ்கிப்போவது அடிக்கடி நேரிடக்கூடிய மற்றொரு அபாயம். ஒவ்வொருவரும், நீந்தவும், முழுகவும் ஜனங் களைக் கரையேற்றவும், அவர்கள் பிடியிலிருந்து தப்பவும், அறிந்திருக்க வேண்டும். உனக்கு நீந்தத் தெரியாத போதிலும், மூழ்கிப் போகிறவனை வேறு வழியாகவும் காப்பாற்றலாம். அவனைப் பிடித்துக்கொள்ளும்படி ஒரு கயிற்றை எறிந்து அவனைக் கரைக்கு இழுத்துக்கொள்ள லாம். அபாயத்திலிருப்பவனுக்கு நேரில், அவனருகே

விழும்படிக் கயிற்றை எறியப் பயிற்சி இருக்கவேண்டும். கயிற்றை வட்ட வட்டமாகச் சுற்றிக்கொண்டு எறியும் பொழுது ஒரு நுனியைப் பிடித்து கயிறு போகப் போக பிரிந்துகொள்ளும்படி எறியவும். கயிறு இல்லாவிட்டால் மிதக்கக் கூடிய எந்தப் பொருளாயிருந்தாலும் லேசாகவும் கையாளக் கூடியதுமான லைப் பெல்ட் (Life Belt) அல்லது மரத்துண்டோ எதுவாகிலும் உபயோகிக்கலாம். அல்லது நீரில் கூடிய மட்டில் இறங்கிப்போய் கையை நீட்டியோ தடியை நீட்டியோ முழுகிப் போகிறவனைப் பிடித்துக் கொள்ளும்படிச் செய்துவிடலாம்.

மின்சார அதிர்ச்சி—(Electric shock):—மின்சாரக் கம்பியைப் பிடித்திருப்பவனைத் தொடுவது மிகவும் அபாயம். அப்படிச் செய்தால மின்சாரம் (current) அவனிடமிருந்து உன்பேரில் பாய்ந்துவிடும். ஆனால் மின்சாரத்திற்கு பிரதிபந்தகமான வஸ்துக்களால் நம்மை விலக்கு செய்துகொண்டு, ஆபத்தில்லாமல் மீட்கலாம். சாதாரண இந்தியன் ரப்பர், உலர்ந்த மரம், பட்டு, கண்ணாடி சாமான்கள், உலர்ந்த வைக்கோல், உலர்ந்த துணிகள் முதலியவைகள் மின்சாரத்திற்கு ப்ரதிபந்தகமான வஸ்துக்கள். ஆனால் உலோகங்கள், கல், ஈரமான பொருள்கள், இவை மின்சாரத்திற்கு அனுகூலமானவைகள். ஒரு எலக்ட்ரிக் கம்பியில் பிடி பட்டிருப்பவனை மீட்க, மின்சாரத்தை நிறுத்தக் கூடுமானால் நிறுத்த வேண்டியது அப்படி முடியாவிட்டால் ஒரு கண்ணாடிப் பலகை மீதிலோ மரக் குரிச்சியின் பேரிலோ ஏறிக்கொண்டு அவனை மரக்கோலால் அப்புறம் தள்ளிவிடவும். ரப்பர் பையாவது, ரப்பர் கைப்பையாவது, அகப்பட்டால் அதை முதலில் கைகளில் அணிந்துகொள். பலத்த அதிர்ச்சிகளாயிருந்தால் மரம் அவ்வளவு சிலாக்கியமான பிரதிபந்தகமல்ல.

அதிர்ச்சிகள்-(Shocks except Electric shock):-அதிர்ச்சியாலுண்டாகும் அபாயங்களுக்குக் காரணம் தீயாலுண்டான பலத்த ரணம், மிகவும் நோவுண்டாக்கும் அபாயங்கள், அல்லது அதிக இரத்தக் கிளர்ச்சி.

அதிர்ச்சியின் அடையாளங்கள்:—(1) நோயாளி ஏறக் குறைய தன் ஞாபகமற்று இருப்பான். (2) நாடி தளர்ந் திருக்கும். (3) தோல் ஈரமாகவும் சில்லிட்டுமிருக்கும். முகம் வெளிறி இருக்கும். (4) சுவாசம் மெலிந்திருக்கும்.

சிகிச்சை :—(1) நோயாளியை, சூடுதாக்க வைத்திருக்க வேண்டும். (வெளிப்புறத்தில் கிடந்தால் உள்ளே கொண்டுபோக வேண்டும்).

(2) அவன் உள்ளங்கால்களுக்கும், தொடை சந்து களுக்கும் உஷ்ணோதக போத்தல்களை வைக்கவும்.

(3) தலையைவிட, காலை, இடுப்பிற்குக் கீழ், நன்ருக உயர்த்தி வைக்கவும்.

(4) சூடான காப்பி தேத்தண்ணீர் முதலிய பானங் களை (காப்பி மிகவும் மேலானது) கொடுக்கவும். லாகிரி பானங்கள் கொடுக்கக்கூடாது.

சுவாச முண்டாக்குதல் :—செயற்கை சுவாசம் உண்டு பண்ணுவதற்கு முக்கியமாக கையாடி வரும் முறைகள் இரண்டு (1) ச்ஷாபர் முறை. (2) சில்வெஸ்டர் முறை. இதில் ச்ஷாபர் முறை மேலானது.

மூக்கிலும் வாயிலும் அடைத்திருக்கும் வஸ்துவை அப்புறப்படுத்தி நோயாளியைக் குப்புறப் படுக்கச் செய்ய வேண்டியது. அவன் பக்கத்திலாவது, குதிரை சவாரி செய்வதுபோல் இரண்டு முழங்கால்களும் நோயாளியின் இரு பக்கத்திலுமாகவாவது, தலையைப் பார்த்தபடி உட்கார்ந்துகொள்ளவும். கைகளை, நோயாளி யின் முதுகின் அடிப்புறத்தில் இரண்டு சட்டை விரல் களும் ஒன்றோடொன்று தாக்காமல் வைத்துக்கொள்ள வேண்டியது. முன்னுல குனிந்து, கைகளை வளைக்காமல் வைத்துக்கொண்டு, உன் மணிக்கட்டின்பேரில் உன் உடம்பின் பாரம் முழுமையும் போட வேண்டியது. மூன்று எண்ணிய பிறகு பழய நிலமைக்கு வந்து அமுக்கு வதை இரண்டு எண்ணுகிற வரை தளர்த்த வேண்டும். இப்படியே நிமிஷத்திற்கு 12 முதல் 15 தடவை செய்ய வேண்டியது. உன்னுடைய சிகிச்சையை ஓரே நிதான

மாகச் செய்ய வேண்டும். இதைச் சில சமயங்களில வேகமாகவும் பிறகு நிதானமாகவும் விட்டு விட்டு செய்யக்கூடாது.

பிரதம சிகிச்சையின் சாதாரண விதிகள்:—எப்பொழுதும் வைத்தியனுக்குச் செய்தியனுப்பி விஷயத்தைத் தெளிவாக அவனிடம் சொல். ஆனால் வைத்தியனுக்காக எப்போதும் காத்திராதே. நோயாளியை, நிதானமாகவும், அழுத்தமாகவும், கையாளவேண்டியது. இரத்தத்தை நிறுத்து. அதிர்ச்சியைத் தெளிவி. நீ, சமயோசித யுக்தியுடன், அவசியமானால் கருவிகளை சமயத்திற்கேற்ப உண்டாக்கிக்கொண்டு, செய்ய வேண்டியதைச் செய்.

காயக் கட்டுகளும், காயம் கழுவுதலும்:—பிரதம சிகிச்சையில் **முக்கோணக் காயக்கட்டு** உபயோகப் படுத்தப்படும். ஒரு முரட்டுத் துண்டை, குறுக்கே இரண்டாக மடித்தால் அடிபட்ட கையைத் தொங்கவிடக்கூடிய முழுத் துணி தொட்டில் (Large arm Sling) ஆகிறது. இதைக் கொண்டு **துணித் தொட்டில்** போடு. இதைத் தவிர Small arm Sling-ம் St. John Sling-ம் இருக்கின்றன. இவற்றையும் கற்றுக்கொள். காயத்தைக் கட்டுமுன் நன்றாகக் கழுவவேண்டும். காயத்தை, சுத்த ஜலத்தாலாவது, பெர்மாங்கனட் பொட்டாஷ் திராவகத்திலாவது நன்றாகக் கழுவி, ஐயோடைன் டிங்க்சரில் நனைத்த லின்டையோ பஞ்சையோ, வைத்துக் காயத்தைக் கட்டவும். அழுக்காவது, கிருமியாவது புண்ணில் பட்டால் இரத்தத்தை விஷமாக்கிவிடும்.

தீயாலுண்டான காயம், கொப்பளம்:—தீயால் உண்டான காயத்திற்கு துணிகளை, கொப்பளமுடையாமல் ஜாக்கிரதையாய் அப்புறப்படுத்தவும். அவசியமானால் தீப்பட்ட இடத்தைச் சுற்றிலுமுள்ள துணியைக் கத்தரித்து விடவும். கொஞ்சம் பஞ்சை ஏதாவதொரு (Vegetable oil) எண்ணெயில் நனைத்துக் கொப்பளத்தைப் பூராவும் பூச வேண்டியது. இதற்கு ஆமணக்கெண்ணெயும் சுண்ணாம்புத் தண்ணீரும் கலந்துண்டான (Carron oil) என்ற எண்ணெய் மிகவும் நல்லது. எண்ணெய் கைவசமில்லா

விடில், எரிபட்ட இடத்தை மாவாலாவது, வாழையிலையிலாவது, மூடவும். சுடு தண்ணீரில் பைகார்பனேட் ஆப் சோடாவை (Bicarbonate of soda) கொஞ்சம் கலந்து இந்தத் திரவகத்தைத் தடவினால் எரிச்சல் கொஞ்சம் அடங்கும். உஷ்ண திராவகங்களாலுண்டாகிய கொப்பளங்களுக்கும் சிகிச்சை இம்மாதிரியே.

கண்ணில் தூசி:—கண்ணில் ஏதாவது தூசி விழுந்து உறுத்தினால் அந்த வஸ்துவை எடுக்க மற்ற கண்ணைத் தேய்க்கவும். கண்ணை மூடிக்கொள். அண்ணாந்து கொண்டு கையைப் பின்னால் கட்டிக்கொண்டு 100 வரை எண்ணு. பிறகு கைக்குட்டையால் தூசியை மெதுவாய் எடு. அல்லது தண்ணீரில் கண்ணை விழி. கண் விழிக்குள் அந்த வஸ்து பிரவேசித்திருந்தால் இரண்டொரு பொட்டு எண்ணெயை விட்டு வைத்தியரைத் தருவி.

காதில் ஏதாவது பூச்சி புகுந்துகொண்டால் கொஞ்சம் எண்ணெய் விட்டால் அது மிதந்து வெளிவந்துவிடும், ஒருக்காலும் காதை அச்சமயங்களில் நோண்டாதே.

வெட்டுக்காயம், தோல் வழுவுண்டுபோதல்:—சிறிய காயங்களாக இருந்தால், அந்த இடத்தைச் சிறிது நேரம் நன்றாக அழுத்திப்பிடி. இரத்தம் உறைந்தவுடன் வெந்நீரால் கழுவிச் சுத்தத் துணியால் கட்டு. பெரிய காயமானால் போரிக் பவுடர், டிஞ்சர் போடு.

விஷக்கடிகளும், விஷக்கொட்டுகளும்:—எந்த விஷமானாலும் விஷம்பட்ட இடத்திற்கு சற்று மேலே ஒரு கயிற்றை இறுகக் கட்டு.

நாய்க்கடி:—இரத்த ஓட்டத்தை தடைசெய்யாது இரத்தம் வெளியே வர ஏற்பாடு செய். கார்பாலிக் ஆஸிட் அல்லது பொட்டாஸியம் பர்மாங்கனெட் கலந்த நீரால் நன்றாய்த் தேய்த்துக் கழுவு. லிண்ட் உபயோகப்படுத்திக் கட்டு. நாய் சீக்கு உடையதா என அறியும் வரை அதைக் கொல்லாதே.

அரவம் தீண்டல்:—கடித்த இடத்தில் மேலும் கீழும் உடனே ஒரு கயிற்றினால் இறுகக்கட்டி, கடிவாயில்

சுண்ணும்பிணுலோ அல்லது கொள்ளியிணுலோ சூடு போடவும். பொட்டாஸியம் பர்மாங்கனெட் தூளைத் தேய்த்தல் நலம். அல்லது இரணத்தைக் கிழித்து பெரிதாக்கு. இரத்தத்தை உரிஞ்சு. பழுக்கக் காய்ச்சிய இரும்பால் சுடு.

மூக்கில் இரத்தம் வரல் :—மூக்கால், மூச்சு விடாமல் பார்த்துக்கொள். நாற்காலியில் உட்காரவைத்து, தலையை முகமேலாகத் தொங்கவிடு. ஈரததுண்டைப் பிடரியில் சுற்று இரத்தம் அதிகமாணுல், மூக்கில் துணியை வைத்து ஒத்தியெடுப்பதுடன், மேல மூக்கை அழுத்திப் பிடிக்கலாம்.

இரத்த ஒழுக்கு :—காயங்களில் சாதாரணமானது இரத்த ஒழுக்கை யுண்டாக்கும் வெட்டுக்காயம் தான். தேகத்தில் மூன்றுவித இரத்தக் குழாய்களுண்டு. (1) ஆர்ட்டரி குழாய்கள் (Artery) ஆர்டரி அறுபட்டால் இரத்த ஒழுககு இருதயத்தின் பக்கத்திலிருந்து வெளி நோக்கிவரும். நல்ல சிவப்பு வர்ணமாயிருக்கும். (2) வெய்ன் குழாய்கள் (Vein). இதிலிருந்து இரத்தம் ஒரே தாரையாக ஒழுகும் கறுத்த நீலச் சிவப்பாயிருக்கும். (3) கேப்பிலரிக் குழாய்கள் (Capillary). இதிலிருந்து வரும் இரத்தம் சிவப்பாகவோ, செங்கல் சிவப்பாகவோ, இருக்கும். அது காயத்தின் எல்லா இடங்களிலிருந்தும் சுரக்கும்.

இரத்த ஒழுக்கை நிறுத்த, நோயாளியைக் கீழே படுக்கவைத்து காயம்பட்ட அவயவத்தைத் தூக்கிப் பிடித்துக்கொள். பிறகு இரத்தம் கொட்டுவதை நிறுத்துவதற்கு (Pressure Points) அமுக்கும் இடங்களைத் தெரிந்து அமுக்கவேண்டும்.

கட்டுக்கடங்காமல் ஓடும் வண்டிகள் :—கட்டுக் கடங்காமல் ஓடும் குதிரை வண்டியை நிறுத்த அதற்கு சமனுக வரும் வரையில் ஓடு. கூடுமாணுல், வண்டி உன் அருகே வருவதற்கு முன்பு அதுபோகும் மார்க்கமே ஓட ஆரம்பிததுவிடு. வண்டிக்கு சமனுக இருக்குமபொழுது, கையை நீட்டி, அதன் பக்கமாயிருக்கும் நுகததண்டைப்

பிடித்துக்கொள். மற்ற கையால் லகானைப் பிடித்துக் கொண்டு, குதிரை நிற்கும்படி திருப்பி இழு. லகான் கயிற்றில் மாட்டிக் கொள்ளாமலும், சக்கரங்களில் அகப்படாமலும், வண்டி நிற்குமளவும், ஜாக்கிரதையாக அத்துடன் ஓடிக்கொண்டிரு.

காயங்களுக்கு முக்கோணக் கட்டு:—பிரதம சிகிச்சையில் முக்கோணக் காயக்கட்டு (Triangular bandage) உபயோகப்படுத்தப்படும்.

துணித் தொட்டில்கள்—(Slings):—அகன்ற துணித் தொட்டில் (large arm sling) (2) சிறிய துணித் தொட்டில் (small arm sling) (3) St John Sling இவைகளைக் கட்டத் தெரிந்துகொள்ள வேண்டும்.

காயக் கட்டுகள் :—

தோள்பட்டைக் காயக் கட்டு (Shoulder bandage)
இடுப்புக் காயக் கட்டு (Hip bandage)
உள்ளங்கைக் காயக் கட்டு (bandage for hand)
பாதக் காயக் கட்டு (bandage for foot)
மார்புக் காயக் கட்டு (Bandage for chest)
முழங்கைக் காயக் கட்டு (Bandage for elbow)
முழங்கால் காயக் கட்டு (Bandage for knee)
தலைக் காயக் கட்டு (Scalp bandage)

இவைகளைப் போடக் கற்றுக்கொள்ள வேண்டும்.

எலும்பு முறிவுகள் அல்லது பிராக்சர்ஸ்:—எலும்பு இரண்டாய் முறிந்துபோனால் ஸிம்பிள் பிராக்சர் என்றும், எலும்பு இரண்டு இடங்கள் அல்லது அதற்கு மேல் முறிந்து காயம் ஏற்பட்டால் (compound fracture) என்றும் சொல்லுகிறோம்.

பிராக்சரின் குறிகள் அல்லது எலும்பு முறிவுகளின் அறிகுறி:—வலி அதிகமிருக்கும். அங்கத்தின் உறுப்பின் சுவாதீனம் பூராகவோ ஏறக்குறையவோ இருக்காது. வீக்கம் ஏற்படும். அங்கம் வளைந்துபோகும். முறிந்த எலும்புகள் ஒன்றோடொன்று உராயும்போது சப்தம் ஏற்படும்.

டாக்டர் வருமுன் செய்யவேண்டிய வேலை :—ரத்தம் அதிகமாய் ஒழுகினால் அதை நிறுத்தச் சிகிச்சை செய். நோயாளியைக் காரணமின்றி நகர்த்தாதே. அடிபட்ட அங்கத்தை எந்தவிதத்திலும் அசைக்காதே. அதிர்ச்சி ஏற்பட்டிருந்தால் சிகிச்சை செய்.

எலும்பு முறிவுக்கு முதலுதவி செய்ய வேண்டியது :—ஸ்பிலிண்ட் (Splint) கட்டுத் துணி, Splint கிடைக்காவிடில் சிறிய கைத்தடி, மரத் துண்டு முதலியவைகளை அவசரத்திற்கு Splint ஆக உபயோகிக்கலாம். இரண்டு ஸ்பிலிண்டுகள் வேண்டும். ஸ்பிலிண்டிற்கும் காயப்பட்ட இடத்திற்கும் நடுவே உருத்தாமல் இருப்பதற்கு பஞ்சு வைக்க வேண்டும்.

முன்கை முறிவு—(Fore Arm Fracture) :—உள்ளங்கை கீழே தொங்கியபடி, கட்டை விரலை வெளியே விட்டு முன் கையைத் திருப்பிக்கொள்ள வேண்டும். விரலகளைத் தொடும்படி இரண்டு ஸ்பிலிண்டுகள் (Splint) வைத்துக் கட்டவேண்டும். பிறகு ஒரு பெரிய கைஸ்லிங் கோர்த்துக் கழுத்துடன் தொங்கக் கட்டவேண்டும்.

அடிக்கை முறிவு :—கைக்கு, உள்புறமும் வெளிப் புறமும், இரண்டு Splint-களை வைத்து, அவைகளை இரண்டு குறுக்குக் காயக் கட்டால் கட்டவேண்டும். முன்கைக்கு John sling கட்டவேண்டும்.

கால் எலும்பு முறிவு.

துடை எலும்பு முறிவு.

மோவாய்க்கட்டை எலும்பு முறிவு.

Collar bone fracture.

விலா எலும்பு முறிவு (Fracture of ribs).

முழங்கால் முளி முறிவு (Knee cap Fracture).

மேல் சொன்ன முறிவுகளுக்கு Splint வைத்து கட்டும் முறையைக் கற்றுக்கொள்.

கைப் பீடங்கள்—(hand seats) :—காயம் பட்டவர்களைத் தூக்கிக்கொண்டு போவதற்கு Stretcher-களை உபயோகிக்கலாம். Stretcher-கள், பெரிய காயம்பட்டவர்களை

யும் மூர்ச்சையாய் இருப்பவர்களையும் தூக்கிச்செல்ல உபயோகிக்கப்படுகின்றன. சாதாரணக்காயம் பட்டவர்களைத் தூக்கிச்செல்ல, கையைக் கோர்த்து பீடம் (seats) ஏற்படுத்தித் தூக்கிச் செல்லலாம். Human cruth: காயம் பட்டவன், மற்றவன் கழுத்தைச் சுற்றி ஒரு கையைப் போட்டுக்கொள்ள வேண்டும். உதவி அளிப்போன், நோயாளியின் மணிக்கட்டை, ஒரு கையால் பிடித்துக் கொண்டு, மற்ற கையை நோயாளியின் இடுப்பைச் சுற்றிப் பிடித்துக்கொள்ள வேண்டும். இருகை பீடம், மூன்று கைப் பீடம், நான்குகைப் பீடம் முன்னும் பின்னும் என்ற முறை. (Fore and aft method), மேற்சொன்ன முறைகளில் பீடங்கள் செய்யக் கற்றுக்கொள். அதிக அபாயமான காயம் ஏற்பட்டிருந்தால் Stretcher-ஐ உபயோகி. (Stretcherஐ) எடுத்துப்போகப் பொதுவாய் மூன்று அல்லது நான்கு பேர் அவசியம். அவசர சமயத்தில இருவர் இருந்தால் போதும்.

திசைகள் கண்டு பிடித்தல்

மாணவர்களுக்குத் திசையறிவு அவசியம். அவர்களுக்கு முதலில் முக்கியமான நான்கு திசைகளைக் கற்பித்து அதன்பின் எட்டுதிசைகள் (Eight card wal points) பதினாறு திசைகள், 32 திசைகளைக் கற்பிக்க வேண்டும்.

திசைக்கருவி கொண்டு திசையறியலாம்:— திசைக்கருவியை உள்ளங்கையில் வைததுக் கொள்ளவேண்டும். கையை அசைக்காமல் தரை மட்டத்திற்குச் சரியாய்ப் பிடித்துக் கொள்ளவேண்டும். ஊசி நிலையாய் நிற்கும் வரைகாத்திருப்போமானால் கருவியிலுள்ள வட திசையைக் குறிப்பிடும் ஊசி முனையுடன் சேர்ந்திருக்குமாறு ஊசிக்கூடியில் முன்பே வைத்திருக்கும் திசைப்படத்தைத் திருப்பவேண்டும். இதன்பின் மற்ற திசைகளை அறிந்து கொள்ளலாம்.

திசைக்கருவியில்லாமலும் திசைகளைக் கண்டுகொள்ளலாம்:— பகல் வேளையில் சூரியனைக் கொண்டு திசையறியலாம்.

உன் கையிலுள்ள கடியாரத்தை திசைக்கருவியை வைத்துக்கொள்வது போல உள்ளங்கையில் வைத்துக் கொண்டு மணிகாட்டும் முள்ளை சூரியனுக்கு நேரே இருக்கும்படி கடிகாரத்தை சுற்றி வைத்துக்கொள்ள வேண்டும். மணிமுள்ளுக்கும் 12 என்று குறிக்கும் இடையிலுள்ள பாகத்தைக் கண்டுபிடித்து, நடுவிலிருந்து அவ்வழியாய் ஒரு கோடுகிழித்தால் அது வடதிசையைக் குறிக்கும்.

இரவில் திசையைக் கண்டு பிடிக்க வழிகள் உண்டு துருவ நக்ஷத்திரத்தைககண்டு பிடிக்க ஒவ்வொரு மாணவனும் அறிந்திருக்கவேண்டும். ஏனெனில் அது தெரிந்தால் மாணவர்கள் வழிதப்பிப்போகவே சந்தர்ப்பமிராது. துருவ நக்ஷத்திரம் எப்போதும் வடதிசையைக் குறிக்கும். இரவில் வானத்தைப் பார்ப்போமானால் "The Great Bear" என்ற பிரகாசமுள்ள ஏழு நக்ஷத்திரங்களாலாகிய கூட்டத்தைப் பார்க்கலாம். அது கலப்பை வடிவமாய் இருக்கும். இக்கூட்டத்தை டிசம்பரிலிருந்து மார்ச் வரை வானத்தில் பார்க்கலாம். இதைச்சரியாய் உற்றுப் பார்த்தால் நீண்டு வளைந்த கைப்பிடியையுடைய சதுர வடிவமான பாத்திரத்தைப் போன்றிருக்கும். கைக்பிடிக்கு பாத்திரத்தின் வெளி விளிம்பிலுள்ள பிரகாசம் பொருந்திய இரண்டு நக்ஷத்திரங்கள் துருவ நக்ஷத்திரத்தை நேரே காண்பிக்கும்.

"The Great Bear" என்ற இக்கூட்டத்தை பார்க்க முடியாத சமயத்தில் வேறொரு நட்சத்திரக் கூட்டத்தைக் கொண்டு துருவ நட்சததிரத்தைக் கண்டுகொள்ளலாம். இந்நக்ஷத்திரக் கூட்டம் ஜூன் முதல் நவம்பர் வரை ஆகாயத்தில் மாலைப்பொழுதில் காணமுடியும். இக்கூட்டத்தை "காசியோப்பியா" "Cassiopeia" என்பர். இதில் பிரகாசமுள்ள நக்ஷத்திரங்கள் "W" எழுத்து வடிவத்திலிருக்கும். இந்த "W" எழுத்து தலைகீழாய்க் காணப்படும். அதன் தலைப்பாகம் வடதிசையிலுள்ள துருவ நக்ஷத்திரத்திற்கு நேர் முகமாய் இருக்கும்

"ஓரியோன்" என்ற ஒரு நக்ஷத்திர கூட்டம் உண்டு, அவற்றைச் சேர்த்துப் பார்த்தால் வாளுடன் கூடிய

கச்சை யணிந்த மனிதன் உருவமாய் இருக்கும். ஒரு தடியை உயரத்தூக்கி, வாள்நுனி கச்சையின் நடுபாகம் தலையின் நடுபாகம்—இவற்றிலுள்ள நக்ஷத்திரங்களுடன் சேர்ந்திருக்கும்படி பிடித்துக் கொள்ள வேண்டும். தலைப் புறத்திற்கு மேலுள்ள கோலின் நுனி, வடதிசையைக் குறிக்கும்.

இம்மாதிரி இரவில் நக்ஷத்திரங்களின் உதவியால் வடதிசையைக் கண்டு கொள்ளலாம்.

திசைகளைப்பற்றிக் கற்றுக்கொடுக்கும்போது அது சம்பந்தமான விளையாட்டைச் சொல்லிக் கொடுக்கலாம். திசைக்கு ஒருவராக எட்டு மாணவர்களை நிறுத்தி வைக்க வேண்டும். ஆசிரியர் இதன் பின், இரண்டு திசைகளின் பெயரை உரத்த சப்தத்துடன் சொல்லவேண்டும். அதைக் கேட்டதும் அவ்விரு திசைகளில் நிற்பவர்களும் ஓடிவந்து இடங்களை மாற்றிக் கொள்ளவேண்டும். இப்படி மாற்றியவர்களின் திசை அவர்கள் புதிதாக அடைந்த இடத்தின் திசையேயாகும். இதைச் செய்வதில் யாராவது தம்பிதம் செய்தால் அவர்களை வலது கையால் மூக்கைப் பிடித்துக்கொண்டு இடது காலைத் தூக்கிக்கொண்டு சிறிது நேரம் நிற்கும்படிச் செய்யலாம்.

படம் பார்த்தல்

கையில் படம் இருக்குமானால் சுருக்கமான வழியில் சென்று இடங்களைச் சுலபமாய் அடையலாம். அது நம்மைப் பெரிய ஆபத்திலிருந்துங் கூடக் காப்பாற்றும். காட்டிற்கும தண்ணீர் உள்ள இடத்திற்கும், தங்குமிடத்திற்கும், நாம் சுலபமாய்ப் போய்ச் சேரலாம். இது போன்ற உபயோகங்கள் படங்களினால் ஏற்படக்கூடும் என்பதை மாணவர்கள் மறந்து போகக்கூடாது. படம் பார்த்தல் என்பது முதலில் சில மாணவர்களுக்கு உற்சாகத்தை யளிக்காமலிருக்கலாம். ஆனால் அவர்கள் பாடி வாழ்க்கைக்குச் செல்லும்போது, கையில் ஜில்லாப்

படத்தை எடுத்துக்கொண்டுசென்று, அதன் உதவியால் காட்டின் வழியாயும், வயல்கள் வழியாயும், ஒருதரம் போய்த் திரும்பி வருவார்களேயானல் அதன்பின் படம் பார்த்ததில் அதிக ஊக்கம் காண்பிப்பார்கள். ஆகவே மாணவர்களுக்கு அவசியமாய்வேண்டியது ஒரு அங்குலத்திற்கு ஒரு மைல் விகிதத்தைக்காட்டும் சர்வே இலாக்காக்காரர் தயாரித்த நம் ஜில்லாவின் ஒரு அங்குல அளவு வீதப் படமே (One inch Ordnance Survey Map of the District). மாணவர்கள் வசிக்கும் ஜில்லாவின் ஒரு அங்குல அளவுப்படத்தை தாலூக்காபீஸிலிருந்தாவது, கலெக்டர் ஆபீஸிலிருந்தாவது, விலைக்கு வாங்கவேண்டும். அதை நல்ல துணியின் மேல் ஒட்டிவைத்துக் கொண்டால், படம் கெடாமலிருக்கும்.

ஜில்லாவின் ஒருமைல், ஒரு அங்குலமாகப் படத்தில் காட்டப்பட்டிருப்பதை ஒரு அங்குலப் படம் என்கிறோம். படத்தில் ஒரு சாலை மூன்று அங்குல நீளமாய்க் காட்டப்பட்டிருந்தால், பாதையின் நீளம் மூன்று மைல் என்று தெரிந்து கொள்ளலாம். படத்தைபபார்த்தவுடன் ஒரு இடத்திற்கும் மற்றொரு இடத்திற்கும் நேர்தூரம் என்ன வென்பதையும், சாலை வழியாய்ச் சென்ருல் அதன் தூரம் என்ன வென்பதையும், சொல்வதற்கு மாணவர்கள் பயிற்சிபெற வேண்டும். படத்தில் வண்டிப் பாதைகள், இருப்புப் பாதைகள், பாலங்கள், கட்டிடங்கள், கால்வாய்கள், கோயில்கள், ஆறுகள் முதலியவற்றைக் குறித்துக்காட்ட ஒவ்வொன்றுக்கும் அடையாளம் உண்டு. அந்த அடையாளங்களை ஆசிரியர்கள் குடிமைப் பயிற்சி வகுப்பில் சொல்லித்தருதல் வேண்டும். இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் அடையாளங்களைப் பார்ககவும்.

படம் அமைத்தல்—(Setting the Map) நீ பிரயாணம் செல்லும்போது ஒரு இடத்தில் வந்து நிற்கின்ருய் என்று வைத்துக்கொள். படத்தைத் தரையில் படுக்கை வசமாக வை. நீ நிற்கும் இடத்தைப் படத்தில் கண்டுபிடி. அந்த இடத்தில் ஒரு ஊசியை, தரையை நோக்கி நேராகக் குத்திவை. அதன்பின் உனக்குத் தெரிந்ததும், நீ

பார்க்கக்கூடியதுமான கோயில் கோபுரம் போன்ற ஒரு அடையாளத்தை தெரிந்துகொண்டு அதைப் படத்தில் பார்த்து அந்த இடத்தில் மற்ளுரு ஊசியைத் தரையை நோக்கி நேராகக் குத்திவைத்த பிறகு இரண்டு பின்களின் நுனி வழியாய்ச் செல்லும் நேர்க்கோடு கோயிலின் கோபுரத்தை நேராகக் காட்டும்வரைப் படத்தை மெதுவாகத் திருப்பவேண்டும். இப்போது படம் அமைக்கப்பட்டாய் விட்டது. (The Map is Set) முதல் ஊசியிலிருந்து படத்தில் காண்பிக்கப்பட்ட வேறு எந்த முக்யமான அடையாளங்களுக்கும் (Land marks like Church Tower, Hill, Building) செல்லும் நேர்கோடு அந்த இடத்திற்கு நேராக இருப்பதைக் காண்பிக்கும். நாம் பார்க்கக்கூடிய மலைகள் குன்றுகளின் பெயர்களையும், கிராமங்கள் முதலியவற்றையும், உட்கார்ந்திருக்கும் இடத்திலிருந்தே தெரிந்துகொள்ளலாம்.

மற்ளுரு விதத்திலும் படத்தை அமைக்கலாம். ஒரு அங்குலப் படங்களின் பக்கங்கள் (Sides) True North ஐயும் South-ஐக் காட்டும். நம் கையிலுள்ள மூங்கில் தடியை, True North ஐக் காட்டும் திசையில் தரையின்மேல் வைக்கவேண்டும். படத்தின் மேல்பாகம் வடக்கிலிருக்கும் படியாய்ப் படத்தைத் தடியின் பக்கத்தில் விரித்துவை.

கைப்படம் வரைதல்

மாணவர்கள் பாடி வாழ்க்கைக்குச் செல்லும்போதும் மற்ற இடங்களுக்குப் போய்வரும்போதும், முகாம் செய்த இடத்தை, கைப்படமாய், வரைந்து வைத்துக் கொள்ள வேண்டும். யாராவது ஒருவர், ஒரு கிராமம், ரயில்வே ஸ்டேஷன் எங்கே யிருக்கின்றதென்று கேட்டால், மாணவர்கள் சரியான திசையைக் காட்டி, குறிப்பிட்ட இடத்தைச் சொல்லவேண்டும். இதைவிட, கைப்படம் ஒன்றைத் தரையில்வரைந்து, கேட்கும் இடத்தைக் குறித்துக் காண்பித்துவிட்டால், மிகவும் பிரயோசனமாயிருக்கும். கைப்படம் வரைவதினுல் ஒரு இடத்தைப் பற்றி, நீடித்த விவரம் கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்படாது. அதிக நேரமும் பிடிக்காது.

கைப்படம் வரையும்போது, ஓர் அளவுக்கு வரைய வேண்டும். தெரிந்துகொள்ளும் அளவு சௌகரியமானதாயிருக்க வேண்டும். உதாரணமாக 12 அங்குல நீளமுள்ள பேப்பரில் மூன்று மைல் நீளமுள்ள ஊரை வரைய, ஸ்கேல்: 4 அங்குலம் = 1 மைல். அதனபின் படத்தில், வட திசையைக் குறிக்கவேண்டும். பின் திசைக் கருவியின் உதவியால் படம் வரையலாம். முக்கியமாய்க் குறிக்கவேண்டியவற்றைத்தவிர, மற்றவைகளைக் குறிக்க வேண்டிய அவசியமில்லை. கோயில், குளம், ரயில்பாதை முதலியவற்றை அடையாளங்களால் (Conventional) (Signs) காண்பிக்கவேண்டும். கைப்படத்திற்கு வர்ணம் தேவையில்லை.

கைப்படம் வரையக் கற்றுக்கொள்வது, படங்களை வரைவதினுல்தான். படம் வரைவதில் தேர்ச்சி பெறுவதற்கு மாணவர்கள் தினந்தோறும் பயிற்சி பெற வேண்டும்.

தடம் பற்றுதல்

தடம் அறிதல் அல்லது பாதை அறிதல்:—இதை ஒவ்வொரு மாணவனும் அறிந்திருத்தல் வேண்டும். பாதைகளில் செல்லும்போது, விஷயங்களைச் சரியாய் ஊன்றிக் கவனித்துச் செல்லுதல் அவசியம். ஓடும் மனிதனின் அடிச்சுவடு எப்படி இருக்கும்? குதிரை நடக்கும்போதும், ட்ராட் செய்யும்போதும், பெரும் வேகமாக ஓடும் போதும் உண்டாகும் அடி வித்தியாசங்களை நன்கு அறிந்திருக்கவேண்டும். குதிரை முன் அடி பின் அடி வித்தியாசத்தைக் கவனிக்கவேண்டும். குதிரை அடிகள் பொதுவாய் ஜோடியாய்க் காணப்படும். முன்னுல் இருக்கும் சுவடு பின்னங்கால் உடையது என்பதை மறந்துவிடாதே. மற்றும் பின்காலின் சுவடு முன்னங்காலுடையதைவிட சிறியது. சுவடுகளை ஊன்றிக் கவனிப்பதால் நமக்கு உற்சாகம் ஏற்படும். மாணவர்கள், குதிரைகள் நடக்கும் போது நன்ருய்க் கவனித்து அளவு எடுத்து விஷயங்களைத்

தெரிந்துகொள்ள வேண்டும். இம்மாதிரி ஒவ்வொரு பிராணியின் அடிச்சுவடைத் தெரிந்துகொள் மனிதனின் சுவடுக்கும், பெண்ணின் கால் சுவடுக்கும், குழந்தையின் கால் சுவடுக்கும் உள்ள வித்தியாசத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாணவனும் "தடம் அறிதல்" என்ற சக்தியை விருத்தி செய்துகொள்ளப் பலவிதமான நிலங்களில் அநேகவித சுவடுகளைப் பின் பற்றி அவைகளிலிருந்து அநேக விஷயங்களைக் கிரஹிப்பதற்கான அப்பியாசத்தைக் கொடுக்கவேண்டும். இதை விளையாட்டின் மூலமாகவும் நடத்தலாம். பறந்த மணல் வெளியில் சிறுசிறு கதைகளை நடிக்கும்படி செய்து அம்மணல் இடங்களில் நடிக்கப்பட்ட கதைகளைச் சுவடுகளைக் கொண்டும் மற்ற அடையாளங்களைக் கொண்டும், சொல்லும்படி, மாணவர்களைப் பயிற்சிக்கலாம். மாணவன் தன் மனதில் உள்ளவற்றை மற்ற மாணவர்களுக்குப் பிறர் அறியாமல் தெரிவிக்கப் பலவழிகள் உண்டு. அதைத் "தடம் பற்றுதல்" விதிகள் என்கிறோம். தன்னைப்பின் தொடர்ந்துவரும் மாணவர்களுக்கு, தான்போன வழி தெரிவதற்காகச் சில அடையாளங்கள் இருக்கின்றன. இந்த அடையாளங்களைப் பாதையின் வலப்புறத்தில் போடவேண்டும். கம்பளநூல் (woole thread) பச்சை, சிவப்பு, ஊதா முதலியவற்றைப் போகும் வழியே சிறிது தூரம் விட்டுவிட்டு போட்டுச் செல்லலாம். சிறுகற்களையாவது, கிளைகளையாவது இடம் விட்டு இடம் போட்டுச் செல்லலாம். புல், செடிகளைக் கொண்டாவது மர இலைகளைக்கொண்டாவது காகிதத்தைக் கிழித்தாவது, தரையில் சில அடையாளங்களை எழுதியாவது, நாம்போகும் இடத்தைத் தொடர்ந்து வருபவர்களுக்குத் தெரிவிக்கலாம். தடம் பற்றுதல் என்பதைப்பற்றி அறிவை ஏற்படுத்துவதற்குத் தகுந்த சமயம் மாணவர்களைப் பாடி வாழ்க்கைக்குக் கூட்டிச் செல்லும் சமயமே. சாரணர்கள் தடம் பற்றும் விஷயமாய் உபயோகிக்கும் அடையாளங்களைக் கற்றுக் கொடுக்கலாம். (அவ்வடையாளங்களை அடுத்த பக்கத்தில் காண்க.)


1
2
3
4
5
6
7
8
9
10
11
12
13
14
15
16
17
18
19
20
21
22
23
24
25
26
க
ங
ச
ஞ
ட
ண
த
ந
ப
ம
ய

படத்தில் காண்பிக்கப்படும் குறியீடுகள்
Conventional Signs
தடம்பற்றுதல் சம்பந்தமான குறியீடுகள்
Tracking Signs

1 முதல் 26 எண் வரை படத்தில் குறிப்பிடும் குறியீடுகள்

க முதல் ம வரை தடம்பற்றும் குறியீடுகள்

---

1. ஆறு
2. குன்று
3. வயல்
4. பாலம்
5. மாதாகோயில்
6. இந்துகோயில்
7. மசூதி
8. மரங்கள்
9. கப்பி சாலை
10. மண் சாலை
11. இருப்புப்பாதை
12. ஓரடிப்பாதை
13. வீடுகள்
14. குளம்
15. புல்தரை
16. ஆகாயவிமான [நிலையம்
17. கிராமம்
18. கலங்கரைவிளக்கு
19. ஊசியிலை மரம்
20. பெரியமரம்
21. போர்க்களம்
22. உயர்ந்த அடர்ந்த [மரம்
23. பனைமரம்
24. சிறிய கப்பல்
25. கிணறு
26. சிற்றருவி

க. இவ்வழி செல்

ங. இங்கிருந்து தேப்படி தூரத்தில் ஒரு பொருளிருக்கிறது

ச. குடிநீர் இத்திசையில் அதிக தூரத்தில்

ஞ. குடிநீர் அருகில்

ட. இங்கு குடிக்கும் நீர்

ண. இங்கு கலகம், குழப்பம்

த. இங்கு சமாதானம்

ந. இவ்வழிசெல்லாதே

ப. நான் வீடு சென்றுவிட்டேன்

க. இவ்வழி செல்

ம. ஒருவர் நோய்வாய்ப்பட்டிருந்ததால் தங்கிச் சென்றோம்.

இயற்கை ஆராய்ச்சி

சிறுவர்களைப் பயிற்சிப்பதற்கு "இயற்கை" பெரிதும் உதவுகின்றது. சிறுவர்களுக்கு பார்ப்பதெல்லாம் விநோதமாயும், விந்தையாயும் தோன்றும். இயற்கையின் மூலம் கடவுளின் தன்மையைச் சிறுவர்களுக்குப் புகட்டலாம். இது சந்தர்ப்பமாக லாங்பெலோ (Long fellow) என்ற ஆங்கிலக்கவி கூறும் சொற்கள் நம் மனத்தில் இருக்கவேண்டும். "இயற்கையின் மீதுள்ள அபிமானம் நம் மனதில் எழுப்பப்பட்டால் கற்களில் பிரசங்கமும், ஓடும் நீரோடைகளில் கதைகளும், ஒவ்வொரு பொருளில் ஒரு நன்மையும், நாம் காணக்கூடும். ஒப்பற்றக் கடவுள் நமக்காக இயற்கை நூல் எழுதியிருக்கிறார்." இயற்கையின் மேல் அன்பை ஏற்படுத்த நாம் நம் மாணவர்களை, இயற்கைக்காட்சி நிறைந்த இடங்களுக்கு உல்லாசப் பிரயாணமாக அழைத்துச் செல்லவேண்டும். விளையாட்டுகளையும், பாடி வாழ்க்கையையும், பரந்தத் தோப்புகளிலும் தோட்டங்களிலும் நடத்தவேண்டும். மிருகக்காட்சி சாலைகளுக்கு மாணவர்களை அழைத்துச் சென்று அங்குள்ள மிருகங்களையும், பட்சிகளையும் பார்க்கும்படிச் செய்து, அவை ஒவ்வொன்றின் பழக்க வழக்கங்களையும் கவனிக்கும்படிச் செய்யவேண்டும். பட்சிகளின் இறகுகள், பலவிதப் புஷ்பங்கள் பலவிதச் செடிகளின் இலைகள், இவைகளைச் சேகரிப்பதற்குச் சிறுவர்களைத் தூண்டவேண்டும். இவ்வாறு சேகரிக்கப்பட்ட இலைகள், புஷ்பங்கள் இறகுகள் முதலியவற்றைப் பற்றிச் சில விஷயங்களையும் அவர்கள் அறிந்திருக்க வேண்டும். இலைகள், புஷ்பங்கள் இவைகளைச் சம்பந்தப்படுத்தி விளையாட்டுகளையும் சொல்லித்தரவேண்டும். இத்துடன் "**சேகரிப்போன்**" "**தோட்ட வேலைக்காரன்**" இவைபோன்ற தேர்ச்சி சின்னங்களைப் பெறும்படி மாணவர்களைத் தூண்டவேண்டும்.

வகுப்பு மாணவர்களின் வயது முதலியவற்றை அனுசரித்து, ஆசிரியர், மாணவர்களுக்கு, இயற்கைக் கலையில் பயிற்சி அளித்தல் வேண்டும்.

பாடி வாழ்க்கை

குடிமைப் பயிற்சியின் நோக்கம் :—மாணவர்களை சரீரபலன், மனோபலன் சுயநம்பிக்கை, உண்மையான சகோதர தத்துவம் போன்ற நற்குணங்களையுடைய குடிமக்கள் ஆக்குவதே ஆகும். இத்தன்மைகள் எல்லாம் பாடி வாழ்க்கையினால் ஏற்படும். இதை உத்தேசித்து குடிமைப் பயிற்சி பாடத்திட்டத்தில் வெளிவாசம் அல்லது பாடி வாழ்க்கை (Camp) சேர்க்கப்பட்டுள்ளது.

பரந்த வெளியில் சுயேச்சையுடன் விளையாடுவது சிறுவர்களுக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுக்கும். தன்னையே மறந்து உற்சாகத்துடன் ஆரவாரித்து மாணவர்கள் விளையாடுவதற்குத்தகுந்த சந்தர்ப்பம், நாம் மாணவர்களை பாடி வாழ்க்கைக்கு (Camp) அழைத்துச் செல்லும்போது ஏற்படுகிறது. கண்களுக்கு குளிர்ச்சியைத் தரக்கூடிய மரங்களால் சூழப்பட்டு புஷ்பங்களின் நறுமணம் வீசும் பரந்த வெளியில் பரிசுத்தமான காற்றை சுவாசிக்கும் போதும், அடர்ந்த சோலைகளில் உள்ள அழகிய பல வர்ணப்பறவைகளைப் பார்க்கும்போதும் மாணவர்கள் இயற்கைக் காட்சியின் அழகில் ஈடுபட்டு அக்காட்சிகளை சிருஷ்டித்த கடவுளின் சம்பூரண குணங்களை அறிந்துகொள்ளுகின்றனர். பறந்த வெளியிலுள்ள சுத்தமான காற்றை பருகும்போது மாணவர்களின் தேகமும், மனமும் உற்சாகம் அடைகின்றது.

செல்வந்தன், ஏழை என்ற வித்தியாசத்தை மாணவர்கள் மறந்துவிடுவதற்கும், எல்லோரும் ஒரே பெரிய சமூகத்தை சேர்ந்தவர்கள் என்ற எண்ணம் கொள்வதற்கும, உழைப்பின் கௌரவத்தை உணர்வதற்கும், சிக்கனத்தின் முக்கியத்தை நடைமுறையில் காண்பதற்கும் பாடி வாழ்க்கையே சிறந்த அம்சமாகும்.

சுருங்கச் சொல்லின் பாடி வாழ்க்கையால் இயற்கையின் மேல் அபிமானம், இயற்கைப் பொருளின் ஞானம், இயற்கையை சிருஷ்டித்த எல்லாம் வல்ல இறைவனிடம்

அன்பு முதலியவை ஏற்படுகிறது. சுயமுயற்சியால் மாணவர்கள் இயற்கைப் பொருள்களின் ரகசியங்களை ஆராய்ந்து பார்க்கவும் உபயோகமுள்ள சிற்சில கருவிகளை செய்யவும், தங்களுக்கு வேண்டிய உணவை சமைத்து தயாரித்துக் கொள்ளவும், வெளியே படுத்து உறங்கவும், ஆறு குளங்கள் முதலிய நீர் நிலைகளில் நீந்தக் கற்றுக்கொள்ளவும், ஜனங்கள் நடமாடாத இடங்களில் ஆராய்ந்து அறியவும், மலைகள் ஏறவும், படங்கள் வரையவும், பிறருக்கு உதவி செய்யும் பழக்கத்தைப் பெறவும், எல்லோரையும் சகோதரர்களாகப் பாவிக்கும் தன்மையை எய்தவும் பாடி வாழ்க்கை சிறந்ததாகும்.

பாடி வாழ்க்கையினால் ஏற்படும் நன்மைகள் பாடி வாழ்க்கைக்கு வேண்டிய முன்னேற்பாடுகளை செவ்வனே செய்துகொள்வதிலும், பாடிகளை சரியான முறையில் நடத்துவதிலும் அடங்கியிருக்கிறது.

பாடி வாழ்க்கைக்கு முன்னேற்பாடுகள்:-தகுந்த இடத்தைத் தேடிக்கொள்ளுதல். ஆசிரியர் பாடியிடத்திற்கு முன்னரே சென்று எல்லா வசதிகளும்—சுத்த ஜலம், நிழல்,—இருக்கின்றனவா வென்று பார்த்து வருதல்—. பாடியிடத்தின் சொந்தக்காரனின் அனுமதி பெறுதல்.

(2) பாடிக்கு வேண்டிய சாமான்கள்—உணவுப் பொருள்கள், கறிகாய், பால், தயிர், நெய் சேகரித்து வைத்தல்.

சமையல் பாத்திரங்கள்-வாளிகள், டம்ளர்கள் தயாரித்தல். ஹரிக்கேன் விளக்குகள். மண் வெட்டிகள். முதலுதவிப் பெட்டிகள்.

(3) குடிமைப் பயிற்சிக்கான கயிறுகள், கொடிகள் திசைக்கருவிகள் படங்கள் முதலியவற்றை தயாரித்து வைத்தல்.

(4) படுக்கை, உடை முதலியவற்றை தயாரித்துக் கொள்ளுதல். பாடி நிகழ்ச்சி குறிப்புகள் தயாரித்தல.

(5) மாணவர்களின் பெற்றோரிடமிருந்து எழுத்து மூலமாய் அனுமதி பெறுதல்.

86955

பாடியில் கவனிக்கவேண்டியவை :—(1) சுத்தமே சுகம் தரும். மலம் ஜலம் கழிப்பதற்கான வசதிகள் செய்தல்—கூடாரம் சுற்றுப்புறம் சுத்தம்.—தினந்தோறும் காலையில் கூடார சோதனை (Tend Inspection).

(2) வேலைப் பிரிவு செய்தல்—சுறு சுறுப்பாய் வேலை செய்தல். வேலையின் கௌரவம். குடிமை பயிற்சிக்கான போதனைகள்—முற்பகலில் இரண்டு மணி நேரம்—கைப்படம் வரைதல்—படம் பார்த்தல்—முடிச்சுகள் போடுதல்—பாதை கண்டுபிடித்தல், தடம் பற்றல், பாலம் கட்டுதல், சைகை முறையால் சமாச்சாரம் அனுப்புதல், பொக்கிஷ வேட்டை விளையாட்டுகள்—இவற்றைப் போதித்தல்.

மற்றும் ஓய்வு நேரத்தில் (நடுப் பகலில் 2 மணி நேரம்) கருவிகள் (Camp gadgets) செய்தல். பறவைகள் முதலான ஜந்துக்களின் இயற்கையழகு, குரல், வாழ்க்கை முதலியவற்றை ஆய்ந்தறிதல். குறிப்பு எழுதல். ஓலை வேலை செய்தல் :—

(3) மாலைப் பொழுதில் 8 மணிக்கு இராப் போஜனத்திற்குப் பின் நண்பர் குழாம் என்ற கூட்டத்தை நடத்தலாம்:—

மூன்று நாட்களுக்கு மேற்பட்ட பாடி வாழ்க்கையைப்பற்றி மேலே சொன்னோம். இனி குறுகிய கால பாடி வாழ்க்கை அல்லது பிற்பகல் பிரயாணத் (Day outings) தைப்பற்றி சிறிது கவனிக்க வேண்டும். கீழ்க்கண்ட நிகழ்ச்சிக் குறிப்புகள் இதனை நன்கு விளக்கும்.

பிற்பகல் உல்லாசப் பிரயாணம்

மாதிரி நிகழ்ச்சி

பிற்பகல் 1-30 மணி மாணவர்கள் ஒன்றுய்க் கூடுதல்.

1-45. "தடம் பற்றுதல்" என்ற பயிற்சி. ஆசிரியர் ஒவ்வொரு ஸ்குவாடும் போகும் வழியை நிர்ணயித்துச் சொல்லுதல். ஒவ்வொரு ஸ்குவாடும் புறப்பட்டு வழியில் போடப்பட்டிருக்கும் அடையாளங்

களைப் பார்த்துக்கொண்டு குறிப்பிட்ட இடத்தை 45 நிமிஷம் அல்லது 1 மணியில் வந்தடைதல்.

3–45—4–15. தேனீர் தயாரித்தல் ஸ்குவாடு ஒவ்வொன்றும் நெருப்புமூட்டித் தயாரித்தல்; தேனீர் விருந்து.

4–30 P. M. ஆசிரியர், மாணவர் முகாம் செய்யும் இடத்தைப் பரிசோதனை செய்தல்.

4–45 P M 5 30. சுறுசுறுப்பான விளையாட்டு. தேசியப் பாடல்கள், நாட்டுப்பாடல்கள்.

5–30 P M. ஆசிரியர் பேச்சு. கடவுள் பிரார்த்தனை.

5-40 திரும்புதல்.

சமூகத்தில் நடந்து கொள்ளும் முறையைக் கற்றுக் கொள்ளத் தகுந்த சந்தர்ப்பம் பாடி வாழ்க்கை தான்.

பிறர் உன்னை விரும்பும்படிச் செய்வதற்கான ஆறு வழிகள்:—

1. பிறர் நலனில் நீ, பெரிதும் ஊக்கம் காண்பிப்பவனாயிரு.

2. எப்போதும் சிரித்த முகத்துடன் இரு.

3. ஒவ்வொருவருக்கும் இனிமையான வார்த்தை அவரவரின் நாமமே. ஒவ்வொருவரையும் அவரவர்களின் சரியான பெயரால் அழை. ஒருவர் பெயரைப் பிழையில்லாமல் எழுது.

4 பிறர் உன்னிடம் பேசும்போது, கவனமாயும் உற்சாகத்துடனும் காது கொடுத்துக்கேள். தம்மைப் பற்றியும், தமது பெருமையைப்பற்றியும் உன்னிடம் பேசுவதற்குப் பிறரை அனுமதி.

5. ஒரு விஷயத்தைப்பற்றி விவாதிக்கும்போது உன்னிடம் பேசுபவரின் அபிப்பிராயத்தை யொட்டியே பேசு.

6. உன்னிடம் பேசுபவர் மிகவும் சிறந்தவர்; முக்கியஸ்தர் என்று அவரே உணரும்படியாய் நடந்துகொள். அப்படிச் செய்யும்போது நீ உண்மையாகவே அவரை மதிப்பதாய்க் காண்பித்துக்கொள்.

சாலை விதிகள்

(a) நடப்பவர்கள் அனுசரிக்கவேண்டிய ஒழுங்குகள் :—

1. ஒரு விபத்திலிருந்து தப்புவதைக் காட்டிலும், அந்த விபத்து ஏற்படாமலிருக்கப் பார்த்துக் கொள்வது எளிது.

2. சாலைக்குப் போகுமுன், உன் இருபுறமும் வண்டிகளாவது, மோட்டார்களாவது, வருகின்றனவா என்று எப்பொழுதும் பார். சாலையில் நடந்து செல்லும் பொழுது எப்பொழுதும் வலதுகை ஓரமாய்ச் செல். ஏனென்றால் ஓடிக்கொண்டிருக்கின்ற வண்டி, மோட்டார்களை, நீ நேராகப் பார்த்துச் செல்லலாம்.

3. நடைபாதை (foot-way) இருந்தால், அதன்மேல் தான், நீ நடந்து செல்லவேண்டும்.

4. ஒரு சாலையின் குறுக்கே நடந்து செல்வதற்கு முன், கொஞ்சம் தாமதித்து, இரண்டு பக்கமும் பார்.

5. சாலையின் நடுப்பாகத்தை அடையும் வரை (சேரும் வரை) எப்பொழுதும் உன் வலது பக்கம் பார். அதன்பின் உனது இடது பக்கம் பார்த்துக்கொண்டு, சாலையின் மீதி பாகத்தைக் கடந்து செல்.

6. ஒரு வண்டிக்குப் பின்னால் நீ செல்லும்பொழுது, அடுத்த பக்கத்திலிருந்து வண்டிகள், மோட்டார்கள் வருகின்றனவா என்று, பார்ப்பதற்குப் போதிய தூரம், வண்டிக்கும் உனக்கும் இடையில் இருக்கவேண்டும்.

7. வாகனங்கள் நகர்ந்துகொண்டிருக்கும் பொழுது வண்டியிலிருந்து இறங்காதே. அப்படி இறங்கினாலும், சாலையில் செல்லும் வாகனங்களை முதலில் கவனிக்காமல் இறங்காதே.

8. இடது கைப் பக்கத்தைத் தவிர, வேறு எந்தப் பக்கத்திலும், வாகனத்திலிருந்து இறங்காதே.

9. ஓடிக்கொண்டுவரும் வாகனத்தினின்று தப்பித்துக் கொள்வதற்காக ஏதாவது ஒரு திசையில் போய்க் கொண்டிருக்கும்போது உன் மனதை மாற்றிக்கொண்டு வேறு பக்கம் திரும்பாதே. வாகனத்தை ஓட்டிக்கொண்டு வருபவன் உனக்கு ஆபத்து ஏற்படாவண்ணம் உன்னைக் கடந்து செல்வதற்கு அவனுககு சந்தர்ப்பம் கொடு.

10. கடந்து செல்லும் வாகனத்தினால் ஏற்பட்ட புழுதியினுள் நடந்து செல்லாதே. புழுதி அடங்கும் வரை இருந்து அதன்பின் செல்.

11. முதலில் வலது கைப்பக்கம் பார்க்காமல் நடைபாதையில் இருந்து சாலையில் இறங்காதே.

12. வாகனம் கூட்டம் அதிகமாயுள்ள சந்திப்பு ரஸ்தாக்களை ஒரு மூலையிலிருந்து கடப்பதற்கு முயற்சி செய்யாதே. இந்த சந்திப்பு ரஸ்தாக்களில் வாகனங்கள் அதிகமாக ஓடுமாதலால் விபத்து ஏற்படலாம்.

13. பெரிய ரஸ்தாக்களை, உன் தோழர்களின் துணிகளைப் பிடித்துக்கொண்டோ, கைகளைப் பிடித்துக் கொண்டோ கடந்து செல்ல முயற்சிக்காதே.

14. நடைபாதையில் போகும்பொழுது அப்பாதை உனக்கே சொந்தம் என்று எண்ணி நடக்காதே. உன் சுயநலத்தாலோ அல்லது மதியீனத்தாலோ மற்றவர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தாதே.

15 நின்றுகொண்டிருக்கும் வண்டிக்கு பின்னால் நீ நிற்காதே. திடீரென்று பின்னால் அடிக்குமானால் உனக்கு விபத்து ஏறபடும்.

16. உன் தோழன் வண்டியோ, மோட்டாரோ ஓட்டிச் செல்லும்போது அவனுடைய கவனத்தை உன்வசம் செலுத்தும்படி முயற்சி செய்யாதே.

17. ரஸ்தாவைக் கடக்கும்போது "Point duty" யில் இருக்கும் போலீஸ்காரன் பின்னால் செல்லாதே. அவன் உன்னைப் பார்க்கமுடியாது. ஆகையால் உனக்கு ஆபத்து ஏற்பட இருக்கும் சமயம், அவன் உனக்கு உதவி செய்யமுடியாது.

18. ரஸ்தாவில் நிற்கும் போலீஸ்காரனின் கட்டளைக்கு நீ கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்.

19. குருடர்களும், முடவர்களும் ரஸ்தாவை கடக்க முயற்சிக்கும்போது நீ அவர்களுக்கு உதவி செய்யவேண்டும்.

சைக்கிள் விடுபவர்கள் அனுசரிக்கும் விதி :—

1. சாலையை உபயோகிக்கும் ஆயிரக்கணக்கானவர்களில் நீயும் ஒருவன் என்பதை மறவாதே.

2. உன்னைக்கடந்து செல்லவேண்டும் என்று விரும்புபவருக்கு நீ வழி கொடுப்பது நல்லது. அவர்களுக்கு முன்னால் நீ போகவேண்டும் என்றால் உன் உயிருக்கு ஆபத்து நேரிடலாம்.

3. எனக்கு காயம் ஏற்பட்டால் பரவாயில்லை என்று நீ நினைக்கலாம். அதுபோல மற்றவர்கள் தங்களுக்குக் காயம் ஏற்பட்டால் பரவாயில்லை என்று நினைக்க மாட்டார்கள்.

4. உன் சைக்கிளுக்கு "Brake" உண்டு என்பதை மறந்துவிடாதே. உன் விரல்களை "Brakes"யில் இருந்து அகற்றாதே.

5. நீ சைக்கிள் சவாரி செய்துகொண்டு போகும்பொழுது நேரே செல். ஏனெனில் மற்றவர்கள் எந்த வழி செல்லவேண்டுமோ அதை உன்னைப்பார்த்து சரிப்படுத்திக்கொள்வார்கள்.

6. சைக்கிளில் போகும்பொழுது உன்னுடைய கண்கள், ஓடிக்கொண்டிருக்கும் வண்டிகள் பேரிலும் இருக்க வேண்டும்.

7. சாலையில் இடது புறமாகவே சைக்கிளை ஓட்டிச் செல்.

8. உன் சைக்கிள் 'Brake' சரியாய் இருக்கிறதா என்று பார்த்துக்கொள்.

9. சாலையை அடைத்துக்கொண்டு பலபேருடன் சைக்கிளில் செல்லாதே.

10. வேறு வண்டிகளுக்கு முன் செல்லவேண்டுமென்ருல் வலது பக்கமாய் வண்டிகளைக் கடந்து முன்னேறு.

11 கைகளைச் சரியான முறையில் நீட்டி சைகை காண்பிக்க வேண்டும்.

12. சைக்கிள்களுக்கு முன்னுல் ஒளி பொருந்திய விளக்கைக் கொளுத்துவதற்குத் தயாராய் வைக்கவேண்டும். பின் சககரத்தில் நல்ல ரிப்லக்டர் ஒன்றை பொருத்தி வைத்திருக்க வேண்டும்.

13. மாலையில் சரியான நேரத்தில் சைக்கிள் விளக்கை கொளுத்திக்கொண்டு செல். சாலை சந்திப்புகளில் மற்ருெரு வண்டிக்கு முன்னுல் போக எண்ணுதே.

14. மோட்டாருடன் சமவேகமாக சைக்கிள் போவதற்கு முயற்சிக்காதே. அது ஆபத்து. பக்கத்து கிளை சாலையிலிருந்து பெரிய சாலையில் புகும்பொழுது பெரிய சாலையில் இருந்துவரும் வண்டிகள் போவதற்கு முதலில் அனுமதி சாலையின் மற்ருெரு பக்கத்தில் இருந்துவரும் வண்டிகளை ஓட்டி வருபவர்கள் சைக்கிள் செல்ல அனுமதிப்பார்கள்.

கதை நடித்தல்

கவனிக்கவேண்டிய விஷயங்கள் ;—

1. கதை நடிப்பதற்கு முன்பே கதையில் சொல்லப்பட்டவர்களின் குணுதிசயத்தைப்பற்றி அறிந்திருக்க வேண்டும்.

2. கதையில் சம்பந்தப்பட்டவர்கள் பேசுகின்ற தன்மை, நடக்கும் மாதிரி முதலிய தன்மைகளையறிந்திருக்கவேண்டும்.

3. கூடியவரை நமக்குக் கிடைக்கக்கூடிய சாமான்களின் உதவியினுலேயே நடிக்கப் பழகவேண்டும்.

4. அதிக ஆடம்பரமான வேடங்களும் உடுப்பு களும் உதவாது.

5. நடிப்பு இயற்கையாக இருக்கவேண்டும்.

6. ஆசிரியர் முதலில் கதையை சிறுவர்களுக்கு நடித்துக் காண்பித்து அதன்பின் அவர்களை நடிக்கும்படி செய்யலாம்.

7. மிருகங்களின் கதைகள், வீரர்களின் கதைகள், பெரிய தேசபக்தர்களின் தியாகங்கள் இவற்றில் சிறுவர் களுக்கு ஊக்கம் அதிகம். அக்கதைகளைச் சொல்லி அவர்களை நடிக்கும்படி செய்யலாம்.

இயற்கையாகவே சிறுவர்களுக்கு கதை கேட்கவும், கதை சொல்லவும் அதிக ஆவலுண்டு. அதில் அதிகம் இன்பம் அடைகின்றனர். நம் முன்னோர்கள் நீதிகளைக் கதைகளின் மூலமாகவே எழுதியுள்ளார்கள். வீரத் தன்மையுடன் வாழ்ந்த வீரர்களின் கதைகளும், தேச பக்தர்களின் கதைகளும் சிறுவர்கள் ஜீவியத்தை நல்வழி யில் திருப்ப சிறந்த யத்தனங்களாகும்.

கதைகளைக் கேட்கும்போது சிறுவர்கள் மனத்தில் பற்பல புத்துணர்ச்சிகள் எழும்புவதோடு கூட, அக் கதைகளிலுள்ள கதாநாயகர்களைப் போல பாவனை பண் ணவும், நடிக்கவும், நடக்கவும் தொடங்குகிறார்கள். இந் தச் சந்தர்ப்பங்களைக் கைவிடாது தகுந்த கதைகளின் மூலமும் சரித்திரங்கள் மூலமும் அவர்கள் உள்ளத்தில் நலவுணர்ச்சிகளை எழுப்பி அவர்களைச் சிறந்தவர்க ளாக்குவதுதான் நமது முக்கிய நோக்கம்.

கதை சொல்லும்போது கவனிக்கவேண்டிய சில விஷயங்கள் :—

(1) தகுதியான கதைகளைச் சிறுவர்களின் தன்மைக் கேற்றவாறு தெரிந்தெடுத்து, அவற்றின் மூலம் பிள்ளை களின் மனோபாவனையையும் நல்லுணர்ச்சிகளையும் அதி கரிக்கச் செய்யும்.

(2) சிறுவர்கள் சரியாய்க் கதைகளை புரிந்து கொள்ளுமாறு எளிய நடையில், கவர்ச்சி ஏற்படும் முறையில் சொல்ல வேண்டும்.

(3) கதைகளைச் சொல்லும்போது, தானே அவ் விஷயங்களை நேரில் பார்த்தமாதிரி பாவனை செய்து, சிறுவர்கள் அவற்றைக் காட்சிகளாகக் காணுமாறு மனோ பாவனை செய்யும்படிச் சொல்லுதல் வேணடும்.

(4) கதைகளை அபிநயங்களோடும் உணர்ச்சி யோடும் சொல்லுவதால் சிறுவர்கள் அதிக உற்சாக மடைவார்கள்.

(5) நம் சொந்த அனுபவத்திலிருந்து விஷயங்களை தெரிந்தெடுத்துக் கதையாக வர்ணித்து சொல்ல வேண் டும். உலக மக்கள் வாழ்க்கையிலிருந்தும் கதைகளைத் தெரிந்தெடுக்கலாம்.

நேர்ச்சி சின்னங்கள்

"நேர்ச்சி சின்னங்கள்" குடிமைப் பயிற்சி திட் டத்தில் மிகவும் முக்கியமானது. இது மிகவும் உயர்ந்த நோக்கத்துடன் அமைக்கப்பட்டிருக்கிறது. மாணவர் களின் கைவேலைத் திறமையை விருத்தி செய்வதற் கானது. மாணவர்கள் தங்களது ஓய்வு நேரத்தை எவ் வாறு செலவழிப்பதென்று தெரியாமல் அநேக சந்தர்ப் பங்களில் ஆட்சேபகரமான வேலைகளிலும் தீய வழிகளி லும் ஈடுபடலாம். அப்படிச் செய்யும்போது அவர்களின் தேக நலன் குறையும். மாணவர்களிடத்து தேக நலனை ஏற்படுத்தவும், நற்குணத்தை உருவாக்கவும் "நேர்ச்சி சின்னப் பயிற்சி" பெரிதும் உபயோகப்படுகின்றது.

சுருங்கச் சொல்லின் மனம், சரீரம், ஆன்மா சம்பந்த மான குறைகளைத் நேர்ச்சி சின்னப் பயிற்சி நிவர்ப்பிக் கும். ஆசிரியர்கள் வகுப்பறையில் செய்யும் வேலையிலும், மாணவர்கள் பெரிதும் ஊக்கம் காண்பிக்க இப்பயிற்சி மாணவர்களைத் தூண்டுகிறது. குடிமைப் பயிற்சி சம்

பந்தமான வேலையை வீட்டில் தன் ஓய்வு நேரத்தில் செய்வதற்கு இப்பயிற்சி சந்தர்ப்பம் அளிக்கின்றது. ஜூனியர் ஸீனியர் பாடத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள சின்னங்களில் ஏதாவது சிலவற்றைப் பெறுவதற்கு ஆசிரியர் மாணவர்களைக் கூட்ட வேண்டும். ஆசிரியரால், அசமந்தர்கள், மூடர்கள் என்று கருதப்படும, மாணவர்கள் கூட அநேக சந்தர்ப்பங்களில் "தேர்ச்சி சின்னப் பயிற்சி" யில் தங்கள் புத்திசாலித்தனத்தைக் காட்டலாம்.

குடிமைப் பயிற்சி ஆசிரியர், தேர்ச்சி சின்னங்களை வழங்குவதற்கு மாணவர்களை வெளி ஆட்களைக்கொண்டு சோதிக்கலாம். முக்கியமாக நாம் கவனிக்கவேண்டியது என்னவெனில், தேகப்பயிற்சிச் சின்னங்களை ஒருவருக்கு வழங்கும்போது அதிகமாகத் திறமையைச் சோதிக்காமல், மாணவர்களின் ஊக்கத்தையே கவனிக்க வேண்டும். கீழ்க்கண்டவற்றில் மாணவர்கள் தேர்ச்சி சின்னங்கள் பெறலாம்

தேர்ச்சி சின்னங்கள் அநேகம் உண்டு. மாணவர் திறமைக்கும், மனப்பான்மைக்கும், உற்சாகத்திற்கும் தக்கபடி இவற்றின் சிலவற்றை பெறுவதற்கு ஒவ்வொருவனும் பிரயத்தனப்படவேண்டும். நீந்துவோன் தேர்ச்சி சின்னம். பந்தய தேர்ச்சி சின்னம், தச்சுவேலை தேர்ச்சி சின்னம், நாடோடிக் கூத்துகள் ஆடுபவன் தேர்ச்சி சின்னம், சைக்கிள் ஓட்டுபவன் தேர்ச்சி சின்னம், (Pioneer) தேர்ச்சி சின்னம், உயிர்காப்பாற்றுபவன் தேர்ச்சி சின்னம், வியாதியஸ்தகர்களுக்கு பணிசெய்பவன் தேர்ச்சி சின்னம், கைவேலைக்காரன் தேர்ச்சி சின்னம், இயற்கை பொருளுயிர் அன்பன் தேர்ச்சி சின்னம் முதலியனவற்றில் மாணவர்கள் பயிற்சி பெற்று இச்சின்னங்களை பெறுதல் வேண்டும். இதில் நாம் அறிந்து கொள்ளவேண்டியது ஒவ்வொரு மாணவனும் மேலே கூறியுள்ள எல்லாத் தேர்ச்சி சின்னங்களையும் பெறவேண்டும் என்கிற அவசியம் இல்லை. ஒவ்வொரு மாணவனுக்கும் பிரியமான சிலவற்றை தெரிந்தெடுத்து அவைகளில் தேர்ச்சி சின்னங்களைப் பெறலாம்.

விளையாட்டுகள்

மாணவர்களுக்கு விளையாடுவதில் பிரியம் அதிகம். விளையாட்டுகளைக் கொண்டு அவர்கள் மனோ சக்தியையும், சரீரபலத்தையும் விருத்தி செய்யவேண்டும். ஒரே விதமான விளையாட்டு கூடாது. ஒரே விளையாட்டை வித்தியாசப்படுத்தி விளையாடலாம். ஆசிரியர் மாணவர்களைப் பார்க்காத சமயத்திலும், நேர்மையாகவும் நீதியாகவும், ஒருவரை ஒருவர் ஏமாற்றாமல் மாணவர்கள் விளையாடுவது அவசியம். இவ்வித நல்லொழுக்கத்தை மாணவரிடம் ஏற்படுத்துவது ஆசிரியரின் முக்கியக் கடமை யாதலால் ஆசிரியர் தூர நின்று மாணவர்களைக் கவனித்தல் வேண்டும். மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்கப்போகும் விளையாட்டை ஆசிரியர் தெரிந்தெடுத்தெழுதிக் கொள்ள வேண்டும். விளையாட்டுகளில் பலவிதம் உண்டு. (1) தேகப்பயிற்சி சம்பந்தமான விளையாட்டுகள். (2) மனோ விருத்திக்கான விளையாட்டுகள். (3) சமூக உணர்ச்சி விருத்திக்காக விளையாடும் விளையாட்டுகள்.

1. தேகப் பயிற்சி விளையாட்டுகள் :—ஓடியாடும் விளையாட்டுகள், மரமேறுதல், கும்மி, கோலாட்டம், நீந்துதல், தேகாப்பியாசம். சிறுவர்களாய் இருந்தால் அதிகமாய் அவர்களுக்கு தேகப்பயிற்சி சம்பந்தமான விளையாட்டுகள் கொடுக்கக்கூடாது. பெரிய மாணவர்களுக்குத் தேகப் பயிற்சி சம்பந்தமான கால் பந்து, ஹாககி (Hockey) கிரிகட் (Cricket) போன்ற விளையாட்டுகளை அதிகம் கொடுக்கலாம்.

2. மனோ விருத்திக்கான விளையாட்டுகள்.—ஐம்புலன்களை விருத்தி செய்யும் விளையாட்டுகள் அநேகம் இருக்கின்றன. கிம்ஸ விளையாட்டுகள் இப்பகுதியைச் சேர்ந்தவை. ஒரு நிமிஷம் கவனித்த, பல வகைகளாகச் சேர்க்கப்பட்ட 24 சாமான்களில் 16 சாமான்களையாவது சரியாகச் சொல்லுதல். ஞாபக சக்தி, ருசி, மோப்பம், கேட்குந்தன்மை, உற்றறிதல் இவைபோன்ற விருத்தி செய்யக் கூடிய விளையாட்டுகளை அவசியம் நாம் சொல்லித்தருதல்

வேண்டும். விளையாட்டில் தப்பிதம் செய்கிறவர்களை வெளியே தள்ளக் கூடாது. சிறு தண்டனை கொடுத்து (உ-ம். குட்டிககரணம் போடுதல், காலைத் தூக்கிக் கொண்டு ஒரு நிமிஷம் நிற்றல்) மறுபடியும் விளையாட அனுமதிக்கலாம்.

3. சமூக உணர்ச்சி விருத்திக்கான விளையாட்டுகள் :-போட்டிப் பந்தயங்கள், இதில் அதிகம் உபயோகிக்கவேண்டும். முடிச்சுப் போடுதல், சைகை செய்தல் முதலியவற்றில் போட்டிப் பந்தயங்கள் ஏற்படுத்தலாம். தோற்றவர்கள் ஜெயித்தவர்களைப் புகழ்ந்து பேசும் பழக்கத்தை ஏற்படுததவேண்டும். குடிமைப் பயிற்சி வகுபபில எல்லாம் விளையாட்டாகவோ, அல்லது எல்லாம் பயிற்சியாகவோ, இருக்கக்கூடாது. விளையாட்டு, பயிற்சி, கதை சொல்லுதல், பாடுதல், ஆடுதல் இவை மாறிமாறி வர வேண்டும். மாணவர்களின் வயதுக்கும் வகுப்பிற்கும் தக்கவாறு, விளையாட்டுகளைத் தெரிந்தெடுத்து நடத்த வேண்டும்.

சில விளையாட்டுகள்:—மாணவர்கள் ஒரு வட்டத்தில் நின்று கொள்ளவேண்டும். வட்டத்தின் நடுவில் கண்ணைக்கட்டி ஒருவனை நிறுத்தவேண்டும். வட்டத்தில் உள்ளவர்கள் சப்தம் செய்யாமல் நிற்கவேண்டும். வட்டத்திலிருந்து ஒருவன் மெதுவாக அடிமேல் அடி எடுத்து கண்கட்டி நிற்பவனை நோக்கி செல்லுதல் வேண்டும். நடந்துவரும் மாணவனை கண்கட்டி நிற்பவன் வரும் திசையை நோக்கி கையினால் சுட்டிக் காண்பித்தல் வேண்டும். வருபவனை சரியானபடி சுட்டிக்காண்பித்து விட்டால் காண்பிக்கப்பட்டவன் கண்ணைக் கட்டிக் கொண்டு வட்டத்தின் நடுவில் நின்று கொண்டு தன்னை நோக்கி வருபவனை சுட்டிக் காண்பிக்கவேண்டும். இம் மாதிரி விளையாட்டு தொடர்ந்து நடத்தப்படும்.

இயற்கை விளையாட்டு :—Nature game பாடியில் இருக்கும்போது இது விளையாடலாம். வகுப்பின் நான்கு ஸ்குவாடுகளையும் வரிசையாய் நிறுத்திவைக்க வேண்டும். ஆசிரியர் கதை ரூபமாக தான் செய்த பிரயாணத்தை விவரித்து கடைசியில் தான் சேர்ந்த இடத்தின்

பெயரை சொல்லுதல் வேண்டும். இடத்தின் பெயர் சொன்னவுடன் மாணவர்கள் எல்லோரும் ஓடிச்சென்று ஊர் பெயரின் முதல் எழுத்தில் துவக்கம் இலே, ஊர் பெயரில் உள்ள 2வது எழுத்து துவக்கும் இலே, 3வது எழுத்தில் துவக்கும் இலே இவற்றை சேகரித்து விசில் ஊதியவுடன் ஒவ்வொரு ஸ்குவாடும் தங்கள் தங்கள் இடத்தில் வந்து நின்று கொண்டு வந்த இலேகளை வரிசையாய் வைக்கவேண்டும். ஒவ்வொரு இலேயின் முதல் எழுத்தை சேர்த்தால ஊரின பெயர் கிடைக்கும்.

(உ-ம்) ராமநாது. இதில் முதல் எழுத்து ரா ராம சீதா இலேகொண்டு வரவேண்டும். 2வது எழுத்து ம இதற்கு மனே ரஞ்சித இலே கொண்டு வரவேண்டும். 3வது எழுத்து நா நாவல மரத்து இலேகொண்டுவர வேண்டும். கடைசி எழுத்து து; இதற்கு துளசி இலே கொண்டுவர வேண்டும். எந்த ஸ்குவாடு இவ்வித இலே களைக் கொண்டு வந்ததோ அதற்குத்தான் வெற்றி.

பாரச்சூட் விளையாட்டு:—ஆகாய விமானத்திற்கு ஆபத்து. அங்குள்ளவர்கள் பாரச்சூட்டில் இறங்குவதாகக் கற்பனை செய்து கொள்ளவேண்டும். ஒவ்வொரு ஸ்குவாடில் உள்ளவர்களுக்கும் ஒரு பலூனும், நூலும் கொடுக்கப்படும். விசில ஊதியவுடன் ஒவ்வொரு ஸ்குவாடில் உள்ளவர்களும் பலூனை எடுத்து ஊதி அதை நூலால் கட்டி இடுப்பில் கட்டிக்கொள்ளவேண்டும். பிறகு பறந்து வருவதுபோல் பாவனை செய்து ஓட வேண்டும். ஒவ்வொரு ஸ்குவாடிலும் எத்தனை பேரிடம் பலூன் வெடித்துப் போகாமலிருக்கிறதென்று பார்த்துப் புள்ளிகள் கொடுக்கலாம். அதே சமயத்தில் காற்றுல் நிரப்பிய பலூனைக்கட்ட (reef knot) எத்தனை பேர் போட்டிருக்கின்றுர்கள் என்று ப்ார்க்கவேண்டும்.

நடக்கும் உருவச் சிலே:—ஆசிரியர் நீண்ட சதுர நில பாகத்தின் மத்தியில் நிற்கவேண்டும். வகுப்பை 2 கட்சியினராகப் பிரித்து ஒவ்வொரு கட்சியின் சமதூரத்தில் ஒவ்வொரு பக்கத்தில் நிறுத்தவேண்டும். 2 கட்சிகளும் ஆசிரியரை நோக்கி செல்வதுதான் நோக்கமாய் இருத்தல் வேண்டும். ஆசிரியர் மறுபக்கம் பார்த்துக்கொண்டிருக்

கும்போது மாத்திரம் ஒரு கட்சி முன்செல்லலாம். ஆசிரியர் திரும்பிப் பார்த்தால அந்தப் பக்கத்தில் நிற்பவன் யாரும் அசையாமல் சிலைகள்போல் நிற்கவேண்டும். கொஞ்சம் அசைந்தாலும் ஆசிரியர் அப்பேர்வழியைக் குறிப்பிடுவார். அப்பையன் திரும்பவும் புறப்பட்டுச் சென்று அங்கிருந்து முன்னேற ஆரம்பிக்க வேண்டும். மாணவர்களில் யாராவது ஒருவன் இவ்விதம் மத்தியில் வந்து சேரும்வரையில் விளையாட்டு நடைபெறும். எந்தக் கட்சியை சேர்ந்தவன் முன்வந்து சேருகிறானோ அக்கட்சி வெற்றியடைந்தது எனலாம்.

ஜெய்ஹிந்த் or வணக்கம் :—மாணவர்கள் வட்டமாக கைகளை பின்புறம் கட்டிக்கொண்டு நிற்கவேண்டும். ஒரு மாணவன் வட்டத்திற்கு வெளியில் நின்று வட்டத்திற்கு வெளியே மாணவர்களைச் சுற்றி வேகமாய் நடக்க வேண்டும். சிறிது தூரம் நடந்தபின் ஏதேனும் ஒரு சிறுவனின் கையைத் தொடுகிறான். பிறகு திரும்பி தான் வந்த திசைக்கு மாறாக வட்டத்தைச் சுற்றி வருகிறான். தொடப்பட்ட சிறுவன் தன் தோழன் திரும்பிப் போவதற்கு எதிர்புறமாக நடந்துசென்று இருவரும் சந்திக்கும் இடத்தில் நின்று கைகூப்பி ஜெய்ஹிந்த் அல்லது வணக்கம் என்று சொல்லிவிட்டு இருவரும் நடந்துசென்று காலியாய் இருக்கும் இடத்திற்கு எந்தச் சிறுவன் முன் வருகின்றானோ அவன் வட்டத்தில் சேரலாம். மற்றவன் மறுபடியும் வட்டத்தைச் சுற்றி நடந்து வேறொருபையன் கையைத் தொடவேண்டும். இவ்விதம் விளையாட்டு தொடர்ந்து நடக்கும்.

குள்ளர்கள் இராக்ஷசர்கள் :—மாணவர்கள் வட்டமாய் நிற்கவேண்டும். ஆசிரியர் "இராக்ஷசர்கள்" என்றவுடன் மாணவர்கள் கால் கட்டைவிரல்களை ஊன்றி அண்ணார்ந்து நின்று கைகளை உயர்த்திப் பின்புறமாக நடக்கவேண்டும் "குள்ளர்கள்" என்றவுடன் மாணவர்கள் கால்களை கீழே ஊன்றி நாற்காலியில் உட்காாந்த மாதிரி முன்புறம் நடக்கவேண்டும். இது கால்களுக்கும் கைகளுக்கும் மற்றெல்லா அவையவங்களுக்கும் பயிற்சியைக் கொடுக்கின்றது.

சுத்தமும் சுகாதாரமும்

உடல் நலன் பொருந்திய வாலிபர்களே ஒரு தேசத்தின் சிறந்த செல்வம். ஆகவே சிறுவயதிலிருந்தே மாணவர்களை சுகாதார முறைகளில் பயிற்சித்தல் அவசியம். இந்தப் பொறுப்பு பெற்றோர்கள், ஆசிரியர்களுடையதாகும். பள்ளிக்கூடத்தில் "ஸிவிக்ஸ்" என்ற பாடம் போதிக்கும்போது சுகாதார சம்பந்தமான விஷயங்களில் நடைமுறையில் பயிற்சி கொடுக்கவேண்டும். மாணவர் பொறுத்த மட்டில் அவர்கள் கை, கால், நகங்கள், உடை முதலியவற்றை சுத்தமாய் வைத்துக்கொள்ளும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும். அவர்கள் தேகாரோக்ய நிலையைக் கவனித்துக்கொள்ள, வகுப்பறையில் ஒவ்வொரு மாணவனின் உடல் நிறை, உயரம் இவற்றைக் காண்பிக்கும் ஒரு "சார்ட்" தயாரித்துத் தொங்கவிடவேண்டும். மாணவர்கள் உடல் எடையை மாதத்திற்கு ஒருமுறையும், மாணவர்கள் உயரத்தை ஆறுமாதத்திற் கொருமுறையும் கணக்கிட்டு "சார்ட்டில்" குறிப்பிடவேண்டும்.

மாணவர்களிருக்கும் வகுப்பறை சூழ்விட சுத்தத்தைக் கவனித்துக்கொள்ள மற்றொரு "சார்ட்" தயாரித்துத் தொங்கவிடவேண்டும். அந்த "சார்ட்"ல் உட்காரும் பெஞ்சுகள், ஆசிரியர் மேஜை, நாற்காலி, கரும்பலகை, துடைதுணி முதலானவைகள் சுத்தமாயிருக்கின்றனவா என்று பார்த்து பதிவுசெய்ய வேண்டும். மாதத்திற்கு ஒருமுறையோ மூன்று மாதத்திற்கு ஒருமுறையோ இதில் அதிக தேர்ச்சி காண்பிக்கும் வகுப்பிற்கு பரிசுகள் வழங்கலாம். மற்றும் சமூக ஆரோக்கிய சம்பந்தமாய் மாணவர்கள் தங்கள் ஊரையும், தங்கள் ஊருக்குப் பக்கத்திலுள்ள கிராமங்களையும் சுகாதார முறைப்படி வைத்திருக்க, விடுமுறை நாட்களில் நாட்டு சேவை, கிராம சேவைகளில் ஈடுபடும்படிச் செய்து, மாணவர் ஒவ்வொருவரும் செய்த சேவையை தங்கள் கைப்புத்தகத்தில் குறித்து வைக்கும்படித் தூண்டலாம்.

சுகாதாரப் பத்து விதிகளின் அட்டவணை

பெயர் வகுப்பு வயது

	1 தி	2 செ	3 பு	4 வி	5 வெ	6 சனி	7 ஞா	8 தி	9 செ	10 பு	11 வி	12 வெ	13 சனி	14 ஞா	15 தி
1. இன்று நீராடினேன் ...															
2. சாப்பிடப் போகுமுன் பின் நன்றாய்க் கைஅலம்பினேன்...															
3. வாயையும் பற்களையும் நன்றாய்ச் சுத்தம் செய்தேன் ...															
4. பரந்த வெளியில் விளையாடினேன் ...															
5. பழங்கள், காய்கறிகள் நன்றாய் சமைத்த பதார்த்தங்களை மென்று சாப்பிட்டேன் ...															
6. இன்று மலங்கழிக்க கக்கூஸ் சென்றேன் ...															
7. போதிய அளவு பால் அருந்தினேன். போஜனத்திற்கு முன் பின் தண்ணீர் அருந்தினேன் ...															
8. பிறர் அறையிலிருக்கும் போது தும்மவும், இருமவும் இல்லை ...															
9. உட்காரும்போதும், நிற்கும்போதும் உடலைச் சரியான முறையில் வைத்திருந்தேன்...															
10. தரையிலும், சுவற்றிலும் நான் உமிழவில்லை. கைக்குட்டையை மூக்குத் துடைக்க உபயோகித்தேன் ...															

—விதியனுசரிக்கப்பட்டது

X விதியனுசரிக்கப்படவில்லை

இதுபோல் 31உ வரை, கட்டங்கள் போடவும்.

வகுப்பு மாணவரின் உடல் எடை, உயரம் காண்பிக்கும் அட்டவணை

வகுப்பு　　　　　பிரிவு　　　　　வருஷம்

மாணவர் பெயர்	உடல் எடை (பவுண்ட் கணக்கில்)												மாணவன் வயது	உயரம் அங்குலம்	ஷரா.
	ஜூன்	ஜூலை	ஆ	செ	அ	ந	டி	ஜ	பி	மா	ஏ	மே			
1															
2															
3															
4															
5															
6															
7															

மற்றும் குடிமைப் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கும் போது முதல் 10 நிமிஷத்தை "மாணவர்கள் சுத்தம்" பரிசீலனைக்குச் செலவழிக்கலாம். வகுப்பிலுள்ள ஒரு "ஸ்குவாடு"க்கு சுகாதார சம்பந்தமான வேலையைக் கொடுக்கலாம்.

நிகழ்ச்சி நிரல் தயாரித்தல்

குடிமைப் பயிற்சி வகுப்பை வெற்றிகரமாய் நடத்துவதற்கு, நாம் நடத்தப்போகும் கூட்டங்களின் நிகழ்ச்சியை முன்னுடியே முறைப்படி தயாரித்துக்கொள்ள வேண்டும். நிகழ்ச்சி நிரல் ஏற்கனவே தயார் செய்யாமல் குடிமைப் பயிற்சிக் கூட்டம் நடத்துவது பெருந் தவருகும். நடத்தப்போகும் வகுப்பிற்கு வேண்டிய கருவிகளையும், உபகரணங்களையும், ஆட்களையும் முன்னுடியே தயார் செய்ய வேண்டும்.

நிகழ்ச்சி நிரல் ஒரே மாதிரியாகத்தான் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. சிறுவர்களின் மனப்பான்மையையும், உற்சாகத்தையும் தெரிந்துகொண்டு, அதற்கேற்றவாறு அவ்வப்போது மாறுதல்கள் செய்து கொள்ளலாம். முழுவதும் பயிற்சிக்குரியதாகவோ அல்லது முழுவதும் விளையாட்டாகவோ இருப்பது தவறு. ஆகவே ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் விளையாட்டும், கதையும் பாட்டும், பயிற்சியும் கலந்து வருவதோடு, சிறுவர்களுக்கு உற்சாகம் கொடுக்கும்படி மாற்றி அமைக்க வேண்டும். முதல் பாரம், இரண்டாம் பாரம் மாணவர்களுக்கு அதிகமாய் விளையாட்டும், பாட்டும், கதை சொல்லுதலும் நிகழ்ச்சியில் இருக்கலாம். பெரிய வகுப்பு மாணவர்களுக்கு பயிற்சி கொஞ்சம் அதிகமாகவும், குடிமைப்பயிற்சியை விளையாட்டு முறையில் கற்றுக்கொடுக்க நிகழ்ச்சி நிரலில் வசதி ஏற்படுத்தவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக குடிமைப் பயிற்சி ஆசிரியர் தான், என்ன பயிற்சியை அந்த நாள் வகுப்பிற்குக் கொடுக்க வேண்டும் என்று தெரிந்திருப்பதோடு கூட, எவ்விதம்

அப்பயிற்சியைக் கொடுக்கலாம் என்ற முறையையும், தெரிந்திருத்தல் அவசியம். சாதாரணமாய் ஒரு நிகழ்ச்சியை 1½ மணி நேரம் நடத்தலாம். விசேஷித்த குடிமைப் பயிற்சிக் கூட்டம் இரண்டு மணி நேரம் நடத்தலாம்.

குடிமைப் பயிற்சி வகுப்பிற்கு மாதிரி நிகழ்ச்சி

முதல் இரண்டு பாரங்களுக்கு:—நேரம் 1½ மணி.

i. ஆரம்ப வேலை :—வகுப்பு அறை சுத்தம் செய்தல், நடைபாதை, மேஜை, நாற்காலிகள் சுத்தமாய் இருக்கின்றனவா என்று பார்த்துச் சுத்தப்படுத்துதல், மாணவர்கள் ஒவ்வொருவரும் சுத்தமாக இருக்கின்றார்களா என்று வகுப்புத் தலைவன் பார்த்தல் (தலைவாரிக் கொள்ளவும், முகம் கழுவிக் கொள்ளவும், சீப்பு, கண்ணாடி, சோப், துவாலை முதலியவை ஒரு இடத்தில் வைத்து, வேண்டியவர்களுக்குக் கொடுக்கவேண்டும்.)

(20 நிமிஷம்)

ii. Formal Gathering:—மாணவர்களை யெல்லாம் பரந்த வெளியில் கூடும்படிச் செய்தல் (வகுப்பு மாணவர்கள் Squad ஆக "ப" வடிவமாகவோ, அல்லது வேறு தகுந்த வடிவமாகவோ நிற்கவேண்டும். ஆசிரியர் பின் ஒவ்வொரு Squad ஐயும் பரிசீலனை செய்யவேண்டும் மாணவர்கள் தங்கள் உடை, நகம், கை, வாய், பல் முதலியவற்றைச் சுத்தமாய் வைத்திருக்கின்றார்களா என்று பார்க்கவேண்டும். இதன்பின் கொடியேற்றுதல் கொடி வணக்கம்–வழிபாடு–கொடி வணக்கப் பாட்டு (ஜண்டா உஞ்சா.)

(15 நிமிஷம்)

iii. Games and activities with Citizenship, emphasis:-(a) Games விளையாட்டுகள்:—குடிமைப் பயிற்சிக்கேற்ற விளையாட்டுகள்:—எல்லோரும் சேர்ந்து விளையாடும் விளையாட்டுகள். (உ-ம்) 1. வண்டித் தொடர்களும் குடைந்த வழிகளும், 2. "தலைவனைப் பார்த்து நட" (Do this & Do that) இதுபோன்ற விளையாட்டுகள் விளையாடலாம். 3. Sense Training Games. பல சமாச்சாரப் பத்திரிகைகளிலிருந்து வெட்டிய 12 (Advertisements) விளம்பரங்களைக் காண்

பித்தல், ஒரு நிமிஷம் பார்த்தபின், ஒவ்வொரு Squad ஐயும், பார்த்த விளம்பரங்களை வரிசையாய் எழுதும் படிச்செய்தல். (20 நிமிஷம்)

(b) குடிமைப் பயிற்சி சம்பந்தமான வேலைகள்:—பாடத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவற்றில் சிலவற்றை எடுத்து நடத்தலாம். (உ-ம்) தேசியக்கொடி—தேசியக் கொடியின் முக்கியம், வர்ணம், பறக்கவிடும் விதம், மரியாதை செலுத்துதல்—இரண்டொரு முடிச்சுகள் சொல்லிக் கொடுத்தல், முடிச்சுகளின் உபயோகங்கள் "Whipping", "Reef Knot". (30 நிமிஷம்)

iv. ஆசிரியரின் முடிவுரை:—மாணவர்களை யெல்லாம் ஒழுங்காய் நிற்கும்படிச் செய்தல்—புத்திமதிகள் சொல்லுதல் அல்லது உற்சாகப்படுத்துதல்—"ஜனகண மனயதி நாயக" என்ற தாகூரின் பாட்டைப் பாடுதல்—இதன் பின் டிஸ்மிஸ் உத்திரவு—டிஸ்மிஸ் என்றவுடன் மாணவர்கள் எல்லாம் சுறுசுறுப்புடன் வலதுகைப்புறம் திரும்பி கைதூக்கி வந்தனம் செய்து, எல்லோரும் ஒருமிக்க 'ஜெய் ஹிந்த்" என்று ஆரவாரித்து கலைந்து போக வேண்டும். (5 நிமிஷம்)

மாதிரி நிகழ்ச்சி

மூன்றும், நான்காம் பாரங்களுக்கு:—நேரம் 1½ மணி.

i. Preliminary Work—ஆரம்ப வேலை:— (20 நிமிஷம்)

வகுப்புத் தலைவன், வகுப்பறையைத் தன் தோழர்களின் உதவியால் சுத்தப்படுத்தல்—வகுப்பு மாணவர்களின் சுத்தத்தையும் கவனித்தல்.

ii. Formal Gathering—வகுப்பை அணிவகுத்து நிற்கச் செய்தல். (15 நிமிஷம்)

வகுப்புத் தலைவன் மாணவர்களை யெல்லாம் வரிசையாக நிறுத்தி, ஆசிரியர் வந்தவுடன் இரண்டடி முன் வந்து ஆசிரியருக்கு வந்தனம் செய்தல். ஆசிரியர் வகுப்பை வந்து சுற்றிப்பார்த்து எல்லாரும் சரியான முறைப்படி நிற்கின்றார்களாவென்றும், சுத்தமாகயிருக்கின்றார்களாவென்றும் பார்ப்பார். இதன்பின் கொடி

யேற்றி கொடி வணக்கம் — பிரார்த்தனை "ஜண்டா உஞ்சா" பாட்டு.

iii. Games and activities with Citizenship emphasis.

(a) விளையாட்டுகள் :— (20 நிமிஷம்)

உற்று நோக்கும் சக்தியை ஏற்படுத்தும் விளையாட்டு

(உ-ம்) (1) "Who has gone out of the Circle" போன்ற விளையாட்டு. (2) "எழுத்தெழுதும் ஓட்டம்" Alphalet Relay. (3) "தலையா, பூவா" என்ற விளையாட்டுகள். (4) "கிராம சுத்தம்" என்பதைப்பற்றி அபிநயப் பாட்டு.

(b) குடிமைப் பயிற்சி சம்பந்தமான பயிற்சி—Citizenship activities. (30 நிமிஷம்)

பாடத்திட்டப்படி — முதலில் தேசியக் கொடி— கொடியின் மாண்பு, அவசியம்—நம் தேசியக் கொடியின் பூர்வீக சரித்திரம் — தேசியக் கொடி யேற்பட, "சுதந் திரப் போர்" (Freedom Movement) காந்திஜி 25 வருடம் போராடல், அஹிம்சை முறை — கொடியின் வர்ணங் கள் — நம் கொடி உணர்த்தும் தத்துவங்கள் — கொடி யைச் சரிவரப் பறக்கவிடும் விதம்—கொடிக்கு செலுத்த வேண்டிய மரியாதை — கொடியேற்றும் ஒழுங்குகள— மற்ற தேசத்துக் கொடிகள்—யூனியன் ஜாக், U. S. A. கொடி, சீனு ரஷ்யா, பிரான்ஸ் இந்நாட்டின் கொடிகளை சுருக்கமாய்ச் சொல்லுதல்.

சைகை முறை-செமபோர் சைகை :—முதல் மூன்று வட்டங் களிலுள்ள எழுத்துக்களைக் கொண்டு வார்த்தைகள் அமைத்து அனுப்புதல். வார்த்தைகளை வாங்குதல்.

iv. முடிவுரை - Final Talk :— (5 நிமிஷம்)

ஆசிரியர் மாணவர்களை அணிவகுத்து நிற்கும்படிச் செய்தல்—சில புத்திமதிகள் கூறுதல்—கடவுள் வணக் கம்-Dismiss உத்திரவு-வந்தனத்துடன் "ஜெய் ஹிந்த்" என்று ஆரவாரித்துக் கலைதல்.

நண்பர் குழாம்

சூரியன் அஸ்தமித்ததும் இருள் படர்கின்றது. அந்நேரம் குளிர்ந்த நேரம். வீட்டிலுள்ள யாவரும் ஒன்று கூடிப் பேசுவதற்கும், பாடுவதற்கும், குதூகலிப்பதற்கும், அதுவே நேரம்.

ஒரு குடும்பத்தில் பிறந்த பிள்ளைகளைப்போல் எல்லா மாணவரும் "Friends in Council" இல் கூடி ஆடிப்பாடி ஆரவாரிக்க விரும்புகின்றனர் தங்களாலான மட்டும் பிறரை சந்தோஷப் படுத்தவேண்டும் என்பது. "Friends in Council" இன் முக்கிய நோக்கம், ஒவ்வொருவருடைய மனதிலுள்ள சோர்வு, வியாகூலம், கூச்சம், சலிப்பு, இவற்றைப் போக்கி மனதில் அடைப்பட்டிருக்கும் உணர்ச்சிப் பெருக்கை வெளிப்படுத்திவதற்கு சந்தர்ப்பத்தைக் கொடுக்கின்றது. இந்த Friends in Council என்பது சாரணர் நடத்தும் "Camp Fire" ஐப் போன்றது. இந்தச் சமயத்தில் கூட்டமாய்ச் சேர்ந்து தேசியப்பாடல்கள், நாடோடிப் பாடல்கள் பாடுதல், நாடோடிக்கூத்துகள், கதை சொல்லுதல் கதை நடித்தல், மிருகங்கள் பறவைகள் கரைதல, நடித்தல், ஊக்க ஒலிகளை ஒலித்தல், இதுபோல சந்தோஷ விளையாட்டுகளினால் எல்லோரையும் சந்தோஷப்படுத்தலாம். ஒவ்வொருவரும் இந்த "Friends in Council" நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் போது, ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவருக்குமுள்ள திறமை என்ன என்பதைப் பற்றியும், எந்தத் துறையில் அவன் ஊக்கம் கொண்டிருக்கிறான் என்றும் அறிந்து கொள்ளமுடியும் மற்றும் வெட்கப்படும் குழந்தைகளின் வெட்கத்தைப் போக்குவதற்கும், ஒவ்வொரு மாணவனிடம் அமிழ்ந்து கிடக்கும் திறமைகளை (Latent fuculties) வெளிப்படுத்துவதற்கும் இந்த Friends in Council என்ற கூட்டம், சந்தர்ப்பம் அளிக்கின்றது. இந்தக் கூட்டத்தை மாலையில் நடத்துவது நல்லது. மாணவர்கள் இராப் போஜனம் அருந்திய பின்போ அல்லது சிற்றுண்டி சாப்பிட்டபிறகோ இதை நடத்தலாம். இதில் ஆசிரியர்

களும், சிறுவர்களைப்போல நடித்தும் பாடியும் எல்லா விஷயத்திலும் பங்கெடுத்துக் கொள்வதைப் பார்க்கும் மாணவர்கள, தங்கள் ஆசிரியரை, தங்கள் மூத்த சகோதரன் என்று கருதி, அவரிடத்தில் அன்பும், விசுவாசமும் கொள்வார்கள்.

இந்த "Friends in Council"ல் பாடக்கூடிய சில நடோடிப் பாட்டுகள், தேசியப்பாட்டுகள் ஊக்க வொலிகள் முதலியவற்றை புத்தகத்தின் கடைசியில் காண்க.

குடிமைப் பயிற்சியின் நோக்கங்கள்

1. இதன் அடிப்படையான நோக்கம் "சேவை"

2. பிறருடன் கூடிவாழ்வதற்கான பயிற்சியை யேற்படுத்தல்.

3. தொழிலின் கௌரவத்தைக் புகட்டுதல்.

4. நல்ல பழக்கங்களை மாணவர்களிடத்தில் ஏற்படுத்துதல்.

5. பிரயோசனமுள்ள அயலார்களாய் இருப்பதற்கு மாணவர்களைப் பயிற்சித்தல்.

6. நல்லொழுக்க முறைகளைக் கற்பித்தல். "தலைமை ஸ்தானத்திற்கு" தகுதியுள்ளவர்களாக்குவதற்கு பயிற்சி கொடுத்தல்.

7. தேசத்தின் மட்டில் அன்பும், விசுவாசமும் காண்பிக்க பயிற்சி கொடுத்தல்.

8 கஷ்டகாலங்களிலும், நெருக்கடியான சந்தர்ப்பங்களிலும் சமயோசிதமாய்க் கஷ்டங்களைச் சமாளித்துக்கொள்ளப் பயிற்சித்தல்.

1. கடவுள் வணக்கம்

LEAD KINDLY LIGHT

Lead kindly light, amid the encircling gloom
Lead Thou me on.
The night is dark, and I am far from home
Lead Thou me on.

Keep Thou my feet, I do not ask to see
The distant scene one step enough for me.
I was not ever thus, nor prayed that Thou
Shouldst lead me on
I was not ever, nor pray'd that Thou
Shouldst lead me on.

I loved to choose and see my path, but now
Lead Thou me on.
I loved the garish day and spite of fears
Pride ruled my will; Remember not past years.

So long Thy power hath blest me, sure it still
Will lead me on.
O'er moor and Fen, o'er crag and torrent, till
The night is gone
And with the morn those angel faces smile
Which I have loved long since and lost a while.
—Cardinal Newman.)

ABIDE WITH ME

1. Abide with me, fast falls the eventide
The darkness deepens; Lord with me abide
When other helpers fail and comforts flee
Help of the helpless, oh abide with me!

2. Swift to its close ebbs out life's little day
Earth's joys grow dim, its glories pass away
Change and decay in all around I see
O Thou who changest not abide with me.

3. I fear no foe, with Thee at hand to bless
Ills have no weight and tears no bitterness
Where is Death's sting? Where Grave thy Victory?
I triumph still, if Thou abide with me.

4. Be Thou Thyself before my closing eyes,
Shine through the gloom and point me to the skies
Heaven's morning breaks and earth's vain
shadows flee
In life, in death, O lord Abide with me.

தாகூர் காலே வந்தனம்

(தமிழ் மொழி பெயர்ப்பு)

ஜனத்திரள் மனங்களின் தலைவா! ஜயஹே!!
பாரத பாக்கிய தாதா
பாஞ்சாலம் இந்து குஜராத்து மராட்டம்
திராவிடம் உட்கல் வங்காளம்
விந்தியம் ஹிமகிரி யமுனை கங்கை
இந்திய சமுத்திரம் நாதா
எல்லாம் நின் நாமம் பாடும், எல்லாம் நின்னாசியைத் தேடும்
எல்லாம் நின் பெருமையை போற்றும்
ஜனத்திரள் பாக்கிய தாதா ஜயஹே!
பாரத பாக்கிய தாதா
ஜயஹே! ஜயஹே!! ஜயஹே!!
ஜய! ஜய! ஜய! ஜயஹே!
பாரத பாக்கிய தாதா.

கவி தாகூரின் காலைத் துதி

ஜன கணமன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத்த மராட்டா
திராவிட உத்கல வங்க,
விந்த்ய ஹிமாசல யமுனா கங்க
உச்சல ஜலதித ரங்க
தவசுப நாமே ஜாஹே
தவசுப ஆசிஷ மாகே
காஹே தவஜய காதா
ஜனகண மங்கல தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே! ஜயஹே! ஜயஹே!
ஜய ஜய ஜய ஜயஹே!
(கவி. ரவீந்திரநாத் தாகூர்)

கடவுள் துதி

(சிவசண்முக வேலனே—மெட்டு)

திருத்துவ தேவனைப் போற்றுவோம்
தினமும் அவர்புகழ் சாற்றுவோம்.
கருத்துடனே நல்ல கல்வியை
கற்றிட வேண்டினோம் புத்தியை.

பண்புடன் பாலர்கள் கூடியே
பக்தியாய்க் கீதங்கள் பாடியே.
உத்தம சன்மார்க்கம் நாடியே
ஓதுவோம் கலைகளைத் தேடியே. (திருத்துவ)

ஆசிரியர் மாணவர் நலம்பெற
அனைவரும் நாளும் செழிப்புற.
சாதனையால் நறுமண மூற
சர்வேஸ் பரனருள் சொரிந்திட.
(திருத்துவதேவனே)

2. கொடிப் பாட்டு

ஜண்டா

ஜண்டா உஞ்சா ரஹே ஹமாரா
விஜயி விச்வதி ரங்கா ப்யாரா
சதா சுக்தி பர் சானே வாலா
ப்ரேம் சுதா சர் சானே வாலா
வீரோம்கோ ஹர் ஷானே வாலா
மாத்ரு பூமிக்கா தன் மன் ஸாரா. (ஜண்டா)

கொடி வணக்கம்

வணங்குவோம் நம் தேசியக் கொடியை
இணங்கு மூவர்ணம் தீட்டிய கொடியை
இன்ப சக்திதனை ஈந்திடும் கொடியை
அன்பினை பொழிந்திடும் அமிர்தநற் கொடியை
வீரர்களின் உயிர் விளங்கிடும் கொடியை
பாரதத்தாயவள் உருவாம் நம் கொடியை
(வணங்கிடு)

3. தேசியப் பாடல்கள்

வழிநடைப் பாட்டு

1. வெற்றி வெற்றி வெற்றியென்று
வீரராக முன் செல்வோம்,
ஒற்றுமையும், உண்மை யன்பும்
ஓங்கி நீடு வாழுவோம்.

2. பூரணன் மலரடியைப்
போற்றுவோம் புனிதராய்,
பார் முழுதும் கோயிலாகப்
பார்த்துத் தொண்டு செய்குவோம்.

3. ஏகமாக வுள்ள மொன்றி
இன்பமான தோழர்காள்,
வேகமாகக் கால்கள் வீசி
வீசி வீசி முன் செல்வோம்.

4. வைய மெல்லாம் சாந்தமாக
வாழத் துன்பம் தாழவே
தெய்வ பக்தி, ராஜ பக்தி,
தேச பக்தி செய்குவோம்.

5. பொய்யடிமை வஞ்சகம்
பொருமை நோயைப் போக்குவோம்
மெய்யறிவும் தூய தொண்டும்
வேத வாழ்வும் போற்றுவோம்.

6. தோளுயர்த்தித் தலை நிமிர்ந்து
சொல்லும் செயலும் ஒன்றியே,
நாளும் கல்வி செல்வமோங்கி
நாடு வாழ முன்செல்வோம்.

7. புது நலத்தை முது நலத்தை
போற்றி நல்ல தீரராய்
பொதுநலப் புகழ் சிறந்து
பூரணராய் வாழுவோம்.

8. எத்திசையும் கீர்த்தி யோங்கி
எங்கள் அன்னை வாழவே
சக்தி பெற்ற வீரராகத்
தாவித் தாவி முன் செல்வோம்.

(யோகி சுத்தானந்த பாரதி)

நடைவழிப் பாட்டு

ஜென்ம பூமியாகும் எங்கள் இந்துதேசமே
அதில் தேங்கொழுத் தொழுதலோக செல்வவாசமே.
சந்த்ர சூர்ய வம்சம் ஆண்ட தெங்களிந்தியா
சதுர் வேதமோதி யாகம்செய்த தெங்களிந்தியா.
இமகிரி மலைத்தொடரும் எங்கள் இந்தியா
குமரியின் அடிக்கடலும் எங்களிந்தியா.
சீதையென்கிற பெண் பிறந்த தெங்களிந்தியா
அவள் ஸ்ரீதரன்மேல் இச்சைகொண்ட தெங்களிந்தியா.
பாண்டவர் வனம்புகுந்த தெங்கள் இந்தியா
பத்னியான த்ரௌபதையும் எங்களிந்தியா.
கண்ணன் வேணுகான மிட்ட தெங்களிந்தியா
அவர் வாய்மலர்ந்து கீதையோதும் எங்களிந்தியா.

இராக்ஷச குலமறுத்த தெங்களிந்தியா
ரகு நாயகன் பதப்வணங்கும் எங்களிந்தியா.
சத்தியம் ஜெனித்து நின்ற தெங்களிந்தியா
தவ யோகமுறை யாகம்செய்த தெங்களிந்தியா.

அக்பராதி மன்னராண்ட தெங்களிந்தியா
அவர் அன்புகொண்டு ஆட்சிசெய்த தெங்களிந்தியா.
இந்து முஸ்லீம் சோதரரும் எங்களிந்தியா
இச்சை கொண்டு நேசம்செய்வ தெங்களிந்தியா.

(சுப்பிரமணிய பாரதியார்)

செந்தமிழ் நாடு

(பூமியில் மானிட ஜென்மம் அடைந்துமோர்—மெட்டு)

செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுதெங் காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே.

காவேரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டவோர் வைகை பொருனை நதி—என
மேவிய ஆறுபல வோடத்—திரு
மேனி செழித்த தமிழ்நாடு.

நீலத்திரை கடலோரத்திலே—நின்று
நித்தம் தவம்செய் குமரியெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதிகார மென்றோர்—மணி
பாரம் படைத்த தமிழ்நாடு.

கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின்—மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு.

வாழிய செந்தமிழ்

வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித் திருநாடு
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க
நன்மை வந்தெய்துக தீதெல்லாம் நலிக

அறம் வளர்ந்திடுக மறம்மடி உறுக
பாரத நாட்டினர் ஆண்மையோடியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்து மிக்கோங்குக
நந்தேயத்தினர் நாடொறும் உயர்க
வந்தேமாதரம், வந்தேமாதரம்
வந்தேமாதரம், வந்தேமாதரம்.

தேசியக் கொடி

ஜெய், ஜெய், ஜெய், ஜைய, ஜைய, ஜைய, ஜைய
பாரத தேவியின் மணிக்கொடி பாரீர்
பக்தியுடன் இதை வணங்குவோம் வாரீர்.

1. வீரர்கள் உடல்பொருள் ஆவியும் கொடுத்து
தீரமாய் அடிசிறை அனைத்தையும் பொருத்து
சீராய் நம் பாரத தேவிக்கே உழைத்து
திகழ்வதைக் குறித்திடும் ஜெயக்கொடி பாரீர்! (பாரத)

2. பல்வள உளதெனக் குறித்திடும் பச்சை
பரிசுத்த தியாகத்தைக் காட்டிடும் வெண்மை
நலமுடன் பக்தியை ஊட்டும் காவி
நடுநிலைப் பண்பை விளக்கிடும் சக்கரம் (பாரத)

3. உள்ளத்தில் பசுமையும் தூய்மையும் வேண்டும்
உறுதியாய் இறைவனை வணங்கிடல் வேண்டும்
உள்ளவர் இல்லவர் என்ற நிலைநீங்கி
ஒற்றுமை நீதியோடு உயர்ந்திட வேண்டும் (பாரத)

4. வானத்தில் ஓங்கி வளம்பெற வீசி
மாண்புடன் நாடி வளர்ந்து குலுங்கி
ஆனந்தமாகப் பறந்திடும் நம் தம்
தாயின் மணிக்கொடி வாழிய வென்றே (பாரத)

நல்லொழுக்கப் பாட்டு

(உன்னையே நீ எண்ணிப்பாரு என்ற மெட்டு)

1. காலமே கர்த்தனைத் தேடு—ஜீவ
காருண்யர் பாதம் பணிந்து மன்றாடு
உன்னைப்போல் பிறரையும் நேசி—தினம்
பொன்னேமதியுள்ள நூல்களை வாசி.

2. உன்னை நீ புகழ்ந்து கொள்ளாதே—பிறர்
நன்னயப் புகழ்ச்சியை நம்பித் துள்ளாதே
இஷ்டமாய் நல்லோரைக் கூடு—பொல்லா
துஷ்டரைக் கண்டால் நீ தூரத்திலோடு.

3. பிச்சையிடாமல் உண்ணாதே—மிருகம்
பட்சிக்குமே துன்பம் பண்ண வொண்ணாதே
எளியோரை என்றும் திட்டாதே—தினம்
ஆலைக் கரும்புபோல் அவரை வாட்டாதே.

4. பூச்சியைப் பிடித்துக் கொல்லாதே—உந்தன்
ஆச்சி சொன்னாலும் நீ அபத்தம் சொல்லாதே
கள்வர் கைப்பொருளை வாங்காதே—வாங்கும்
உளவரில்லா விட்டால் களவேது பாரே.

5. கற்றவற்றை என்றும் மறக்காதே—எம்
அறிவுக்கு அடிப்படை யாகிய வித்தே
மெய் சொல்ல மேன்மையுண்டாமே—தினம்
பொய் சொல்லும் வாய்க்குப் புசிப்பற்றுப் போமே.

சுகாதாரப் பாட்டு

(கைராட்டினமே என்ற மெட்டு)

நமக்கே சுகமே தரும்பார் நலமே
நானிலத்திலே மிகுந்த நோயை ஒழிப்போம்—இனி
நாமதற்குத்தான் கவனத்தை செலுத்துவோம்
துயரே விலக்குவோம் (நமக்கே)

அம்மை காலராக்களா லதிகத் தொல்லையே—அது
நம்மையே கொல்லாமே விடுப்பதில்லையே
இது பெருந்தொல்லையே கேட்பீரெம் சொல்லையே (நம)

வீட்டினிலே கூட்டிய குப்பையை பாருமே—அதில்
தாட்டிகமாய் ஈக்களே வந்து உட்காருமே
நோய்களைத் தருமே, ஈக்களைக் கொல்லுமே (நமக்கே)

நாட்டினிலே சிரேஷ்டமான நாகரீகமே—இதை
கேட்டு மேவும் வீட்டை சுத்தமாகப் பாருமே
அதுவே சுகிர்தமே, இதுவே தரும் பார்நலமே (நமக்கே)

சுகாதாரக் கும்மி

1. நித்தம் குளிப்பதால் நீங்கும் அழுக்கெல்லாம்
சுத்தமுடன் மேனிபெற்று வாழ
பசுமைப் பள்ளங்கள் உச்சி சிகரங்கள்
பறக்கும் பட்சிபோல் ஆனந்திப்போம்.

2. காலை மாலை தோறும் சுத்தம்செய் பற்களை
பாங்குடன் நல் சிறு குச்சிகொண்டே
பால் நிறங்கொண்டு ஜொலித்திடுமே யது
திட்டி நித்தம் துலக்குவதால்.

3. நல்ல சிநேகிதர்போல உன் பற்கள்
பலமாய் ஒன்றித் திருப்பதைப் பார்
இவ்வித நண்பர்கள் கண்டதுண்டோ நீ
இன்பமுடன் சேர்ந்திருப்பது போல்.

4. சின்னஞ் சிறு நகங்களையே தரித்து
சித்திரம்போல் சுத்தம் செய்து பார்த்தால்
மெத்தப் பிரியமான காரியம் இதுவிடவே
எத் தினமும் சுத்தம் செய்திடவே.

5. பூனைக் குரங்குகள் அல்லவே நீநினை
நீண்ட நகங்கள் தரித்துக்கொள்ள
நீயதை நித்தம் சுத்தி செய்திடாவிடில்
தீங்கு விளைவிக்கும் நஞ்சமாகும்.

6. வாயைச் சுத்தம்செய்து கைகால் கழுவியே
சாப்பிடுவாய் எந்த நேரத்திலும்
பூச்சிகள் சென்றிடும் அவ்விதி தப்பினால்
தூசி அழுக்கு இவற்றின் மூலம்.

7. பழுத்த பழங்கள் காய்ச்சிய பாலுமே
பக்குவமான அமுதமாகும்
பத்திரப்படுத்தி ஈக்கள் அணுகாமல்
பக்தியுடன் நித்தம் சாப்பிடுவாய்.

8. பல தினுசான மிட்டாய் வகைகளாம்
பலர்க்கும் சோதனையா யிருக்கும்
பக்குவமாய் மூடி தூசி சேராமலே
தக்க விதம் பாதுகாக்க வேண்டும்.

4. நாட்டுப் பாட்டுகள்

படகோட்டி பாட்டு

(கட்டை.பொம்மை — மெட்டு)

1. ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே
ஆகாயச் சந்திரனும் சொந்தமே
ஊனமில்லாத பிரகாசமே
ஓடும்நம் தோணிக் கனுகூலமே.

2. உற்சாகமாகப் போடும் துடுப்பு
உற்பவமே இதுவோர் படிப்பு
விற்பனமாக கையிற் பிடிப்பு
விருத்திபெறவே நல்ல நடிப்பு.

3. பன்னீரு போலவே தண்ணீரு
பசுந்தா யிருப்பதை நீபாரு
உன்ன தமான இடத்தேறு
ஊரில் புகழும் பெரியாறு.

4. ஆதிக் கடவுளின் தன்மகிமை
அன்புடன் காணவும் புதுமை
நீதி யறிந்தவர் தம்பெருமை
நேர்மை யுறைத்திடவே யருமை.

5. ஜீவகாருண்யப் பரனாலே
ஜீவிக்கத் தந்த பொருளாலே
நாவுக்கினியது நீராலே
நாமுண்டு வாழ்வோ மருளாலே.

கிராம சேவை

(வழிநடைப் பாட்டு மெட்டு)

தேசத்தொண்டர் செல்வோம் கிராம
சேவை செய்யவே
வீசுந்துடைப்பம் கூடையுடன் மண்
வெட்டி யேந்தியே

எங்கள் நாடு எண்ணில்லாத
கிராமம் சூழ்ந் ததே
எங்கள் கிராமம் திருத்தமாயின்
கவலை வீழ்ந்ததே

வீட்டைச்சுற்றி சந்தி கிணறு
வீதிவழி யெல்லாம்
நாட்டமாகக் குப்பை கூளம்
கூட்டி வாருவோம்.

கூட்டி வாரும் குப்பைகூளம்
கொண்டு கொளுத் துவோம்
கூட்டம் கூட்டி அறிவையூட்டி
கிராமம் திருத்துவோம்

கிராம சேவை போலசிறந்த
சேவை இல்லையே
கிராமம் வாழ நாடும்வாழும்
கீர்த்தி சூழுமே!

ஆடு கண்ணே!

("ஆடு பாம்பே" என்ற மெட்டு)

ஆடுகண்ணே நீ ஆடுகண்ணே!
அன்பின் வடிவாய் நின்று ஆடுகண்ணே!
நாடுசெழித்திட நல்லறம் ஓங்கிட
நான் தொண்டு புரிவேனென் ஓடுகண்ணே (ஆடு)

ஆதித்தன் செய்நன்றி அறியாயோ?
ஆண்டவன் செய்நன்றி அறியாயோ?
நீதிநெறி நின்று ஆட்டுகின்ற
நித்யமான சக்தியின் கட்டளையென்றே (ஆடு)

1. நம்பிக்கை வழிநின்று ஆடுகண்ணே!
2. விசுவாசத்துடன் நீ ஆடுகண்ணே!
3. பிறர்க்குதவிசெய்து நீ ஆடுகண்ணே!
4. சோதர பாவத்துடன் ஆடுகண்ணே!
5. வினய புத்தியுடன் ஆடுகண்ணே!
6. அன்பின் துறையில் நின்றாடுகண்ணே!
7. ஒழுக்கம் நிறைந்திட ஆடுகண்ணே!
8. கனிந்த களிப்புடன் ஆடுகண்ணே!
9. வீரர் சுவடுபற்றி ஆடுகண்ணே!
10. திரிகரண சுத்தனாய் நீ ஆடுகண்ணே! (அ. ஸ்ரீ.)

பாலர் பஜனை

டமர டமர டங்கரடம்
டமர டமர டிங்கரடும்
டமர டமர டங்கரடம்
டமர டமர டிங்கரடும் (டமர)

சாமி பூஜை நடக்குதே
சங்கு நாதம் முழங்குதே
பூ...ம் பூ...ம் பூ...ம் பூ...ம்
பூ...ம் பூ...ம் பூ...ம் பூ...ம் (டமர)

தாள சத்தம் கேட்குதே
தம்பி யேநீ பாடுவாய்
ஜல்லர ஜல்லர ஜல்லர ஜல்
ஜல்லர ஜல்லர ஜல்லர ஜல் (டமர)

பக்தரின் பஜனை போகுதே
மத்தள சப்தம் கேட்குதே
தமுக்கு தமுக்கு தமுக்கு தம்
திமுக்கு திமுக்கு திமுக்கு திம் (டமர)

மிருகங்களின் நடை

(டோமோ பாட்டின் மெட்டு)

குளத்தோரம் கூடிவரும் குமிழ்ந்து நீரை ஆடிவரும்
குவாக் குவாக் கெனவே கூவும் குள்ள
வாத்துக் கோழியாமே—அந்த
வாத்து நடைபோல் நடக்கலாமே

தண்ணீரில் நீந்திவரும் தரையைக் கண்டால் தாண்டி வரும்
தத்தியே நடந்துபோகும், தவளையையே பார்த்திருக்கலாமே
அந்தத் தவளை நடைபோல நடக்கலாமே.

கூச்சலைக் கேட்டவுடன் கூசாமலே ஓடிடுமாம்
குறுகியே பதுங்கி முயல் குதித்தெழுந்து போகும்
முயல் குதிக்கும் நடைபோல் நடக்கலாமே. [பார்க்கலாமே

அறுவடைக் கூத்து

("பச்சைமலை பவழமலை" என்ற மெட்டு)

1. நாலு காணி நெல்லையெல்லாம்
நல்ல வேளையில் அறுத்தோம்
கால் நிமிஷமும் கழியாமலே
களத்தில் கொண்டு சேர்த்தோம்.

2. காலை முதல் மாலைவரை
நெல் லறுத்த தாலே
கையுங் காலுங்களைத்துப் போச்சு
உடம்பு முழுதும் நோவுது.

3. நெற்றிமுதல் நகம் வரையில்
வியர்வை நதி போலவே
ஓடிடவே நில முழுதும்
சேர் குழம்பி போச்சுது.

4. அறுத்த நெல்லை அழகாக
பில்லைக் கொண்டு கட்டி
சுமைசுமையாய்ச் சுமந்து சென்று
சீக்கிரம் களம் சேர்ப்போமே.

5. கர்தைகட்டிய நெல்லை யெடுத்து
ஓங்கிக் களத்திலடிப் போமே
மறுபடியும் ஒருதடவை மாறி
ஓங்கி யடிப்போமே.

6. முறத்தில் நெல்லைவாரி யெடுத்து
மண்ணையுந் தூசியும் களைந்திட
மேலே தூக்கி முறத்துநெல்லை
முத்தத்திலே தூத்துவோம்.

7. தூத்திய நெல்லை பாயில்பரப்பி
வெய் யிலில் உலர்த்தியே
காலில் நெல்லை சமமாகப்
பாயினிலே பரப்பு வோம்.

8. உலர்ந்த நெல்லை உரலில்போட்டு
உலக்கை கொண்டு குத்தியே
புடைத் திடுவோம் முறத்தினாலே
உமியும் மண்ணு மகன்றிட.

9. குத்திய நெல்லைக் கண்ணில்காண
களிப்பும் பொங்குது பாருங்கோ
நறுமணமுள்ள சம்பா இது
நம்முடலை யுறுதி செய்யுமே.

10. நாமெல் லோரும் ஒன்றுகூடி
நிலவில் பொங்கல் செய்வோம்
நயந்து கலந்து களித்துமே
ஆடிக் களைப்பை யொழிப்போமே. (சி. ரா. வே.)

படகு ஓட்டல்

(ஆதிபரா பரமான தோன்றும் — என்ற மெட்டு)

தங்கையே தங்கம்மா என்படகு — ஐலசா
தங்குமே தண்ணீரில் என்படகு — ஐலசா
தம்பியே தங்கப்பா என்படகு — ஐலசா
தாவுமாம் தண்ணீரில் என்படகு — ஐலசா
தேக்கு மரத்தாலே என்படகை — ஐலசா
தேர்ந்தவன் செய்தானே என்படகை — ஐலசா
ஆற்றின்மேல் விட்டாலோ என்படகை — ஐலசா
காற்றினால் காதம் நடந்திடுமே — ஐலசா
தூரமாய் ஓடாதே திரும்புதம்பி — ஐலசா
ஓரமாய் ஓட்டியே நிறுத்துதம்பி — ஐலசா
மண்ணை நம்பி ஏலேலோ மரமிருக்க — ஐலசா
மரத்தைநம்பி ஏலேலோ கிளையிருக்க — ஐலசா

கிளையைநம்பி ஏலேலோ கோலிருக்க — ஐலசா
கோலைநம்பி ஏலேலோ இலையிருக்க — ஐலசா
இலையைநம்பி ஏலேலோ பூவிருக்க — ஐலசா
பூவைநம்பி ஏலேலோ பிஞ்சிருக்க — ஐலசா
பிஞ்சைநம்பி ஏலேலோ காயிருக்க — ஐலசா
காயைநம்பி ஏலேலோ பழமிருக்க — ஐலசா
பழத்தைநம்பி ஏலேலோ நீயிருக்க — ஐலசா
உன்னைநம்பி ஏலேலோ நானிருக்க — ஐலசா.

5. ஊக்கவொலிகள்

எங்களுடைமை

ஆசிரியர் : வேத கீதமும்
மாணவர் : எங்களுடைமை.
ஆ : புத்த மார்க்கமும்
மா : எங்களுடைமை.
ஆ : நபியின் மார்க்கமும்
மா : எங்களுடைமை.
ஆ : யேசுவின் மதமும்
மா : எங்களுடைமை.

நாமிருக்கும் நாடு நம்முடையது

ஆசிரியர் : நாமிருக்கும் நாடு
மாணவர் : நம்முடையது.
ஆ : நமக்குரியதாம் இது
மா : என்பதறிந்தோம்.
ஆ : எவர்க்குமிந்த பூமியில் நாம்
மா : இளைக்க மாட்டோம்.
ஆ : தாய் நாட்டிற்கே யடிமை
மா : செய்து வாழ்வோம்.
ஆ : பாரத மாதா
மா : வாழ்க ! } மூன்று தடவை

செல்வம் நிறைந்தது

ஆசிரியர் : செல்வம் நிறைந்தது
மாணவர் : பாரத நாடு.

ஆ:	வீரம் செறிந்தது
மா:	ஹிந்துஸ்தான்.
ஆ:	கொடையில் சிறந்தது
மா:	இந்திய நாடு.
ஆ:	கல்வியில் சிறந்தது
மா:	இந்திய நாடு
ஆ:	உலகில் சிறந்தது
மா:	எம் தாய் நாடு.
ஆ:	பாரத மாதா } மூன்று தடவை
மா:	வாழ்க!

தவளைகள் சத்தம் (Frog Parliament)

1. வற வற பத்—(கோமுட்டி)
2. வித்தெடு விதையெடு (குடியானவன்)
3. எடைக் கெடை (வியாபாரி)
4. தண்டெடு தடியடி (கடன் கொடுத்தவன்)
5. பெப் பெப் பெப் பெப் (கடன்காரன்)

பையன்களை 5 பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவும் ஒரு அடியை திரும்பத் திரும்ப சொல்லவும். எல்லாரும் ஏகோபித்துச் சொல்லும்போது தவளைகள் கத்துவது போலிருக்கும்.

இல்லை

ஆ:	ஜாதிபேதம்	மா:	எமக்கில்லை
ஆ:	சமயபேதம்	மா:	,,
ஆ:	உயர்வு தாழ்வு	மா:	,,
ஆ:	உடைமையின்மை	மா:	,,
ஆ:	கோழைத்தனம்	மா:	,,
ஆ:	குற்றமனமு	மா:	,,

உண்டு

ஆ:	தேசபக்தி	மா:	எமக்குண்டு
ஆ:	தீரவீரம்	மா:	,,
ஆ:	நேசத்தன்மை	மா:	,,
ஆ:	நீதிநெறியும்	மா:	,,
ஆ:	சோதரப்பாவம்	மா:	,,
ஆ:	சுத்தமனமும்	மா:	,,

வாழ்க பாரதமாதா

1. இமயகிரீடம் இலங்க
விந்தியமலை விளங்க
குமரிசிலம்பு குலுங்க
ஒலிகடல் ஆடைதுலங்க
வாழ்க பாரதமாதா

2. சிந்து கங்கை கோதாவரி காவேரி
ஆதிமாலைகள் ஆட
மந்த மாருதம் வந்துநின் காந்தரின்
மேல்தவிந்தே விளையாட
ஹிந்து சீக்கியர் முஸ்லீம் பார்ஸியர்
கிறிஸ்துவரே தொளிகூற
பந்தம் போக்கிய பாரத தேவியின்
வந்தேமாதரம் பாட
வாழ்க பாரதமாதா.

3. சத்திய பாதையில் நின்று
காந்தி மகானின் பின்சென்று
சுத்த அரும் கையால்வென்று
சுதந்திரக் கோயிலை அடைந்தாய்
வாழ்க பாரதமாதா.

4. பாழும் நோய்துயர் பஞ்சங்கள் யாவையும்
பகலவன் முன் பனியாக
சூழும் நாற்பது கோடிமக்கள் சுக
வாழ்வினராக வே வை
ஆழிதாங்கிய மூவர்ணக் கொடியினல்
அறம்நிலை நாட்டவே நிமிர்ந்தாய்
வேழம்தாங்கிய சீரிய அணையின்மேல்
ஆசிய ராணியாய் அமர்ந்தாய்
வாழ்க பாரதமாதா
வாழ்க பாரதமாதா
வாழ்க பாரதமாதா

சிட்டி அச்சகம், மதுரை ரோடு, திருச்சிராப்பள்ளி.

86955

REGISTRAR OF BOOKS
16 OCT 1948
MADRAS

Copies can be had from :

A. D. M. PRAKASAM, B. A., L. T.,
ST. JOSEPH's COLLEGE,
TIRUCHIRAPALLI.

PRINTED AT THE CITY PRESS, TIRUCHIRAPALLI.